விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

# வலம்புரி

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com
Valampurii

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 புரட்டாதி 24 ஞாயிற்றுக்கிழமை (11.10.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 296

உலகெங்குமுள்ள உறவு களுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப
நாட வேண்டிய ஒரே இடம்
ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392
(C-2433)

# விடுதலைப்புலிகள் 7 நாடுகளில் தஞ்சம்

## சிங்கள ஊடகம் செய்தி வெளியீடு

(கொழும்பு)

போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்ட தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு ஏழு நாடுகள் தஞ்சமளித்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இலங்கையில் போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்ட சுமார் 200 தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு இவ்வாறு சில நாடுகள் அரசியல் தஞ்சம் வழங்கியுள்ளன.

15 பக்கம் பார்க்க....

### கிளிநொச்சிப் பகுதியில் 258 கைக்குண்டுகள் மீட்பு

(மல்லாவி)

ஜனாதிபதியால் கடந்த வாரம் கையளிக்கப்பட்ட கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் கிராமப் பகுதியிலுள்ள காணியொன்றிலிருந்து 258 கைக் குண்டுகளும் 22 பரா ரக குண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன.

15 பக்கம் பார்க்க....

### இந்.மீனவர்களுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நாகபட்டினத்தை சேர்ந்த 19 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 23ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக

15 பக்கம் பார்க்க....

### அமெ.வழங்கியது; இந்தியா ஆதரவு!

(கொழும்பு)

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவை தொடர்ந்தும் அரசியல் நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதாக குற்றம்சாட்டியுள்ள அமைச்சர் மகிந்த சமரசிங்க உள்நாட்டு யுத்தத்தின இறுதி தருணங்களில் 40ஆயிரத்

15 பக்கம் பார்க்க....

### விசாரணை அறிக்கை நாளை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

காலி. கடற்பரப்பில் நங்கூரமிடப்பட்டிருந்த அவன்ற் கார்ட் மிதக்கும் ஆயுதக் களஞ்சியசாலையின் விசாரணை அறிக்கையை, நாளை திங்கட்கிழமை பாதுகாப்பு அமைச்சிடம் கையளிக்கவுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

இந்த விசாரணைகளுக்கான

15 பக்கம் பார்க்க....

### கள்ளத் தொடர்பு, காணிப் பிரச்சினை குற்றவாளிகளுக்கே மரணதண்டனை

## ஆய்வொன்றில் தகவல்

(கொழும்பு)

மரண தண்டனைக் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பெரும்பாலானவர்கள் கள்ளத்தொடர்பு மற்றும் காணிப் பிரச்சினை காரணமாகவே மரணதண்டனையை எதிர்நோக்கியிருப்பதாக ஆய்வொன்று தெரிவிக்கின்றது.

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் உதய குமார அமரசிங்க தலைமையிலான குழுவினர் இலங்கையில் மரணதண்டனை விதிக்கப்பட்ட

15 பக்கம் பார்க்க....

### தேசிய விசாரணைப் பொறிமுறை இம்மாத இறுதியில் ஆரம்பம்!

(கொழும்பு)

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவான தேசிய விசாரணைப்பொறிமுறையை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

பாதுகாப்பு, நீதிமன்றம் மற்றும் அரசியலமைப்பு நடவடிக்கைகள் சம்பந்தமான நிபுணத்துவத்தை கொண்டிருக்கும் நபர்களை கொண்ட விசேட குழுவொன்றும் நியமிக்கப்பட உள்ளது. இந்த குழுவிடம் இருந்து தேசிய விசாரணை பொறிமுறைக்கான ஆலோசனைகள் பெறப்பட உள்ளது.

வெளிநாட்டு தொழில்நுட்ப உதவியை எந்த துறைக்கு பெற்றுக்கொள்வது என்பது குறித்து ஆராயப்படும்.

15 பக்கம் பார்க்க....

### வீரவன்ஸ,கம்மன்பில இருவரையும் ஐ.ம.சு முன்னணியிலிருந்து நீக்குக!

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து தேசிய சுதந்திர முன்னணி மற்றும் பிவிதுரு ஹெல உறுமய ஆகிய கட்சிகளை நீக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

இந்த கட்சியை சேர்ந்தவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் இருந்து கொண்டு முன்னணிக்கு எதிராக செயற்படுவதாக பிரதிய மைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஊடகங்களுக்கு கருத்த

15 பக்கம் பார்க்க....

### இலங்கைக்கு ஒபாமா நிர்வாகம் அழுத்தம் கொடுக்க வேண்டும்!

## சர்வதேச ஊடகம் கோரிக்கை

(நியூயோர்க்)


இலங்கையில் உள்நாட்டுப் போர் ஆரம்பித்ததில் இருந்து மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டோரை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்குவதில் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது.

எனவே. இலங்கையில் மறுசீரமைப்பு மற்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ள அர்த்தமுள்ள நீதிச் செயற்பாடுகளை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கு சர்வதேச சமூகம் குறிப்பாக ஒபாமா நிர்வாகம் இலங்கை அரசாங்கம் மீது காத்திரமான இராஜதந்திர அழுத்தங்களை கட்டாயம் பிரயோகிக்க வேண்டும்.

16 பக்கம் பார்க்க....

### யாழ்ப்பாணத்தில் வாழும் எம் மக்கள் பண்பாட்டுக்கு வரைவிலக்கணமானவர்கள்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(சுன்னாகம்)

பண்பாட்டுப் பிறழ்வு, கலாசார சீர்கேடு என்பன இன்று அடிக்கடி எமது சமூகத்தில் பேசப்படு விடயங்களாக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த எம் மக்கள் ஒரு காலத்தில் பண்பாட்டுக்கு வரைவிலக்கணமாக வாழ்ந்தவர்கள். கலாசாரத்தை உலகிற்கு கற்றுக் கொடுத்தவர்கள் என்பதனை யாரும் மறந்து விடக்கூடாது என வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

15 பக்கம் பார்க்க....

### உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது!

## அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை எந்த முறையின் கீழ் நடத்துவது என்பது பற்றி இன்னும் தீர்மானங்கள் எடுக்கப்படவில்லை என்பதால், எதிர்வரும் மார்ச் மாதம் நடத்த திட்டமிடப்பட்டிருந்த தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டமூலத்திற்கு அமைய இந்த தேர்தல் தொகுதிவாரியாக நட

15 பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ரணில்-மங்களவுக்கு இடையில் மோதல்; போலித் தகவல்களால் பரபரப்பு!



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் இடையில் மோதல் என ஊடகங்களில் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது.

இவ்வாறு போலித் தகவல்களை பரப்பிய இருவர் ஆதாரத்துடன் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பிரதான தேசிய பத்திரிகையின் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஒருவரும் பிரதமர் அலுவலக ஊடக ஒருங்கிணைப்பு அதிகாரி ஒருவரும் இதில் தொடர்பு பட்டுள்ளமை உறுதியாகியுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

மங்கள சமரவீரவுடன் அரசியல் கருத்து வேறுபாட்டிலுள்ள பிரதமர் அலுவலக பிரதானியின் தேவைக்கமைய, இந்த நபர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக குறித்த அதிகாரி கூறியுள்ளார்.

பிரதமர் அலுவலகத்தின் கணனி மற்றும் மின்னஞ்சல் முகவரியை பயன்படுத்தி குறித்த போலியான செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

பிரதமர் அலுவலக ஊடக அதிகாரியினால் ஏனைய தேசிய பத்திரிகையின் தன்னார்வ பத்திரிகையாளர்களுக்கும் இணைய ஊடகவியலாளர்களுக்கும் இச் செய்தி வழங்கப்பட்டு பிரபலமாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கடந்த வாரம் பிரபலமாக்கப்பட்ட குறித்த போலியான செய்திக்கமைய, அமெரிக்கா, ஐ.நா. கூட்டத்தொடர் ஆகியவைகளில் கலந்து கொண்டு அந்த நடவடிக்கைகளை நிறைவு செய்திருந்த வெளியுறவு அமைச்சரை, பிரதமரின் ஜப்பான் விஜயத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கவில்லை எனவும் அதன் காரணமாக மனமுடைந்த மங்கள லண்டனுக்கு சென்று தனது நேரத்தை செலவிட்டதாக போலியான செய்தி ஒன்று வெளியிடப்பட்டிருந்தது.

எனினும் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் அறிவித்தலுக்கமையவே விசேட இராஜதந்திர கடமையை நிறைவு செய்வதற்காக வெளியுறவு அமைச்சர் லண்டன் நோக்கி சென்றுள்ளார் என தங்களுக்கு தகவல் கிடைத்ததாக பிரதமர் அலுவலக சிரேஷ்ட அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## அரச நிறுவனங்களில் மோசடி நடைபெறுகிறது

(கொழும்பு)

புதிய அரசாங்கத்திடம் எதிர்பார்த்த நோக்கங்கள் இன்னும் நிறைவேறவில்லை என ஜனநாயகக் கட்சியின் தலைவரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சில அரச நிறுவனங்களில் இன்னும் மோசடிகள் நடப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசிய அவர்,

2010ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர், ரணில் விக்கிரமசிங்கவும் கரு ஜயசூரியவும் ரவி கருணாநாயக்கவும் எனது வீட்டிற்கு வந்து ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தனர்.

மேலும் இம்முறை பொதுத் தேர்தலிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொலைபேசி அழைப்பொன்றை எடுத்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து கொள்ளுமாறு கூறினார்.

எனினும் இந்த அழைப்புகள் அனைத்தையும் தான் நிராகரித்ததாகவும் பொன்சேகா மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## விமான போக்குவரத்தை மேம்படுத்த நடவடிக்கை

### அமைச்சர் நிமால் தெரிவிப்பு

(கொழும்பு)

உள்நாட்டு விமான நிலையத்தை பொது மக்களின் பயன்பாடு மற்றும் சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்கு இணைத்துக் கொள்ளும் வேலைத்திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை காலை மட்டக்களப்பு விமான நிலையத்தின் கட்டுமானப் பணிகளை கண்காணிக்க அங்கு சென்றிருந்த வேளை அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு விமான நிலையம் திறந்த பின்னர் பாசிக்குடா கடற்பகுதியை அண்மித்த சுற்றுலாப் பகுதிகளுக்கு வருகைதரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும். அதனூடாக நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சிவில் விமானப் போக்குவரத்து சேவை பங்களிப்பை வழங்க முடியும்.

அத்துடன் விமான நிலைய வளாகத்திற்கு அண்மையில் விமானம் ஓட்டுவோருக்கான பயிற்சிக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்க தான் நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## பொலிஸுக்கு ஆட்சேர்ப்பு யாழில் நேர்முகத்தேர்வு

### ஆயிரம் இளைஞர்கள் வரை பங்கேற்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கை பொலிஸ் சேவைக்கு தமிழ் பொலிஸாரை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நேற்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

கொழும்பில் இருந்து வருகை தந்துள்ள பொலிஸ் ஆட்சேர்ப்புப் பிரிவினர் பொலிஸ் சேவைக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான முதலாவது நேர்முகத் தேர்வை நடத்தினார்கள்.

கல்விச் சான்றிதழ்கள் பார்வையிடப்பட்டதுடன் அவர்களுடைய உயரம், நெஞ்சு சுற்றளவு என்பன அளவிடப்பட்டுள்ளன. இந்த நேர்முகப் பரீட்சைக்கு சுமார் ஆயிரம் பேருக்கு மேல் சமுகமளித்திருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களை சேர்ந்த ஆண்கள் நேற்று நேர்முகத் தேர்வுக்கு தோற்றியிருந்தனர். (எ-11)

## தொழில் வாய்ப்புக்காக சுற்றுலா விசாவில் பயணம்

### விசாரணைக்கு அமைச்சர் உத்தரவு

சுற்றுலா விசா அனுமதிகளை பெற்று குவைத் உட்பட பல நாடுகளுக்கு தொழில் வாய்ப்புகளுக்காக நபர்களை அனுப்பி வைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதால், அது குறித்து விரிவான விசாரணைகளை நடத்துமாறு அமைச்சர் தலதா அத்துகோரள, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இவ்வாறு சுற்றுலா விசா அனுமதியில் குவைத் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த 11 பேர் அண்மையில் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பணிபுரியும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 4 அதிகாரிகள் இடைக்கால பணிநீக்கம் செய்யப்பட்டனர்.

சுற்றுலா விசாவில் நபர்களை தொழில் வாய்ப்புகளுக்கு அனுப்பி வைக்கும் வியாபாரத்தின் பின்னணியில், வேலைவாய்ப்பு முகவர் அமைப்புகள், உப முகவர்கள், சில அதிகாரிகளும் உள்ளனர்.

மேலும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் இடம்பெற்றுள்ள நிதி முறைகேடுகள் மற்றும் ஏனைய சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்க புதிய பணிப்பாளர் சபை ஒன்றையும் அமைச்சர் தலதா அத்துகோரள நியமித்துள்ளார். (எ-11)

## உளநல சுகாதார தின நிகழ்வுகள்

சர்வதேச உளநல சுகாதார தின நிகழ்வுகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

இலங்கையை சுமாந்தரமான மனோ நிலையில் கட்டியெழுப்புவோம் எனும் தொனிப் பொருளில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

உலக உளநல சுகாதார தினத்திற்கான வண்ணத்துப்பூச்சி சின்னம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அணிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் உத்தியோகப்பூர்வ இல்லத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

உளநல சுகாதாரம் தொடர்பில் தெளிவூட்டுவதற்காக ஒக்டோபர் 10 ஆம் திகதியை சர்வதேச உளநல சுகாதார தினமாக ஐ.நா பிரகடனம் செய்துள்ளது.

இந்த நிகழ்வின் போது ஜனாதிபதிக்கு நினைவுச் சின்னமொன்றும் வழங்கப்பட்டது. (எ-11)

வாடகைக்கு

யாழ். நீராவியடி பிறவுண் வீதிக்கு அருகாமையில் வீடு வாடகைக்குண்டு. (2013)

தொடர்புகளுக்கு: 071 627 4916

தையல்

இந்தியாவில் 8 வருட கால அனுபவம் வாய்ந்த பெண் ரெய்லரால் சாறிபிளவுஸ், சுடிதார் ஆகியவை நவீன முறையில் தைத்துக் கொடுக்கப்படும். (2025)

இடம் :- குமாரசாமி வீதியிலிருந்து பிரம்படி வீதி கொக்குவிலுக்கு மாற்றப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு :- 0766399277

## வடமராட்சியில் வெள்ளை நாகம்



வடமராட்சி பிரதேசத்தில் வல்வெட்டித்துறை, தெணியம்பை பகுதியில் வெள்ளை நிற நாகபாம்பொன்று அகப்பட்டுள்ளது.

குறித்த நகர் பகுதியிலுள்ள வீதியொன்றிலிருந்த இந்த வெள்ளை நிற நாகபாம்பினை அப்பகுதி மக்கள் பிடித்து போத்தலில் அடைத்துள்ளனர். பின்னர் இந்த வெள்ளை நாகம் வல்லி புர ஆழ்வார் ஆலயப் பகுதியில் கொண்டு சென்று விடப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (எ-11)

## விபத்தில் சிக்கி இருவர் காயம்

(கரணவாய்)

மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கர வண்டியும் விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்துள்ளனர். இச் சம்பவம் நேற்றிரவு 7 மணியளவில் இமையாணன் குஞ்சர்கடைச் சந்திக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சுந்தரம் சிவலிங்கம் (வயது 72) என்பவர் தலையில் காயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மற்ற நபர் சிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார். விபத்து தொடர்பான விசாரணையை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (எ-12,60)

பாராட்டி வாழ்த்துகிறோம்

செல்வன் கிருஸ்ணசாமி கதிர்



கிளி/செம்பன்குன்று அ.த.க பாடசாலை மாணவன் செல்வன் கிருஸ்ணசாமி கதிர் அகில இலங்கை ரீதியில் இடம்பெற்ற தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். திரு. திருமதி கிருஸ்ணசாமி பரமேஸ்வரி தம்பதியினரின் புதல்வன் செல்வன் கி.கதிர் அவர்கள் பல கலைகளையும் பற்பல பட்டங்களையும் பெற்று பெரு வாழ்வு வாழ்க என பாராட்டி வாழ்த்துகின்றோம்

பாராட்டி வாழ்த்தும் நல்லுள்ளங்கள் (C-2430)

திரு/திருமதி தா.கோபாலசிங்கம் குடும்பத்தினர்
சிவன் வீதி, உருத்திரபுரம், கிளிநொச்சி.

# மரண தண்டனை தொடர்பான இலங்கையின் நிலைப்பாட்டுக்கு ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்பு

(கொழும்பு)

**மரண தண்டனைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் கொண்டுவரப்பட வுள்ள தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்கப்படும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அறிவித்தி ருந்தமையை வரவேற்பதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் ஐரோப் பிய ஒன்றியம் தெரிவித்துள்ளதா வது, ஐரோப்பிய ஒன்றியம் நோர்வே மற்றும் சுவிட்சர் லாந்து ஆகிய நாடுகள் சகல வித மான மரண தண்டனையை யும் எதிர்க்கின்றன. மரண தண்டனை மனித உரிமை மீறலாகும்.மரண தண்டனை க ளின் மூலம் குற்றச்செயல் கள் தடுக்கப்பட்டதாக எவ்வித ஆதாரங்களும் கிடையாது. வறியவர்கள், தலித்கள், சிறுபான்மை இனத்தவர்கள் போன்றவர்களே அதிகள வில் மரண தண்டனைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என ஐரோப்பிய ஒன்றியம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-10)

# மைத்திரி-ரணில் அரசிடம் நீதியை எதிர்பார்க்க முடியாது

## கே.டி.லால்காந்த தெரிவிப்பு

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் மேற்கொ ள்ளப்பட்ட ஊழல், மோசடி கள் சம்பந்தமாக பல முறைப் பாடுகள் செய்யப்பட்டு, அவ ற்றை விசாரிக்க பணியகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிரு ந்தது.

எனினும் இந்த அரசாங் கம் நீதியை நிலைநாட்டும் என எதிர்பார்ப்புகளை கொண டிருக்கக் கூடாது என மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் சபை உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்து ள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

புதிய அரசாங்கம் ஆட்சி க்கு வருவதற்கு முன்னர் நல்லாட்சி குறித்த எதிர்பார் ப்பை கொண்டிருந்த பலர் ராஜபக்ஷ ஆட்சியில் மேற் கொள்ளப்பட்ட ஊழல், மோச டிகள் தொடர்பாக முறைப்பா டுகளை செய்தனர்.

இவற்றை விசாரிக்க ஏற் படுத்தப்பட்ட நிதி மோசடி விசாரணைப் பிரிவில் முறைப் பாடுகள் கையளிக்கப்பட்டன.

ஆயிரக்கணக்கான முறை ப்பாடுகள் குறித்து விசா ரணை நடத்தி, நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் விசா ரணைஅறிக்கையைபொலிஸ்மா அதிபர் மற்றும் சட்டமா அதிப ரின் ஆலோசனைகளுக் காக கையளித்துள்ளனர். எனினும் எந்த அறிக்கையும் இதுவரை இவர்களால் நீதி மன்றத்தில் தாக்கல் செய்ய ப்படவில்லை.

அரசாங்கத்தின் உயரிய அதிகாரம் படைத்த ஒருவர் அல்லது சிலர், இவர்கள் அறிக்கைகளை நீதிமன்றத் தில் தாக்கல் செய்வதை தடுத்துள்ளனர். இதனடிப்ப டையில், இந்த அரசாங்கம் கடந்த அரசாங்கத்தில் இரு ந்த எவருக்கும் எப்போதும் தண்டனை வழங்க போவ தில்லை எனவும் லால் காந்த மேலும் தெரிவித்தார். (இ-10)

# சிகிச்சை பலனின்றி வயோதிபப் பெண் மரணம்

விபத்தில் சிக்கி படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வயோ திபப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

யாழ். திருநெல்வேலி சந் தைக்கு அருகே கடந்த முதலாம் திகதி பிற்பகல் 3.30 மணியள வில் வீதியை கடக்க முற்ப ட்ட வேளை மோட்டார் சைக் கிள் மோதியதில் குறித்த வயோ திப பெண் காயமடைந்திருந் தார்.

இந்நிலையில் சிகிச்சை பலனி ன்றி நேற்று முன்தினம் முற்பகல் குறித்த பெண் உயிரிழந்து ள்ளார். கோண்டாவில் வடக்கு கோண்டாவிலை சேர்ந்த சண் முகம் கமலா (வயது-65) என்பவரே உயிரிழந்தவராவர்.

இவரது மரணம் தொடர் பாக யாழ். போதனா வைத்திய சாலை திடீர் மரண விசா ரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் விசாரணைகளை மேற் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைக்கு அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை வழங்கு வது தொடர்பில் அமைச்ச ரவை அனுமதி வழங்கியு ள்ளது.

இலங்கையில் தற்போது பாவனையில் இருக்கும் தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை வழங்கு வது குறித்து நீண்டகாலமாக பேசப்பட்டு வருகின்றது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷ இந்த விடயத்தில் தீவி ரமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போதி லும், அதற்கான அமைச்ச ரவை அனுமதியை அவர் பெற்றிருக்கவில்லை.

இந்நிலையில் கடந்த புதன் கிழமை கூடிய அமைச்சர வையில் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைக் கான அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

எதிர்வரும் இரண்டு வரு டங்களினுள் இந்த செயற்பா ட்டை நடைமுறைக்குக் கொண்டு வரவும், அதன் பின்னர் இலங்கையிலுள்ள அனைவருக்கும் இலத்திர னியல் தேசிய அடையாள அட்டை வழங்கவும் முடியும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சரவையின் இணைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் தெரி வித்துள்ளார். (இ-10)

# இந்திய மீனவர்களின் விவகாரம் குறித்து தமிழக அரசுடன் பேச்சு நடத்த வேண்டும்

## சம்பந்தன் எம்.பி.அரசிடம் கோரிக்கை

மீனவர்கள் விவகாரம் தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கத்து டன் மாத்திரமன்றி தமிழக அரசாங்கத்துடனும் வெளிவிவகார அமைச்சு பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இலங்கை, இந்திய மத்திய அரசு, தமிழக அரசு அடங்கிய முத்தரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தும் அதேநேரம் இலங்கை கடற்படை மற்றும் இந்திய கடற்படை, இந்திய கரையோர பாதுகாப்பு படை ஆகியன இணைந்து கூட்டு கண்காணிப்பை நடத்துவதன் மூலம் அத்துமீறல்களை தடுக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

அத்துமீறிய மீன்பிடியை தடுக்க இரு நாட்டு கடற்படையி னர் மற்றும் கரையோரப் பாதுகாப்பு பிரிவினர் இணைந்து கூட்டு கடல் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

இதனால் அத்துமீறல்களை கட்டுப்படுத்த முடியும். அதேநேரம், மீனவர் விவகாரம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு, டில்லியிலுள்ள மத்திய அரசாங்கத்துடன் மட்டும் பேச்சுவார்த்தை நடத்தாது, பிராந்திய அரசான தமிழ்நாட்டு அரசாங்கத்துடனும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். முத்தரப்பு பேச்சுக்களை நடத்தி இவ்விடயத்துக்கு தீர்வுகாண வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# விபத்துக்களை குறைப்பதற்காக பேருந்து சாரதிகளுக்கு பயிற்சி

(கொழும்பு)

போக்குவரத்தின் போது அனுமதிக்கப்பட்ட சாரதி களுக்கு மாத்திரமே போக்கு வரத்து அனுமதி வழங்கப்ப டவுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையா ளர் திணைக்களம் தெரிவித் துள்ளது.

தற்போது அதிகரித்து காணப்படும் விபத்துக்களை குறைப்பதற் காகபேருந்து சார திகளுக்கு விசேட பயிற்சிகளை வழங்க நடவ டிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் திணைக்களத் தின் ஆணை யாளர் நாயகம் ஜகத் சந்திரசிறி தெரிவித்துள்ளார்.


குறித்த பயிற்சியினை பய ணிகள் போக்குவரத்தின் விசேட தகைமையாக கருதுவ தாக அவர் மேலும் தெரிவித் தார்.

அத்துடன் அனுமதியி ன்றி பயணிகள் போக்கு வரத்து நடவடிக்கையில் ஈடு படும் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்ப டும் என ஜகத் சந்திரசிறி தெரிவித்தார்.

அத்துடன் அனுமதி யின்றி போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகளின் அனுமதிப்பத்திரம் தொட ர்பில் நடவடிக்கை மேற்கொ ள்ள தயாராகவுள்ளதாக வும் அவர் மேலும் தெரிவித் தார். (இ-10)

# யுத்த சிதைவுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## டக்ளஸ் எம்.பி.பாராளுமன்றில் வலியுறுத்து



(கொழும்பு)

யுத்தம் ஏற்படுத்திய அழி வுகளின் எச்சங்களையும், அதன் சிதைவுகளையும் காட்சிப் பொருட்களாக வெகு செலவுகளுடன் பாதுகாக்கி றில் அர்த்தம் ஏதுமில்லை. அவை அகற்றப்பட்டு அவற் றுக்குப் பதிலாக புதிய நிர் மாணங்களை கட்டியெழுப்ப வேண்டும் என்று பாராளு மன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா பாராளுமன்ற த்தில் தனிநபர் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

இந்த கோரிக்கை தொடர் பாக டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவிக்கையில், நாட்டில் யுத்தம் காரணமாக பல அழிவுகள் இடம்பெற் றுள்ளன. உதாரணமாக மத்திய வங்கிக் கட்டடம், கண்டிதலதாமாளிகை, மத்திய தொலைத் தொடர்பு பரிவர்த் தனை நிலையம், யாழ்ப்பா ணம் நூலகம் போன்ற பல முக்கிய இடங்களும் தகர்க் கப்பட்டன அல்லது எரியூட் டப்பட்டன. ஆனால் அவ ற்றை யுத்த அழிவுச் சின் னங்களாக நாம் அப்படியே வைத்திருக்கவில்லை. அவ ற்றை மீண்டும் புதிய அழ கோடும், நம்பிக்கையோடும் மக்கள் பயன்பெறும் வகை யில் மீளகட்டி எழுப்பியிரு க்கின்றோம்.

ஆனால் வட மாகாணத் தில் யுத்தத்தில் சிதைக்கப் பட்ட தண்ணீர்த்தாங்கி, யுத்த வாகனங்கள் போன்ற வற்றை மட்டும் யுத்தச் சிதை வுகளாக பாதுகாப்பதால் யாரு க்கு என்ன நன்மை இருக்க முடியும்?

எனவே, அவற்றை அக ற்றி மக்களுக்குப் பயன்தரும் வகையில் புதிதாக மீளக் கட்டி எழுப்பவேண்டும். எதிர் காலத் தலைமுறைக்கு யுத்த வடுக்களை காட்டுவதைவிட வும், யுத்தத்தை முடிவுறுத்தி நாம் அழிவுகளிலிருந்து மீண்டு வருகின்றோம் என்பதையே உணர்த்த வேண்டும். ஆகவே யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் வழ ங்கவும், அரசியல் தீர்வை வழங்கவும் விருப்பங்கொ ண்டுள்ள அரசு, யுத்த அழிவு களை அகற்றி மக்கள் மன தில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் என் பதே அந்த மக்கள் சார்பாக எனது கோரிக்கையாகும் என்றும் தெரிவித்தார். (இ-10)

# சைபர் பாதுகாப்பு வாரம்

(கொழும்பு)

இணைய பயன்பாடு மற்றும் தகவல் பாதுகாப்பு சம்ப ந்தமாக மக்களை அறிவூட் டும் விதமாக சைபர் பாதுகாப்பு வாரம் அறிமுகப்படுத் தப்ப ட இ ரு ப் ப த ா க இலங்கை கணனி அவசர நடவடிக்கை பிரிவு தெரி வித்துள்ளது.

நவம்பர் மாதம் முதலாம் வாரத்தில் இந்த திட்டம் அறிமு கப்படுத்தப்படும் என்று அந்த நிலையத்தின் பாதுகா ப்பு பொறியி லாளர் ரொஷான் சந் திரகுப்த தெரிவித் தார்.

இதன் போது இணைய பயன்பா டின் சம்பந்தமாக மற்றும் கணினி அமைப்புகள் பாதுகா ப்பு சம்பந்தமாக வும் மக் களை தெளிவூ ட்டும் விஷேட வேலைத் திட்டங்கள் முன் னெடுக்கப் படவுள்ள தாக ரொஷான் சந்திரகு ப்த தெரிவித்தார். (இ-10)

O/L உடன்
30,000/= உடன் ஆரம்பித்து சுவிஸ், நியூசிலாந்து, சிங்கப்பூர், மலேசியாவில் மாதம் 3 இலட்சத்துக்கு மேல் உழைக்கக்கூடிய
புதிய பிரிவு ஆரம்பம் 15-10-2015, வியாழன் 10 மணி
Business & Hotel Management With ENGLISH COURSE Free
Leading to University of Sunderland UK
சுற்கைநெறிக் காலத்தில் ரூ.15,000 வரை வருமானம்

6 மாதங்களில் விரும்பிய நாடு வெல்லும் 100% உத்தரவாதம்
SIKARAM Any Visa to Any Country
மேலதிக விபரங்களுக்கு www.sikaram.lk
இதுவரை கற்கைநெறியில் இணைந்த 13 பேருக்கு வெளிநாட்டு விசா ஏற்பாடு
MONEY BACK 100% GUARANTEE
3 மாதங்களில் ஆங்கிலத்தில் பேசும் திறன் & தொழில்வாய்ப்பு பெறும் உத்தரவாதம்
077 36 16 798, 021 222 0011
School of Hospitality &English
இல.275-2/1. மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m

# இந்தியா - தென்னாபிரிக்கா மோதும் ஒருநாள் தொடர் இன்று ஆரம்பம்




தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான 3 போட்டி கொண்ட இருபது-20 தொடரை தென்னாபிரிக்கா 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. முதல் 2 போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றது. கொல்கத்தாவில் நடைபெற இருந்த 3-வது ஆட்டம் மழையால் ரத்து செய்யப்பட்டது.

அடுத்து இரு அணிகள் இடையே ஒரு நாள் போட்டி நடைபெறுகிறது. 5 ஒருநாள் போட்டித் தொடரில் இந்தியா- தென்னாபிரிக்கா அணிகள் மோதும் முதல் ஒருநாள் ஆட்டம் உத்தரபிரதேசம் மாநிலம் கான்பூரில் இன்று நடைபெறவுள்ளது.

20 ஓவர் போட்டித் தொடரை இழந்ததால் இந்திய அணி கப்டன் தோனி மிகுந்த நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிறார். ஒருநாள் தொடரை கைப்பற்ற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்.

தென்னாபிரிக்காவிடம் இருபது - 20 தொடரை இழந்ததற்கு இந்திய அணி ஒருநாள் தொடரில் பதிலடி கொடுக்குமா? என்று ரசிகர்கள் ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளனர்.

பலம் வாய்ந்த தென்னாபிரிக்காவை வீழ்த்த இந்திய வீரர்கள் கடுமையாக போராட வேண்டும்.

இருபது -20 தொடரில் வாய்ப்பு வழங்கப்படாத ரகானே ஒருநாள் தொடரில் இடம் பெறுவார். ஒருநாள் அணியில் பஞ்சாப்பை சேர்ந்த குர்கீரத் சிங் இடம் பெற்றுள்ளார். சர்வதேச போட்டியில் முதல் முறையாக களம் இறங்குவாரா? என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது.

துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு ஆகிய 3 துறைகளிலும் சிறப்பாக செயல்பட்டால் தான் வெற்றியுடன் இந்திய அணி கணக்கை தொடங்க இயலும்.

டி வில்லியர்ஸ் தலைமையிலான தென்னாபிரிக்க அணி ஒருநாள் தொடரிலும் ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கும். அந்த அணியில் கப்டன் டி வில்லியர்ஸ், ஹசிம் அம்லா, டுமினி, டுபெலிசிஸ், மில்லர், ஸ்டெய்ன், மோர்னே மோர்கல் போன்ற சிறந்த வீரர்கள் உள்ளனர்.

இரு அணிகளும் கடைசியாக கடந்த பெப்ரவரி மாதம் நடந்த உலககோப்பை போட்டியில் மோதின. மெல்பேனில் நடந்த இந்த ஆட்டத்தில் இந்தியா 130 ரன்னில் வெற்றி பெற்றது.

இந்திய அணி கடைசியாக சிம்பா்வேக்கு எதிரான ஒருநாள் தொடரில் 3-0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது.

தென்னாபிரிக்கா அணி தனது சொந்த மண்ணில் நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்தியா, தென்னாபிரிக்கா அணிகள் ஒரு நாள் தொடரை வெல்ல கடுமையாக போராடும் என்பதால் இந்த தொடர் விறுவிறுப்பாக இருக்கும். **இரு அணி வீரர்கள் விவரம்:**

*இந்தியா:* டோனி (கப்டன்), ரோகித்சர்மா, ஷிகார் தவான், வீராட் கோலி, ரெய்னா, ரகானே, அம்பதிராயுடு, அஸ்வின், அக்ஷர் பட்டேல், ஸ்டூவர்ட் பின்னி, புவனேஸ்வர் குமார், மொகித்சர்மா, உமேஷ் யாதவ், அமித மிஸ்ரா, குர்கீரத்சிங்.


*தென்னாபிரிக்கா:* டி வில்லியர்ஸ் (கப்டன்), ஹசிம் அம்லா, குயின்டன் டிகாக், டுபிலிசிஸ், டுமினி, மில்லர், பெகருதீன், கிறிஸ் மாரிஸ், மோர்னே மோர்கல், அபோட், ஆரோன பான்ஜியோ, இம்ரான்தாகீர், ஸ்டெயின், ரபடா, ஜோன்டோ. (க)

## அரையிறுதியில் இவானோவிச்



சீன ஓபன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு அரை இறுதியில் விளையாட, நட்சத்திர வீராங்கனை அனா இவானோவிச் (செர்பியா) தகுதி பெற்றார். கால் இறுதியில் ரஷ்யாவின் அனஸ்டேசியா பாவ்லியுசென்கோவாவுடன் நேற்று முன்தினம் மோதிய இவானோவிச் 6-3, 7-5 என்ற நேர் செட்களில் வென்று அரை இறுதிக்கு முன்னேறினார். மற்றொரு கால் இறுதியில் போலந்தின் அக்னீஸ்காரத்வன்ஸ்கா 6-1, 6-4 என்ற நேர் செட்களில் ஏஞ்சலிக் கெர்பரை (ஜெர்மனி) வீழ்த்தினார். இத்தாலியின் சாரா எர்ரானிக்கு எதிரான கால் இறுதியில், டிமியா பாஸ்கின்ஸ்கி (சுவிஸ்) 0-6, 6-3, 7-5 என்ற செட் கணக்கில் போராடி வென்று அரை இறுதிக்கு முன்னேறினார். (க)

## திருமணத்திற்கு வரும்படி மோடிக்கு ஹர்பஜன் நேரில் சென்று அழைப்பு



இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங், பிரதமர் நரேந்திர மோடியை நேற்று நேரில் சந்தித்தார். அப்போது ஒக்டோபர் 29-ம் திகதி நடைபெறவுள்ள தனது திருமணத்திற்கு வந்து ஆசி வழங்கும்படி அழைப்பு விடுத்தார்.

பிரதமர் மோடி, ஹர்பஜன் சந்திப்பு தொடர்பான சில புகைப்படங்களை பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ளது. ஹர்பஜன் சிங், நடிகையும் தோழியுமான கீதா பாஸ்ராவை திருமணம் செய்ய உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த திருமணத்தில் பாலிவுட் நட்சத்திரங்கள் மற்றும் கிரிக்கெட் வீரர்கள் பலரும் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் 29-ம் திகதி திருமணத்தை தொடர்ந்து நவம்பர் 1-ம் திகதி வரவேற்பு நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது. (க)

## இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து புனேக்கு 2-வது வெற்றி



இந்தியன் சுப்பர் லீக் (ஐஎஸ்எல்) கால்பந்து போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் புனே சிட்டி அணி 1-0 என்ற கோல் கணக்கில் நோர்த் ஈஸ்ட் யுனைடெட் அணியைத் தோற்கடித்தது. இதன் மூலம் புனே அணி 2-வது வெற்றியைப் பதிவு செய்துள்ளது. அதே நேரத்தில் நோர்த் ஈஸ்ட் அணி 2-வது தோல்வியை சந்தித்துள்ளது.

புனேயில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் டெல்லி 4-3-3 என்ற போர்மட்டிலும், நோர்த் ஈஸ்ட் யுனைடெட் அணி 4-4-2 என்ற போர்மட்டிலும் களமிறங்கின. ஆட்டத்தின் 3-வது நிமிடத்திலேயே நோர்த் ஈஸ்ட் அணிக்கு கோரனர் வாய்ப்பு கிடைத்தாலும், கோலடிக்க முடியவில்லை. 15-வது நிமிடத்தில் புனே அணிக்கு ப்ரீ கிக் வாய்ப்பு கிடைத்தது. ஆனால் அதை நோர்த ஈஸ்ட் கோல் கீப்பர் ஜென்னாரோ தகர்த்தார்.

இதன்பிறகு நோர்த் ஈஸ்ட் அணியின் சியாம், 22-வது நிமிடத்தில் கோலடிக்கும் வாய்ப்பை கோட்டை விட்டார். 41-வது நிமிடத்தில் புனே அணிக்கு நல்ல கோல் வாய்ப்பு கிடைத்தது. அந்த அணியின் ஸ்டிரைக்கர் அட்ரியான் வசம் பந்து செல்ல, மிக எளிதாக கோல் அடிக்க வேண்டிய நிலையில், இடது காலால அவர் பந்தை உதைத்தார். ஆனால் அந்த ஷாட் மெதுவாக சென்றதால் நோர்த் ஈஸ்ட் கோல் கீப்பர் எளிதாக தகர்த்தார். இதனால் முதல் பாதி ஆட்டம் கோலின்றி முடிந்தது.

பின்னர் நடைபெற்ற 2-வது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தீவிரமாக போராட, 73-வது நிமிடத்தில் புனே அணிக்கு கோர்னர் கிக் வாய்ப்பு கிடைத்தது. அதில் பின்கள வீரர் நிக்கி ஷோரே கோல் கம்பத்தை நோக்கி பந்தை உதைத்தார். கோல கம்பத்தின் முன்னால் நின்ற நோர்த் ஈஸ்ட் அணியின் பின்கள வீரர் ரால்டே பந்தை தலையால் முட்டி வெளியில் திருப்ப முயன்றார். ஆனால் அது எதிர்பாராதவிதமாக கோல் வலைக்குள் புகுந்ததால் ஓன் கோல் ஆனது. இதன்பிறகு கோல் எதுவும் விழாததால் புனே அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி கண்டது. (க)

## சீன ஓபன் டென்னிஸ் இறுதிப் போட்டியில் நடால்



உலகின் சிறந்த டென்னிஸ் வீரரும், களிமண் தரையின் ஜாம்பவானுமான ஸ்பெயின் நாட்டின் ரபேல் நடாலுக்கு இந்த வருடம் சிறப்பாக அமையவில்லை.

2004-ம் ஆண்டிற்குப் பிறகு ஒரு கிராண்ட்ஸ்லாம் கூட வெல்லாத ஆண்டாக நடாலுக்கு இந்த ஆண்டு அமைந்தது. அவுஸ்திரேலியா மற்றும் பிரெஞ்ச் ஓபனில் காலிறுதியோடும், விம்பிள்டனில் 2-வது சுற்றோடும், அமெரிக்க ஓபனில் 3-வது சுற்றோடும் வெளியேறினார்.

இதனால் தரவரிசையில் 8-வது இடத்திற்கு தள்ளப்பட்டார். இந்த வருடம் போக்னினி, நடாலை மூன்று முறை வீழ்த்தி தடை போட்டார். அந்த தடையை நேற்று நடைபெற்ற சீன ஓபன் அரையிறுதியில் நடால் தகர்தெறிந்துள்ளார்.

நேற்று நடைபெற்ற அரையிறுதியில் போக்னினியை 7-5, 6-3 என நேர்செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார் நடால். முதல் செட்டை கடும் போராட்டத்திற்கு பின்புதான் நடால் கைப்பற்றினார். பின்னர் வழக்கமான அதிரடி ஆட்டத்தால், இரண்டாவது செட்டை எளிதில் கைப்பற்றினார். (க)

**வீடு வாடகைக்கு விடப்படும்**

ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு விடப்படும். நான்கு அறை, குளியல் அறை, சமையலறை என்பவற்றைக் கொண்டுள்ளது. (2013)

தொடர்புகளுக்கு: 077 383 9960

# பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட நால்வருக்கு அழைப்பாணை

பொலிஸ் மா அதிபர், குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட நால்வருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற் போன சம்பவம் தொடர்பில் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள இராணுவ வீரர் கள் நால்வரையும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு தாக்கல் செய்யப்பட்டு ள்ள மனுவின் பிரகாரம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அவர்கள் நால்வரும் இம்மாதம் 16 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகு மாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற் போன சம்பவம் தொடர்பில் இரகசியப் பொலிஸாரினால் கைதுசெய்து தடுத்து வைக் கப்பட்டுள்ள இராணுவ வீரர் கள் நால்வரினதும் உறவி னர்கள் இந்த மனுவை தாக் கல் செய்துள்ளனர்.

குறித்த மனு விசாரணை க்கு வந்தபோது நீதிமன்றத்தி னால்மேற்படி உத்தரவு நேற்று முன்தினம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ-10)

**அமெரிக்க Green Card Lottery -2017**

அமெரிக்க **Green card Lottery** விண்ணப்பத்தில் 13 வருட அனுபவமிக்க எமது நிறுவனத்தில் 2017 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் விபரங்களை ரூபா 15/- முத்திரையொட்டப்பட்டு சுய முகவரியிட்ட தபாலுறையை **Bristol Cyber cafe. No. 8/3/4, Bristol Street, Colombo -01** எனும் முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

**Tel : 0112393919, 0774276579** (C-2243)

W/A 44843 **www.bristolcc.biz**

**அதிரடிச் சலுகை**

**வலம்புரியின் அதிரடிச் சலுகை**

- மரண அறிவித்தல்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- நினைவு கூருதல்

ஆகியவற்றுக்கு

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

**தொடர்புகளுக்கு :-**
**021 221 7603,**
**021 321 0815**
**021 567 1543**

Valampurii@yahoo.com

**வாடகைக்கு**

உடுவில் இராமநாதன் கல்லூரிக்கு அண்மையில் இருவர் அல்லது நால்வர் தங்குவதற்கான அறைகள் வாடகைக்கு உண்டு. (அக்கடமி படிக்கும் பெண் மாணவிகள் விரும்பத்தக்கது)

(2012) **தொடர்புகளுக்கு: 077 472 3121**

**காணி விற்பனைக்கு**

யாழ்.நகர், பாங்ஷால் வீதியில் ஒரு பரப்பு குழி 11/2 காணி விற்பனைக்கு உள்ளது. வியாபார நிலையம், வீடு அமைப்பதற்கு சிறந்த இடமாகும். கண்டி வீதி (A-9), மத்திய கல்லூரிக்கு அருகாமையில் உள்ளது.

(2021) தொடர்பு: 077 7413 393, 011 255 9345

**தோட்ட வேலைக்கு ஆள் தேவை**

வயது வந்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தேக, மன ஆரோக்கியமான ஒருவர் தேவை. சம்பளம் நேரில். இடம் நெல்லியடியை அண்டியது.

**தொடர்புகளுக்கு: 077 510 7173**

## என்றென்றும் உங்கள் நினைவுகளுடன் மூன்றாண்டுகள்



**மண் மகிழ:-31.10.1955** **கண் நெகிழ:-11.10.2015**

## சோமசுந்தரம் விக்னேஸ்வரன்

**(ஓய்வுபெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்)**



மூன்றாண்டு முடிந்ததுவோ அப்பா உங்கள் ஆசை முகம் பார்த்து
ஆண்டாண்டு கடந்தாலும் உங்களது திருவுருவம் எங்களது மனதில் ஆழமாய்ப்பதிந்திருக்கும்
ஆசையாய்க் கௌதாக்குட்டி என்றழைக்கும் அன்பு மொழியோ ஓயவில்லை
ஆறாய்ப் பெருகும் கண்ணீருடன் அம்மாவின் ஆதங்கமும் ஆறவில்லையப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய ஊரெழு விநாயகரை பிரார்த்திக்கின்றோம்.
இன்று(11.10.2015) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் எமது அன்பு தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(2018)

நிரந்தர முகவரி
மீனாட்சியம்மன் வீதி,
சங்கத்தானை,சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
தற்காலிக முகவரி
மாலியவத்தை,சங்கானை.

## ராசி பலன்

11.10.2015
(புரட்டாதி 24, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
சதுர்த்தசி பின்னிரவு 3.29மணிவரை
உத்தரம் முன்னிரவு 11.59 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அவிட்டம்<br>மேல்நோக்கு நாள் | | |
| | | | குரு, சுக்<br>செவ் |
| | சனி | | சூரி, சந்<br>ராகு, புத |

**மேடம்:** கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், மற்றவர்களின் மன நிலையை அறிந்து கொண்டு செயற்படுவீர்கள், தேக நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும்.

**இடபம்:** மனமகிழ்ச்சியோடு செயற்படும் நாள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், கனவுகள் நனவாக கண்ணனை வழிபட வேண்டிய நாள், வியாபார விருத்தியுண்டு.

**மிதுனம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், நண்பர்கள் மத்தியில் நல்லபெயர் கிடைக்கும், பயணங்களின்போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்:** குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**கன்னி:** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கப்பெறுவீர்கள்.

**தனுசு:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் உங்களின் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**மகரம்:** உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், வழிபாட்டால் வளம் காண வேண்டிய நாள், அரைகுறையாக இருந்த பணிகளை ஆர்வத்தோடு செய்து முடிப்பீர்கள்.


**கும்பம்:** மருத்துவச்செலவுகள் கூடும் நாள், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாக செயற்படலாம்.

**மீனம்:** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள், சொந்த பந்தங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

# இந்திய மீனவர்கள் 19 பேர் பருத்தித்துறையில் கைது!

(யாழ்ப்பாணம்)

**இலங்கை கடற்பரப்பிற்குள் அத்து மீறிய இந்திய மீனவர்கள் 19 பேர் யாழ். பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினம் இரவு இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.**



கைது செய்யப்பட்ட குறித்த மீனவர்கள் பருத்தித்துறை கட்டைக்காட்டை அண்மித்த கடற்பரப்பில் வைத்து மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளை கைது செய்யப்பட்டதுடன், அவர்களால் மீன்பிடியில் ஈடுபடுத்தப்பட்ட இரு படகுகளை கைப்பற்றியுள்ளதாகவும் இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், கைது செய்யபபட்ட மீனவர்கள் நேற்றைய தினம் யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். இதே வேளை தற்போது இந்திய மீனவர்களின் எல்லை தாண்டல் தொடர்பில், வடக்கு மாகாணத்தில்பல்வேறு போராட்டங்கள் மற்றும் பேரணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையிலும் இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் வடக்கு கடற்பரப்பிற்குள் அத்துமீறுவது குறித்து வடக்கு மீனவ அமைப்புக்கள் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளன. (இ-4)

## நவராத்திரி விழா

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான நவராத்திரிவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

மேற்படி நவராத்திரி விழா பூஜைகளின் ஆரம்பநாளான செவ்வாய்க்கிழமை அன்று காலை 8 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு நவராத்திரி கும்பம் வைத்து பூஜைகள் இடம்பெறும். தொடர்ந்து நடைபெறும் பூஜைகள் தினமும் பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

22ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் விஜயதசமி விழாவில் காலை 9 மணிக்கு வாழைவெட்டுதல் நிகழ்வும் 9.30 மணிக்கு ஏடு தொடக்கல் நிகழ்வும் இடம்பெறும். இதனையடுத்து முற்பகல் 11.30 மணிக்கு கேதாரகௌரி விரதபூஜை ஆரம்பமாகவுள்ளது. (இ-5)

## ஆசிரியர் தின விழா

மீசாலை எக்சலன்ற் கல்வி நிலையத்தின் ஆசிரியர் தின விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்வி நிலைய முன்றிலில் த.அபிதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நிறுவனத்தின் ஆரம்பகால ஆசிரியரும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபருமாகிய ச.லலீசனும் சிறப்பு விருந்தினராக கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன் ர.தேனுஷனும் கலந்து கொள்ளவுள்ளனர்.(இ-10)

✦ ✦ ✦ ✦ ✦ ✦

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு Blooming Buds Day Care Centre ஆங்கில மொழி பாலர் பாடசாலையின் ஆசிரியர் தின நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு மேற்படி பாடசாலை மாணவர்களது அனைத்து பெற்றோர்களும் கலந்து கொள்ளுமாறு நிலையத்தின் பணிப்பாளர் கேட்டுள்ளார். (இ-5)

## துவிச்சக்கர வண்டிகள் பகிரங்க ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட துவிச்சக்கரவண்டிகளின் பகிரங்க ஏல விற்பனை 17.10.2015 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் நடத்தப்படும்.

குறித்த பகிரங்க ஏலவிற்பனையில் துவிச்சக்கர வண்டிகளினை பெற்றுக்கொள்பவர்கள் கொடுப்பனவுகளை காசாகவே செலுத்த வேண்டும். அத்துடன் ஏலவிற்பனையில் பெற்றுக்கொள்ளும் துவிச்சக்கர வண்டிகளினை அன்றையதினம் உடனடியாகவே வளாகத்தில் இருந்து அகற்றவேண்டும் என நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (இ

## சர்வதேச சிறுவர், முதியோர் மாற்றுவலுவுடையோர் விழா

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச சிறுவர்,முதியோர் மாற்றுவலுவுடையோர் தினவிழா நாளை மறு தினம் செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு கரணவாய் மூத்த விநாயகர் ஆலய திருமணர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி உதவிப் பிரதேச செயலர் எஸ்.ராஜீவ் தலைவராகப் பங்கேற்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி சு.சுதோகுமார் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீநிவாசன்,கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி கே.பொன்னையா ஆகியோர் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் இல்லத் தலைவர் எம்.சிவசண்முகம் கலந்து கொள்ளவுள்ளார்.(இ-5-60)




## சிரேஷ்ட பிரஜைகள் தினம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கிழக்கு ஜே/197 சிரேஷ்ட பிரஜைகள் சங்கம் நடத்தும் சர்வதேச சிரேஷ்ட பிரஜைகள் தின விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சுன்னாகம் கதிரமலைச் சிவன்கோவில் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக இளைஞர் சேவைகள் ஓய்வு நிலை உதவி இயக்குநர் தி. சிவதட்சணாமூர்த்தி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக வலி.தெற்கு பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் க.முருகையா, ஜே/197 கிராம அலுவலர் எஸ். சிவானந்தன் ஆகியோர் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக இலங்கை வங்கி சுன்னாகம் கிளை சிரேஷ்ட முகாமையாளர் திருமதி சுமங்கலா பிரபாகரன் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது ஆசியுரையை பிரம்மஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் வழங்குவதுடன் வரவேற்புரையை சங்கத்தின் செயலாளர் கா.நல்லதம்பியும் தலைமையுரையை சு.துரைசிங்கமும் வழங்கவுள்ளனர். (இ-5)

## முதியோருக்கான போட்டிகள்

சிறுவர், முதியோர், மாற்றுவலுவுடையோர் தினத்தையொட்டி கரவெட்டி பிரதேச செயலகம் நடத்தும் முதியோருக்கான போட்டிகள் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே போட்டிகளுக்கு கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனைத்து முதியவர்களையும் கல ந்து கொள்ளுமாறு உதவிப் பிரதேச செயலர் எஸ். ராஜீவ் கேட்டுள்ளார். (இ-5-60)

## பேராசிரியர் சண்முகதாசின் பவளவிழா



யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்தும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கப் பெருந்தலைவர் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாசின் பவளவிழாவும் சண்முகதாஸ் இணையரின் திருமணப் பொன்விழாவும் எதிர்வரும் 14ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணி மண்டபத்தில் தமிழ்ச் சங்கத்தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கு.பாலஷண்முகன் தமிழ்த்தாய் வாழ்த்திசைப்பார் இந்நிகழ்வின் அனுசரணையாளர்களான கரிகணன் நிறுவன உரிமையாளர் சி.ராஜ்குமார் தம்பதியரும் திருநெல்வேலி பிரகாந் நிறுவன உரிமையாளர் கோ.ரஜனிகாந் தம்பதியரும் மாங்கல விளக்கேற்றுவர்.

தமிழ்ச் சங்கத்தின் உபதலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தொடக்கவுரையையும், வைத்தீஸ்வரா.சோ.இ.பிரணதார்த்தி ஹரக்குருக்கள், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், ஓய்வுநிலைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, புதிய உயர் கல்லூரி இயக்குநர் அருள்நங்கை சண்முகநாதன், தமிழ்ச்சங்க உபதலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன் ஆகியோர் வாழ்த்துரைகளையும் ஆற்றுவர். நிகழ்வில் அகளவைப் பரிசிலாக ஜப்பானியக்காதல் பாடல்கள் என்ற நூல் வெளியிட்டு வைக்கப்படும். இதன் வெளியீட்டுரையை முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் ஆற்றுவார்.

பேராசிரியரின் பவளவிழா இவ்வாண்டில் கனடா, சுவிஸ், ஜேர்மனியில் முன்னெடுக்கப்பட்ட பின்னர் தற்போது யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## இலவச நூல் விநியோகம்

இந்துக்களால் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்ற கேதாரகௌரி விரதம் எதிர்வரும் 22ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் கௌரிக்காப்பு பாடல்கள் அடங்கிய கையடக்க இலவச நூல் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

காயத்திரி பப்ளிகேஷன் சார்பில் அதன் உரிமையாளர் வே.நவமோகன் மேற்படி கௌரிகாப்பு நூல்களை இலவசமாக விநியோகித்து வருகின்றார்.

இக்கைந்நூலைப் பெற்றுக்கொள்ள விரும்பும் இந்து ஆலயங்கள், இந்து சமய நிறுவனங்கள் மற்றும் விரதத்தை அனுஷ்டிக்கவுள்ளோர் 9×4 அங்குல அளவுள்ள கடித உறையில் தமது சுயமுகவரியை எழுதி 10 ரூபா பெறுமதியுடைய முத்திரையை ஒட்டி அதனை வேறொரு கடித உறையில் வைத்து வே.நவமோகன், காயத்திரி பப்ளிகேஷன், இல.68, டீ.சில்வா றோட், களுபோவில, தெகிவளை எனும்முகவரிக்கு அனுப்பிவைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் அனுப்பி வைக்கப் படும் கடித உறையின்மேல்பக்கமூலையில்கௌரிகாப்பு இலவச வெளியீடு என எழுதப்பட்டிருத்தல் வேண்டும் எனகாயத்திரி பப்ளிகேஷன் உரிமையாளர் வே.நவமோகன்அறிவித்துள்ளார். (இ-5)




தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபனால் 2015 ஆம் ஆண்டுக்கான குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து ரூபா 75 ஆயிரம் பெறுமதியான சீமெந்துப் பைக் கற்றுக்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. அண்மையில் பாடசாலைகளில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினருடன் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## மாணவன் மீது தாக்குதல் ஆசிரியைக்கு விளக்கமறியல்

காலி, ஹறுபலக மகா வித்தியாலயத்தில் முதலாம் தரத்தில் பயிலும் மாணவனை கடுமையாக தாக்கியதாக கூறப்படும் அந்த வித்தியாலயத்தைச்சேர்ந்த ஆசிரியை யொருவரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு காலி பதில் நீதவான் லலித் பதிரண உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபரான ஆசிரியையை கைதுசெய்த பொலிஸார், அவரை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆஜர்படுத்திய போதே அவர் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

மாணவனின் வைத்திய அறிக்கையை முன்வைக்குமாறும் நீதவான், பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் மனநிலை வைத்தியரை சந்தித்து சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகளை சந்தேகநபரான ஆசிரியைக்கு செய்துகொடுக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-10)

## உண்ணாவிரதம் இருந்த 8 ஈழத்தமிழர்கள் கைது

(கொழும்பு)

**இந்தியாவில் திருச்சி விசேட முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் உணவு தவிர்ப்பு போராட்டம் நடத்தி வரும் எட்டு இலங்கைத் தமிழர்கள் நேற்று முற்பகல் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

தற்கொலைக்கு முயற்சித்ததாகத் தெரிவித்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த முதலாம் திகதி முதல் இந்த இலங்கையர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் மகாத்மா காந்தி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத ஆட்கடத்தல் மற்றும் வெடிப்பொருட்கள் தொடர்பிலான வழக்குகளின் அடிப்படையில் இவர்கள் விசேட முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். (இ-10)

### திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு விலைக்கழிவுடன்

## மோ.சைக்கிள்கள் வழங்கக்கோரி வடக்கு முதலமைச்சருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் கீழ் உள்ள திணைக்களங்களில் கடமையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் தமக்கும் குறைந்த விலையில் மோட்டார் சைக்கிள் வழங்கக்கோரி வடக்கு மாகாண முதலமைச்சருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

வடக்கு மாகாண சபையின் கீழுள்ள பல்வேறு திணைக்களங்களில் கடமையாற்றுகின்ற மேற்படி உத்தியோகத்தர்கள் 1999, 2005 ஆம் ஆண்டுகளில் நியமனம் பெற்றவர்கள்.

இவர்கள் கிட்டத்தட்ட 15 வருடங்களாக எதுவித சலுகைகளையோ அல்லது பதவியுயர்வோ இன்றி சேவையாற்றி வருகின்றனர்.

எனினும் 2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கேற்ப முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் வெளிக்கள வேலைகளில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்களுக்கு குறைந்த கட்டணத்தில் வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் இவர்களுக்கு வழங்கப்படவில்லை.

தமது நியாயமான கோரிக்கைகள் குறித்து வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டும் அலட்சியப்படுத்தும் செயற்பாடு இதுவாகும். மத்திய அரசின் கீழ் கடமையாற்றும் புதிய நியமனம் பெற்ற குறுகிய காலத்தில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படாமை,

வடக்கு மாகாணத்தில் பல் வேறு இடங்களிலும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் சேவையாற்றி தற்போது யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் எமக்கு கிடைக்காதமை வேதனையான விடயமாகும் எனப்பல விடயங்கள் குறிப்பிடப்பட்டு இவ்விடயங்களில் கவனம் செலுத்தி உடனடியாக எமக்கு விலைக்கழிவுடன் மோட்டார் சைக்கிள் கிடைக்க நடவடிக்கையெடுக்குமாறு அதில் மேலும் கோரப்பட்டுள்ளது. (இ-4)




அகவை 60 இல் வாழ்த்துகின்றோம்

திரு.அ.பீற்றர்
(ஆசிரிய ஆலோசகர்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் ஏழு வருடங்கள் கிறிஸ்தவ பாட ஆசிரிய ஆலோசகராகச் சிறப்புடன் பணியாற்றி ஓய்வு பெறும் திரு. அ.பீற்றர் அவர்கள் தமது ஓய்வுக்காலத்தை குடும்பத்தினருடன் சிறப்பாகக் கழிக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள், கல்வி அபிவிருத்திப் பிரிவு
வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.


## பொருளாதாரத்தை மேம்படுத்த 2016இல் புதிய வேலைத்திட்டம்

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் சமுர்த்தி உதவிபெறும் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் புதிய அரசாங்கம் அடுத்த வருடத்தில் புதிய வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தப் போவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இதற்கான வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமாறும் அதன்போது கிராமிய, குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் சமுர்த்தி உதவி பெறுவோரின் பொருளாதாரம் வீடமைப்பு விடயத்தில் முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என நாம் அமைச்சர் எஸ். பி. திஸாநாயக்கவுக்குப் பணிப்புரை விடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையால் 2635 பேருக்குப் புதிய நியமனங்களை வழங்கும் விசேட வைபவம் நேற்று கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெற்றது. அமைச்சர் மத்தும பண்டார, பிரதியமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே, இராஜாங்க அமைச்சர் மொஹான்லால் கிரேரு உட்பட அமைச்சர்கள் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்ட இந்நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி,

பார்வையற்றோர் சங்கத்தின் பிரதிநிதிகள் என்னைச் சந்தித்து தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து என்னிடம் தெளிவுபடுத்தினர். தம்மீது செலுத்தப்படும் அக்கறையின்மை தொடர்பில் அவர்கள் விபரித்தனர். தமது பிரச்சினைகளுக்கும் தீர்வு பெற்றுத் தருமாறு அவர்கள் என்னிடம் கேட்டுக்கொண்டனர்.

அவர்களில் இருந்த பட்டதாரியொருவர் என்னிடம் தெரிவித்தபோது: தமது சங்கத்தில் பார்வையற்ற பட்டதாரிகள் பலர் தொழில் செய்கின்றனர். எனினும் கடந்த 3-4 வருடங்களாக தாம் பெற்றுக்கொள்ளும் சம்பளத்தைக் கையில் எடுத்தவுடன் முன்பு போல், அந்த நாளை எவ்வளவு என்று இனங்காண முடிவதில்லை என்றும் தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் விபரிக்கும்போது முன்பெல்லாம் மத்திய வங்கி அச்சடிக்கும் தாள்களை எம் கையில் வைத்து தொட்டுப் பார்க்கும்போது அது எவ்வளவு பெறுமதியானது என்று உணர முடியும். இப்போது அச்சிடப்படும் தாள்களில் அவ்வாறு இனங்காண முடிவதில்லை என்றும் அவர் கூறினார்.

நான் உடனடியாகவே மத்திய வங்கியுடன் தொடர்பு கொண்டு புதிதாக தாள்காசு அச்சடிக்கும்போது அவை நான்கு வருடங்களுக்கு முன்னர் இருந்ததைப் போல் அச்சடிக்குமாறு பணிப்புரை விடுத்தேன்.

நாட்டில் இவ்வாறு ஒவ்வொரு பிரிவினர், சமூகத்தினர் உள்ளனர் அவர்களுக்கு வெவ்வேறு பிரச்சினைகள் உள்ளன. அவற்றை இனங்கண்டு செயற்படுவதே அரச ஊழியர்களின் கடமையாகும்.

நாட்டில் வறுமை உள்ளமை- இல்லாமைக்கிடையிலான இடைவெளி போன்றவைகள் பெரும் பிரச்சினையாகவுள்ளன. கிராமங்களில் வாழும் மக்கள், குறைந்த வருமானம் பெறும் மக்கள், சமுர்த்தி உதவி பெறும் மக்கள பெரும் கஷ்டங் களை எதிர்நோக்குகின்றனர். அவர்கள் பெரும் வட்டிக்கடன் பெற்றே வாழ்க்கையை நடத்துகின்றனர்.

சில தனியார் நிதி நிறுவனங்கள் கிராமப் பகுதிகளுக்குப் படையெடுத்து கொள்ளை இலாபத்தில் கடன்களை அம்மக்களுக்கு வழங்கி வருகின்றன. அம்மக்களை ஆக்கிரமித்துக்கொண்டுள்ளன.

நாம் நாட்டு மக்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் திட்டங்களின் போது அரச ஊழியர்களின் பங்களிப்பு மிக அவசியமானது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா:37
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்
தொ.இ: B/5069

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 41சூரிசெவ் 11 ல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BSC/பொறியியலாளர்
தொ.இ: B/5071

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 30
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:O/L/சொந்ததொழில்
தொ.இ: B/5073

பிறப்பு: 1982 RC
நட்சத்திரம்: பரணி
கி.பா: 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: B/5074

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 49
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BA,MA/அரசதொழில்
தொ.இ: G/5095

பிறப்பு: 1966 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 25செவ் 4 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/5096

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 22
தகைமை/தொழில்:பட்டதாரி/அரச தொழில்
தொ.இ: G/5099

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 67செவ் 8 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
தொ.இ: G/4472

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# 196 பில்லியன் ரூபாய் பணம் ஓய்வூதியத்துக்காக செலவு

## ஒவ்வொரு வருடமும் அரசு ஒதுக்கீடு

ஓய்வூதிய சம்பளம் வழங்குவதற்காக அரசாங்கம் 196 பில்லியன் ரூபாவை வருடாந்தம் செலவிட்டு வருவதாக பொது நிர்வாக முகாமைத்துவ அமைச்சர் மத்தும பண்டார தெரிவித்தார்.

எதிர்வரும் காலத்தில் தேசிய ஓய்வூதியக் கொள்கையொன்றை வகுத்து செயற்படுத்தி அதன் மூலம் மேலும் சலுகைகளை ஓய்வூதியக்காரர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதுடன் அரச ஊழியர்களுக்கான 'அக்ரஹார' மருத்துவ காப்புறுதியை ஓய்வூதியக்காரர்களுக்கும் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் உத்தேசித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஓய்வூதிய தின மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது.

சபாநாயகர் கரு ஜயசூரிய பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இந்நிகழ்வில் அமைச்சர் மத்தும பண்டார, பிரதியமைச்சர்கள் ஹர்ச டி சில்வா, சுசந்த புஞ்சி நிலமே, மலேசிய பொது சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் டோலோ கோன் வீ உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் மத்தும பண்டார,

தமது வாழ்க்கையின் முக்கியமான காலத்தை பொது சேவைக்காக அர்ப்பணித்து ஓய்வு பெற்றுள்ளவர்கள் கௌரவப்படுத்தப்பட வேண்டும்.

புதிய ஓய்வூதியக் கொள்கையொன்றை நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்த தேசிய அரசாங்கம் ஓய்வூதிய சம்பள முரண்பாட்டுக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுத்துள்ளது. (இ)

# யாழில் சர்வதேச முதியோர்தின நிகழ்வும் முதியோர் அமைப்பின் அங்குரார்ப்பணமும்

(யாழ்ப்பாணம்)

இலங்கைமனிதஉரிமைஆணைக்குழுவின் யாழ். கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சர்வதேச முதியோர் தின நிகழ்வும் மாவட்ட முதியோர் அமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வும் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை யாழ்ப்பாணம் சென் ஜோன் அம்புலன்ஸ் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகம் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி. நளாயினி இன்பராஜ் கலந்து கொள்ளவுள்ளார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வதேச முதியோர் தின நிகழ்வில் அரசு, அரசு சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையைத் தொடர்ந்து பல கலந்துரையாடல்களை மேற்கொண்ட ஆணைக்குழு அதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இவ்வமைப்பின் ஆரம்ப நிகழ்வாக இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அத்துடன் இந்நிகழ்வின்போது நிர்வாகக்குழு தெரிவும் இடம்பெறும்.

மாவட்ட முதியோர் அமைப்பிற்கான சிறந்த அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

எனவே சகல கிராம மட்ட முதியோர் அமைப்பின் உறுப்பினர்களையும் நலன் விரும்பிகளையும் கலந்து கொள்ளுமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (இ-5)




- ❖ 1138 - சிரியாவில் பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டது. 200,000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- ❖ 1634 - டென்மார்க், மற்றும் ஜெர்மனியில் இடம்பெற்ற பெரும் வெள்ளத்தினால் 15,000 பேர் கொல்லப்பட்டனர்.
- ❖ 1801 - காளையார் கோயிலைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் அதனையும் சுற்றியுள்ள காடுகளையும் தீயிட்டுக் கொளுத்தினர்.
- ❖ 1811 - ஜோன் ஸ்டீவன்ஸ் கண்டுபிடித்த ஜூலியானா என்ற முதலாவது நீராவிப் படகுக் கப்பலின் சேவை நியூ யோர்க்கிற்கும் நியூ ஜேர்சிக்கு இடையில் ஆரம்பிக்கப்பட்டது.
- ❖ 1852 - ஆஸ்திரேலியாவின் மிகப் பழமையான சிட்னி பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.
- ❖ 1865 - ஜமெய்க்காவில் நூற்றுக்கும் அதிகமான கறுப்பின மக்கள் அரசுக்கெதிரான எதிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இது அன்றைய பிரித்தானிய அரசால் நசுக்கப்பட்டதில் நானூறுக்கும் அதிகமான கறுப்பினத்தவர்கள் கொல்லப்பட்டனர்.
- ❖ 1899 - இரண்டாவது போவர் போர் தென்னாபிரிக்காவில் ஐக்கிய இராச்சியத்துக்கு எதிராக ஆரம்பமானது.
- ❖ 1941 - மக்கெடோனியாவில் தேசிய விடுதலைப் போர் ஆரம்பமானது.
- ❖ 1944 - துவீனிய மக்கள் குடியரசு சோவியத் ஒன்றியத்துடன் இணைந்தது.
- ❖ 1954 - வட வியட்நாமை வியட் மின் படைகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தன.
- ❖ 1958 - நாசாவின் முதலாவது விண்கலம் பயனியர் 1 சந்திரனை நோக்கி ஏவப்பட்டது. இது சந்திரனை அடையாமலே மீண்டும் இரண்டு நாட்களின் பூமியில் வீழ்ந்து எரிந்தது.
- ❖ 1968 - நாசா முதற் தடவையாக மூன்று விண்வெளி வீரர்களை அப்பல்லோ 7 விண்கலத்தில் விண்ணுக்கு ஏவியது.
- ❖ 1984 - சலேஞ்சர் விண்ணோடத்தில் சென்ற கத்ரின் சலிவன் விண்ணில் நடந்த முதலாவது அமெரிக்கப் பெண் என்ற பெருமையைப் பெற்றார்.
- ❖ 1987 - விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்திய அமைதிப் படை பவான் நடவடிக்கை என்ற பெயரில் போரை ஆரம்பித்தனர்.
- ❖ 1998 - கொங்கோவில் வானூர்தி ஒன்று தீவிரவாதிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதில் 40 பேர் கொல்லப்பட்டனர்.
- ❖ 2002 - பின்லாந்தில் கடைத் தொகுதி ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் ஏழு பேர் கொல்லப்பட்டனர்.

**பிறப்புகள்**

- ❖ 1738 - ஆர்தர் பிலிப், நியூ சவுத் வேல்ஸ் முதலாவது ஆளுநர் (இ. 1814)
- ❖ 1758 - ஹென்ரிச் ஒல்பெர்ஸ், செருமானிய மருத்துவர், வானியலாளர் (இ. 1840)
- ❖ 1820 - ஆணல்ட் சதாசிவம்பிள்ளை, ஈழத்தின் தமிழறிஞர், தமிழாசிரியர், இதழாசிரியர், புலவர் (இ. 1896)
- ❖ 1826 - மாயூரம் வேதநாயகம்பிள்ளை, தமிழ்ப் புதின முன்னோடி (இ. 1889)
- ❖ 1884 - எலினோர் ரூசுவெல்ட், அமெரிக்க அரசியல்வாதி (இ. 1962)
- ❖ 1896 - உரோமன் யாக்கோபுசன், உருசிய-அமெரிக்க மொழியியலாளர் (இ. 1982)
- ❖ 1902 - ஜெயபிரகாஷ் நாராயணன், இந்திய அரசியல்வாதி (இ. 1979)
- ❖ 1942 - அமிதாப் பச்சன், இந்திய நடிகர்
- ❖ 1947 - லூகாசு பாபடெமோசு, கிரேக்கப் பிரதமர்
- ❖ 1952 - ஜசக் இன்பராஜா, ஈழத்து நாடகக் கலைஞர் (இ. 2014)
- ❖ 1962 - ஆன் என்ரைட், அயர்லாந்து பெண் எழுத்தாளர்
- ❖ 1973 - தகேஷி கனேஷிரோ, சப்பானிய நடிகர், பாடகர்
- ❖ 1977 - மாட் போமேர், அமெரிக்க நடிகர்

**இறப்புகள்**

- ❖ 1889 - ஜேம்ஸ் பிரிஸ்காட் ஜூல், ஆங்கிலேய இயற்பியலாளர் (பி. 1818)
- ❖ 1896 - ஆன்டன் புரூக்னர், ஆத்திரிய இசையமைப்பாளர் (பி. 1824)
- ❖ 2006 - ஏ. ஜே. கனகரத்னா, ஈழத்தின் பிரபல பத்திரிகையாளர், எழுத்தாளர். (பி. 1934)

**சிறப்பு நாள்**

- ❖ சர்வதேச பெண் குழந்தைகள் தினம்

# தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வை நோக்கி செல்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்

## கூட்டமைப்பின் வவுனியா செயற்குழுவில் தீர்மானம்

(குருமன்காடு)

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை நோக்கி செல்வதற்கு அர்ப்பணிப்புடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு செயற்படும் என கூட்டமைப்பின் வவுனியா செயற்குழுவில் நேற்று முன்தினம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா மாவட்ட செயற்குழு நேற்று முன்தினம் வட மாகாண சுகாதார அமைச்சரின் வவுனியா இணைப்பு செயலகத்தில் கூடியபோதே இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழீழ விடுதலை இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலை கழகம், தமிழரசுக் கட்சிகளின் வவுனியா மாவட்ட பிரதிநிதிகள் ஒன்றுகூடி வவுனியா மாவட்டத்தில் மக்களின் நலன்சார் திட்டங்களை முன்னெடுப்பது மற்றும் அரசியல் ரீதியான வேலைத்திட்டத்தை முனைப்புடன் செயற்படுத்துவது தொடர்பில் கூடி ஆராய்ந்துள்ளனர்.

இதன்போது கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் தனித்தனியே செயற்பட்டு தமிழ் மக்களின் எதிர்ப்பார்ப்புகளுடனான அபிலாஷைகளில் குழப்பத்தை ஏற்படுத்தாது ஒன்றிணைந்து வவுனியா மாவட்டத்தில்செயற்படுத்துவதுடன் அதனை ஏனைய வடக்கு கிழக்கிலும் முன்னெடுப்பதற்கான முதற்கட்ட பணி தொடர்பாகவும் ஆராயப்பட்டிருந்தது.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளான தமிழீழ விடுதலை இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலை கழகம், தமிழரசுக் கட்சி என்பவற்றின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி மாவட்டத்தில் மக்கள் எதிர்நோக்கும் அத்தியாவசியமான உடனடிப்பிரச்சினைகள் தொடர்பாகவும் அபிவிருத்தி தொடர்பாகவும் பொதுவான அணுகுமுறையை கையாளுதல் மற்றும் அவ் விடயங்களை மக்களுக்கு எடுத்துச் செல்லுதல் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டதுடன் முடிவுகளும் எட்டப்பட்டிருந்தது.

நீண்டகாலமாக எவ்வித விசாரணைகள் இன்றி சிறையில் வாடுகின்ற அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் பல்வேறு காலப்பகுதிகளில் காணாமற்போனோர் தொடர்பில் தொடர்ந்தும் முனைப்புடன் செயற்படுவதுடன் இக்கோரிக்கைகளை வலுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை பல்வேறு தரப்புகளின் ஒத்துழைப்பைப் பெற்று நடைமுறைப்படுத்துவது எனவும் கலந்துரையாடப்பட்டிருந்தது.


இதேவேளை மாவட்ட, பிரதேச, கிராமிய மட்டத்தில் மக்களுக்கான தேவைகளை இனங்கண்டு அவற்றிற்கான தீர்வுகளை முன்னெடுப்பதற்கான வேலைத் திட்டங்களை ஒன்றிணைந்து செயற்படுத்துவதுடன் மீள் குடியேறிய மக்களின் வாழ்வாதாரப்பெருக்கம் உட்பட வவுனியா மாவட்டத்தில் வறுமையை இல்லாதொழிக்க கூட்டாக செயற்படுத்தல் எனவும் முடிவுகள் எட்டப்பட்டிருந்தது.

அத்துடன் பொது மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் நிர்வாக ரீதியிலான பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் மக்களுக்கு நிர்வாக செயற்பாடுகளை மேற்கொள்ள கூட்டமைப்பாலான உதவிகளையும் ஏற்படுத்துவது எனவும் தீர்வுகள் காணப்பட்டிருந்தது.

அத்துடன் மாதாந்தம் இவ்வாறான செயற்குழுக்கூட்டத்தை கூட்டி அவ்வப்போது செயற்படுத்த வேண்டிய வேலைத் திட்டங்களை மற்றும் தொடர் நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராய்வது எனவும் இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டிருந்தது.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், மருத்துவர் சிவமோகன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம், மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், மா.தியாகராசா, எம்.பி. நடராஜா, இ. இந்திரராசா மற்றும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர். (இ-2-250)

## சர்வதேச பெண் குழந்தைகள் தினம்




சர்வதேச பெண் குழந்தைகள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. பெண் குழந்தைகளின் உரிமைகளை நிலைநாட்டவும், அவர்களது படைப்புகளை அங்கீகரிக்கும் விதமாகவும் சர்வதேச பெண் குழந்தைகள் தினம் கொண்டாட ஐ.நா சபை 2012 ஆம் முடிவு செய்தது.

அதன்படி ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் 11 ஆம் நாள் சர்வதேச பெண் குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

பெண குழந்தைகளின் பாதுகாப்பிற்கு பெற்றோர்களின் பங்கு முக்கியம். பெண் குழந்தைகளுக்கு வீட்டிலிருந்தும் சமூகத்தில் இருந்தும் பல வகையில் உடல் ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் பாதிப்புகள் உருவாகின்றன.

சமுதாயத்தில் பெண் குழந்தைகளின் பிறப்புரிமையை நிலைநாட்டவும், பாலியல் வன்புணர்ச்சியிலிருந்து பெண்குழந்தைகளை காக்கவும் கடுமையான சட்டங்களைக் கொண்டு வரவேண்டும்

# நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் மரணம் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குக

## இலங்கையிடம் அனைத்து நாடாளுமன்ற சங்கம் கோரிக்கை




(கொழும்பு)

**இலங்கையின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் மரணங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்த விபரங்களை சமர்ப்பிக்குமாறு அனைத்து நாடாளுமன்ற சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

ஜெனிவாவில் ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள அனைத்து நாடாளுமன்ற சங்கத்தின் மாநாட்டில் இதனைச் சமர்ப்பிக்குமாறு இலங்கையிடம் கோரப்பட்டுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால இதனைக் தெரிவித்தார்.

முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர்களான ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம், மகேஸ வரன் மற்றும் டி.ம். தசநாயக்க ஆகியோரின் மரணங்கள் தொடர்பாக இடம் பெற்று வரும் விசாரணைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு இலங்கையிடம் கோரப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் ஜெனிவாவில் ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள அனைத்து நாடாளுமன்ற சங்கத்தின் மாநாட்டில் கலந்து கொள்ளும் இலங்கைக் குழுவினர் இது குறித்த விசாரணைகளை முன்னெடுக்கும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடமிருந்து தகவல்களைப் பெற்று அறிக்கையொன்றை தயாரிப்பர்.

ஜெனிவா செல்லும் குழுவுக்குபிரதிசபாநாயகர்தலைமை தாங்குகின்றார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனோமா கமகே, ரஞ்சித் அலுவிகார, நிமல் ரட்நாயக்க, சாந்தி சிறிஸ்கந்தராஜா, எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் அதில் இடம்பெறவுள் ளனர்.

அனோமா கமகே, சாந்தி சிறிஸ்கந்தராஜா ஆகியோர் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் சங்கத்தின் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட் டத் தொடரில்கலந்துகொள்வார்கள்.

இளம்நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் இலங்கையை நிமல் ரட் நாயக்க பிரதிநிதித்துவம் செய்வார் என்று பிரதி சபாநாயகர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## பிரபல போதைப்பொருள் வர்த்தகர் குடு சம்பத் கைது

கொழும்பின்பிரபல போதைப பொருள் வர்த்தகர் குடு சம்பத் நேற்றுமுன்தினம் காலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, வெலிக்கடைப் பிரதேசத்தில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றி வளைப்பு சோதனையொன்றின் போது அவர் பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டுள்ளார்.

வெலேசுதா, குடு சித்தீக் போன்றவர்களுக்கு அடுத்த நிலை போதைப்பொருள் வர்த்தகரான குடு சம்பத் நீண்ட காலமாக பொலிஸாரால் தேடப்பட்டு வந்த நிலையில் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (இ-10)


## படையினர் எல்லா நேரத்திலும் ஆயத்தமாகவே உள்ளனராம்

### இராணுவத் தளபதி கூறுகிறார்

படையினர் எல்லா நேரத்திலும் ஆயத்தமாகவே இருக்கின்றார்கள் என இராணுவத் தளபதி கிருசாந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவம் 66 ஆம் ஆண்டு நிறைவை கொண்டாடும் நிலையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தினரின் ஒழுக்கம், மனிதாபிமானம் மற்றும் நேர்மைத் தன்மை குறித்து உலக நாடுகள் பாராட்டுவதாகத் தெரிவித்துள்ளார்.



நீண்ட காலமாக இலங்கை இராணுவம் தொழில்சார் தன்மையை வெளிப்படுத்தி வருவதாகக் தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்திற்கு சர்வதேச ரீதியில் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும். ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் பணிகளில் படையினர் அதிகளவில் சேவையில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

## மகிந்தவுக்கு எதிராக ஒருபுதிய சாட்சியாளர்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் முன்னாள் முக்கிய அரசியல்வாதி ஒருவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக சாட்சியாளராக மாறுவதற்கு ஆயத்தமாவதாக தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த அரசியல்வாதி கடந்த அரசாங்கத்தின் முக்கிய அமைச்சு பதவியில் செயற்பட்டுள்ளதாக அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அத்துடன் இவர் முன்னாள்ஜனாதிபதிக்கு மிகவும்நெருக்கமாக செயற்பட்டவராவார்.

இதற்கு முன்னர் சஜின் வாஸ் குணவர்த்தன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக சாட்சியளிப்பதற்கு இணக்கம் வெளியிட்டார்.

எப்படியிருப்பினும் சாட்சியளிப்பதற்கு ஆயத்தமாக இருக்கும் இப் புதிய கதாபாத்திரம் மிகவும், சிக்கலான நிலைமையில் உள்ளதாக தெரிய வந்துள்ளது.

அவர் அந் நிலைமையை தடுத்துக்கொள்வதற்காக இந்நபர் கடுமையாக முயற்சித்து வருகின்றார் என அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-10)

## அத்துமீறும் மீனவர்களைத்தடுக்க சர்வதேச ஒத்துழைப்பு அவசியமே

### வாசுதேவ எம்.பி.அறிவுரை



இந்திய மீனவர்கள் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபடுவதனை தடுக்க சர்வதேசத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முடியும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பிலான பிரச்சினை போர் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னரே ஆரம்பிக்கின்றது. போர் இடம்பெற்ற காலத்தில் இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டனர்.

30 ஆண்டுகளாக இந்திய மீனவர்களின் வாழ்வாதாரமாக காணப்பட்ட ஓர் விடயத்தின் உரிமையையே நாம கோருகின்றோம்.

இந்திய மீனவர்களின் படகுகளை நிறுத்துமாறு ஜனாதிபதி கூறுகின்றார். ஒரே நேரத்தில் 300-400 மீன்பிடிப் படகுகளை எவ்வாறு தடுத்து நிறுத்துவது.

பல நாடுகளில் இந்தப் பிரச்சினை காணப்படுகின்றது. ஐரோப்பாவிலும் இந்தப் பிரச்சினை காணப்பட்டது. பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்தது.

பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படவேண்டும்.

சர்வதேச மீன்பிடி சட்ட திட்டங்களுக்கு அமைய சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிக்கப்பட வேண்டும்.

போர் தொடர்பில் மட்டுமா சர்வதேச உதவி கோரப்பட வேண்டும்? மீனவர் பிரச்சினைகளுக்கு சர்வ தேச சமூகம் தீர்வு வழங்க முடியும்.

சீனப் படகுகள் இலங்கைக் கொடியுடன் இலங்கையில் மீன்பிடியில் ஈடுபடுகின்றன. பிடிக்கப்படும் மீன்களில் ஒரு பகுதி எமக்கு வழங்கப்படுகின்றது.

கூட்டுஆணைக்குழுஒன்றை நிறுவி இழக்கப்படும் மீன் வளத்தை கணக்கிட்டு அதற்காக இந்தியாவிடமிருந்து ஓர் தொகையை பெற்றுக்கொண்டு அதனை இலங்கை மீனவர்களின் நலனுக்காக பயன்படுத்திக் கொள்ள முடியும் என வாசுதேவ நாணயக்கார நாடாளுமன்றில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## வாரம் ஒரு தகவல்

### வாழ்க்கை

அறவழியில் நடக்கக்கூட பலர் பயப்படுகிறார்கள். "அறவழி நடந்த இராமர் கஷ்டப்பட்டார். தருமர் கஷ்டப் பட்டார். அயோக்கியர்கள் சுகவாழ்வு வாழ்கிறார்கள்" என்று பலர் புலம்புகிறார்கள். இது மாயை. பெரிய பொய். இராமர் கஷ்டப் பட்டார் என்று உங்களுக்கு யார் சொன்னது? அது நீங்கள் நினைத்துக் கொண்ட பொய்.இராமர் கஷ்டப்பட்டதாக உங்க ளிடம் வந்து சொன்னாரா? தருமர் துன்பப்பட்டதாக உங்களிடம் வந்து அழுதாரா? அவர்களுக்கு நேர்ந்த சோதனைகளை துன்பங்களாக நீங்கள் கருதுகிறீர்கள். அவர்கள் கருதுவதே இல்லை. நெருப்புக்கு காகிதம் அஞ்சும். தங்கம் பயப்படுமா? நீங்கள் அறவழியில்நடந்தால் வரும் அனுபவங்களைத் துன்பம் என்று முத்திரை குத்தாதீர்கள். அறவழியில் நடப்ப வருக்கு ஒரு நாளும் துன்பம் வராது.

முன்பெல்லாம் அரக்கர்கள் கொம்பு முளைத்த தலையோடு, வெளியே வழியும் கொடுவாள் பல்லோடு, எலும்பு மாலையோடு, விலங்குத் தோல் உடுத்தி அலைந்தனர். இப்போது சுடிதார் அரக்கிகள்,பேண்ட்கோட் அரக்கர்கள்,புடவை இராட்சசிகள், வேஷ்டி அசுரர்கள் பெருகி விட்டார்கள்.

ஒரு கல்லில் இருந்து வேண்டாத பகுதிகளை வெளியேற்றி விட்டால் -மாசுகளை நீக்கி விட்டால் உள்ளிருக்கும் அழகான சிற்பம் வெளிப்படுகிறது. நம் வாழ்வும் அப்படித் தான். நமது ஆன்மா கடவுள் தான். அதன் மீது உடம்பு, மனம், ஆசாபாசங்கள், ஜாதி,குலம், பெயர், பரம்பரை, அகங்காரம் என்று வேண்டாத மாசுகள் மூடிக்கிடக்கின்றன. கொஞ்சம் கொஞ்சமாக இவற்றை வெட்டி செதுக்கினால்,வெளியில் எறிந்தால் உள்ளே இருக்கிற கடவுள் தெரிய ஆரம்பிப்பார். வாழ்க்கை இதற்காகவே என்பது சிலரது செய் தி.

நோய்களும்,மரணமும் நம்மைக் கபளிகரம் செய்ய ஆசையாய் காத்திருக்கின்றன. இப்படி சராசரியாகச் செத்துப் போவது நம்முடைய நோக்கம் அல்ல. நம்மில் இருக்கிற தெய்வத்தை உணர்ந்து,மரணம் அடையாத அமரராவது நமது இலட்சியம்.

# ஓமந்தை—பெரியவிளாத்திக்குளம் புகையிரத கடவையை மக்கள் பாவனைக்கு திறந்துவிடுங்கள்

## மத்திய போக்குவரத்து அமைச்சருக்கு வ.மா.சுகாதார அமைச்சர் கோரிக்கை

(குருமன்காடு)

**வவுனியா ஓமந்தையிலிருந்து பெரிய விளாத்திக் குளம செல்வதற்கான புகையரத கடவையை மீண்டும் மக்கள் பாவனைக்கு திறந்துவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மத்திய போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார.**

வவுனியா - யாழ்ப்பாணம் புகையிரத சேவை விஸ்தரிப்பின் போது ஓமந்தை புகையிரத நிலையம் மீளமைக்கப்பட்டது. இதன் போது ஓமந்தை நகரத்தையும் பெரிய விளாத்தி குளத்தையும் இணைக்கும் பிரதான வீதி புகையிரத மேடை அமைப்பதற்காக மூடப்பட்டது.

இதற்கு பதிலாக ஓமந்தை கூட்டுறவுச்சங்கத்திற்கு அருகில் புதிய பாதை அமைக்கப்பட்டுள்ளது.

ஓமந்தை நகரத்திலிருந்து 50 மீறர் தூரம் பயணிக்க வேண்டிய பொது மக்கள் தற்போது புதி தாக அமைக்கப்பட்ட பாதையூடாக 2 கிலோ மீற்றர் வரை பயணிக்க வேண்டியுள்ளது.

இதனால் வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்களும் பாடசாலை செல்லும் மாணவர்களும் பெரிதும் சிரமப்படுவதாக மாகாண அமைச்சரின் கவனத்திற்கு கொணடுவரப்பட்டதை தொடர்ந்து மத்திய போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை அண்மையில் சந்தித்த சுகாதார அமைச்சர் மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இதற்கு பதிலளித்த போக்குவரத்து அமைச்சர், இது தொடர்பில் சாதகமான முடிவை எடுப்பதற்கு அதிகாரிகளை பணித்துள்ளதாகவும், விரைவில் இது குறித்து ஆராய்வதற்கு குழுவொன்றை அனுப்பி பழைய பாதையை திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளதாகவும் தெரிவித்தார். (2-250)

# பொலிஸ் சேவையில் தமிழ் இளைஞர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை வவுனியாவில் இன்று

வடமாகாண பொலிஸ் நிலையங்களில் பொதுமக்களுடன் நல்லுறவை கட்டியெழுப்பி, சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதற்காக தமிழ் பேசும் இளைஞர்களை பொலிஸ் சேவைக்குள் இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் இடம்பெறவுள்ளதாக வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தில் பொலிஸ் சேவையில் தமிழ் இளைஞர்களை இணைத்துக் கொள்ளும் நோக்கில் அண்மையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதன்படி சுமார் 400 இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்த நிலையில், அவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இன்று நடைபெறவுள்ளது.

இந்நிலையில், இன்றைய தினம் பொலிஸ் பணிக்கு தெரிவு செய்யப்படுவார்கள். இவர்கள் முற்றிலும் வடக்கு மாகாண பொலிஸ் நிலையங்களில் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, வடக்கு மாகாணங்களில் சேவையில் உள்ள ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழி அறிவை பெற்றுக் கொடுப்பதற்கான செயற்றிட்டமொன்றை பொலிஸ் திணைக்களம் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம்

நாடளாவிய ரீதியில் சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகின்றது. இதற்கமைய கிளிநொச்சியில் வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளி நொச்சி மாவட்ட கூட்டுறவு சபை மண் டபத்தில் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் காலை 9 மணிக்கு கிளிநொச்சி முருகன் கோவில் முன்றிலில் இருந்து ஊர்வலம் ஆரம்பமாகி மேற்படி மண்டபத்தை சென்றடையும்.

அதன்பின்னர் வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் ச.குபராஜா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சி.ஸ்ரீதரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சி.ஜெயராஜ், யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் சட்டத்தரணி கே.எஸ். அற்புதராஜ், கிளிநொச்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் பி. பேரின்பராஜா, வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத் தலைவர் கு.பகீர்தரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். அன்றையதினம் அகவொளி நம்பிக்கை நிதியத்தின் நிதி சேகரிப்பிற்காக பண்டிதர் பரந்தாமன் கவின் கலைக்கல்லூரியின் படைப்பின் உருவாக்கத்தில் அகவொளி பாடல் இறுவெட்டு வெளியீடும்விழிப்புலனற்ற குடும்பங்களுக்கு வெள்ளைப் பிரம்புகள் உதவிப் பொருட்கள் என்பன வழங்கி வைக்கப்படவுள்ளன.

அத்துடன் விழிப்புலனற்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கு கிளிநொச்சிவர்த்தகசங்கத்தினால்நிதியுதவி வழங்கி வைக்கப்படவுள்ளது. கலை நிகழ்வுகளும் நடைபெறும். (2-277)

# செயற்குழுக்கூட்டம்

(கிளிநொச்சி-1)

மாவட்ட பிரஜைகளின் குழுவின் செயற்குழுக்கூட்டம் நேற்றுக் காலை 9 மணியளவில் பண்டிதர் பரந்தாமன் கவின்கலைக் கல்லூரியில் நடைபெற்றது.

இச்செயற்குழுக்கூட்டத்தில் கிளிநொச்சி நகரப் பகுதியில் தனியார் மற்றும் அரச மத்திய பேருந்து நிலையங்கள் அமைத்தல், கிளிநொச்சி நகர சபை உருவாக்கம், டிப்போ சந்தியில் சுற்றுவட்டவீதி அமைத்தல் போன்ற பொதுச்சபை தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

இப்பொதுச்சபைத் தீர்மானங்களை சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களுடன் கலந்துரையாட வேண்டும் எனவும் இளைஞர்களிடையே அதிகரித்துக் காணப்படும் போதைப்பொருள் பயன்பாடு தொடர்பிலும் ஆராயப்பட்டதுடன் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளுக்குமென சமூகத் தொண்டர்கள் இணைத்துக் கொள்ளப்பட வேண்டுமெனவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (2)




முதலாம் ஆண்டு நினைவுகளில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



காலமாகிப் போகவில்லை-இவன்
காலத்தை வென்றிந்த ஞாலத்தில்
எம் நெஞ்சில் -உயர் காவியமாய்
உயிர்த்துள்ளான்

அமரர்-தயாபரன் சிவதர்ஷன்
(உரிமையாளர், சிவதயா அச்சகம்)

தோற்றம்-27.09.1990
மறைவு-23.09.2015



திதி ஆத்மசாந்தி: 11.10.2015
சிவதர்ஷன் எம் செல்வன்
சிவனடியில் இளைப்பாறும்
தவப்பேறை தானடைந்து
ஓராண்டு ஆயிற்றாம்!
ஓர்யுகமே ஆனாலும்
உன் உயிரின் இயக்கம்தான்
எம்முள்ளே துடிக்கும் பார்
உன் நினைவின் ஊரல்தான்
எம் வாழ்வாய் உயிர்க்கிறது
உன் முகத்தின் முறுவல்தான்
எம் வாழ்வில் ஒளிர்கிறது
வாழும் வயதில் வானேகி நிற்பவனே
உன்னோடு நாமிணையும்
நாள்வரைக்கும் இது தொடரும்
எமக்குள்ளே நீ வாழ்வாய்
எழுகதிரின் ஒளி வடிவாய்!

என்றும் உன்னோடும்
உன் நினைவோடும்

(2023)



தயா அச்சகம்
575,கே.கே.எஸ் வீதி,
நாச்சியார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
தயா வெளியீடு
வெற்றி இலக்கு
077 396 5214



# முள்ளியவளை காட்டில் நடைபெறும் சட்டவிரோத காடழிப்பு, மீள்குடியேற்றத்தை உடன் நிறுத்துக!

## வடக்குமாகாண சபையில் வருகின்றது பிரேரணை

(முள்ளியவளை)

**முள்ளியவளை காட்டில் இடம்பெறுகின்ற சட்டவிரோத காடழிப்பும் மீள்குடியேற்றத்தினையும் நிறுத்துமாறுகோரி வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

முள்ளியவளையில் உள்ள காட்டினை சட்டவிரோதமான முறையில் வெட்டியகற்றி அப்பகுதியில் சில அரசியல்வாதிகளின் துணையுடன் பாரியளவிலான குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறித்து வலம்புரி நேற்றைய தினம் வெளிக்கொணர்ந்திருந்தது.

இது தொடர்பில் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முள்ளியவளையிலிருந்து குமுழமுனை செல்லும் வீதியில் குமரபுரம் எனும் பகுதியின் கிழக்கு எல்லையிலிருந்து யுத்தத்தின் பின்னரான காலம் தொடக்கம் இன்றுவரை இக்காடழிப்பு நடைபெறுகின்றது.

இதுவரையில் முள்ளியவளையின் எல்லைக்கிராமமாக இருந்த கற்பூர புல்வெளி கடந்து வன்னியின் மேடு எனப்படும் வன்னியின் முக்கிய வரலாற்றுச் செய்தியுடன் தொடர்பு படுத்தி அழைக்கப்படும் காட்டுப்பகுதியே மிக வேகமாக அழிக்கப்பட்டு வருகின்றது.

வனவிலாகா திணைக்களங்களிடமும் பிரதேச செயலகத்திடமும் காணி திணைக்களங்களிடமும் முறையான வகையில் அனுமதி பெறப்படாமல் காடுகளை அழிப்பது கண்டிக்கத்தக்கதொன்றாகும்.

இதனைவிட தமிழர்களின் வரலாற்றோடு தொடர்புடைய காட்டுப் பகுதியினை அழிப்பதென்பது பாரிய குற்றமாகும்.

இவ்வாறு அழிக்கப்படும் காட்டுப் பகுதிக்குள் நாகம் சோலை என அழைக்கப்படும் வனவிலாகாவினால் பாதுகாக்கப்பட்ட இடமும் உள்ளது.

வடக்கு மாகாணம் சார்ந்த காணி திணைக்களத்தைச் சேர்ந்த சில அதிகாரிகளினதும் அரசியல்வாதிகள் மற்றும் பிரதேச சபை சார்ந்த உயர் அதிகாரிகளினதும் துணையுடனேயே முள்ளியவளை காட்டிற்குள் இவை நடைபெறுகின்றது.

இதனைவிட சில சமுர்த்தி உத்தியோகத்தர்களும் இக்காடழிப்பினை மேற்கொண்டு வருவதாகவும் ரவிகரன் குற்றம் சாட்டியுள்ளார்.

30 வருடகாலமாக இடம்பெயர்ந்துள்ள தமிழ் மக்கள் காடுகள் போன்று உள்ள தமது காணிகளை துப்புரவு செய்யும்போது தடுக்கும் வன இலாகா அதிகாரிகள் இவ்வளவு பெரிய காடு அழிக்கப்படும் போது ஏன் கண்டுகொள்ளவில்லை.

இக்காடழிப்பு தொடர்பான தீர்மானம் கடந்த மாகாண சபை அமர்வின்போது கொண்டுவர இருந்தபோதிலும் மேலதிக ஆதாரங்கள் திரட்ட வேண்டியிருப்பதனால் அடுத்த அமர்வில் இப்பிரேரணை கொண்டுவர தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் ரவிகரன் குறிப்பிட்டுள்ளார். (2-4)

## பழைய மாணவர் சங்க கிளையின் அங்குரார்ப்பண நிகழ்வு

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் வன்னிப்பிராந்திய பழைய மாணவர் சங்கக் கிளையின் அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளி/ இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இச்சங்கத்தினூடாக வன்னிப் பிராந்திய மாணவர்களின் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான மேம்பாட்டுத் திட்டம், ஏனைய சமூக நலத் திட்டம், வன்னி பிராந்திய இந்துக்கல்லூரி மாணவர்களின் ஒன்றிணைவு போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக தகவல் பெற விரும்புவோர் யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி பொறியியல்பீட விரிவுரையாளர் சி.அருணனின் தொலைபேசி இலக்கமான 0773321126 தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (2-9)

## உரக்களஞ்சியத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது

(பனிக்கன்குளம்)

ஒலுமடு கமநல சேவை நிலையத்திற்கான உரக்களஞ்சியத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை மாங்குளத்தில் இடம்பெற்றது.

யு என் ஹபிராட் நிறுவனத்தின் 2687638 ரூபா நிதியுதவியுடன் உரக்களஞ்சிய நிர்மாணப்பணிகள் நடைபெறவுள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள பனிக்கன்குளம், மாங்குளம், மாங்குளம் வடக்கு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் அவர்களுக்கான உரத்தினை பெறுவதற்கு இதுவரை ஒலுமடுவிற்கே செல்ல வேண்டியிருந்தது. இதனை இலகுபடுத்தும் நோக்கில் யு என் ஹபிராட் நிறுவனத்தின் நிதியுதவியில் மாங்குளம் வடக்கு கமக்கார அமைப்பினால் மாங்குளத்தில் அமைக்கப்படவுள்ள உரக்களஞ்சியத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வே இடம்பெற்றதாக மாங்குளம் வடக்கு கமக்கார அமைப்பின் தலைவர் ச.கஜன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் யு என் ஹபிராட் நிறுவனத்தின் உத்தியோகத்தர், ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் உத்தியோகத்தர்கள், கமக்கார அமைப்பு உறுப்பினர்கள், விவசாயிகளெனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)








வடக்கு மாகாண தொழில்சார் ஊடகவியலாளர் சங்கம், ஊடக ஊழியர்களின் தொழிற்சங்கம், ஐ.பி எல்யூ ரீ.பி.ஆர் ஆகியன இணைந்து தகவல் அறியும் உரிமை யாருக்கு? எதற்காக எனும் மக்கள் கலந் துரையாடல் நேற்று முற்பகல் 10 மணிக்கு பரந்தன் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றபோது....

(படங்கள்:- சிவநகர், பனிக்கன் குளம் செய்தியாளர்கள்)

# போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 2 ஆம் கட்ட உதவித் திட்டம் ஆரம்பம்

## வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் தெரிவிப்பு

(வவுனியா)

வடக்கு மாகாணத்தில் நடைபெற்று முடிந்த போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டத்தின் இரண்டாம் கட்ட வேலைகளுக்கு 43 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைய மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் பதிவு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்ட புனர்வாழ்வு பெற்ற போராளிகள், சிறையில் இருக்கும் அரசியல் கைதிகள், யுத்தத்தால் தமது பிள்ளைகள், உறவுகளை இழந்த முன்னாள் போராளிகள் குடும்பங்கள் ஆகியோருக்கான வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சரின் திட்டத்துக்கு அமைவாக சுமார் 12 ஆயிரத்து 760 குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மொத்தமாக இவ்வாண்டில் சுமார் 860 குடும்பங்களையே பயனடையச் செய்ய முடியும். ஏற்கனவே தமது தேவைகளை பதிவு செய்துள்ள 125 அரசியல் கைதிகளின் குடும்பங்களுக்குமான வாழ்வாதார திட்டங்கள் கையளிக்கும் நிகழ்வுகள் இடம்பெற்று வருகிறது.

மேற்படி குடும்பங்களுக்கு அன்றாடம் குறைந்தது 300 ரூபாய் தொடக்கம் 500 ரூபாய் வரை வருமானத்தை பெற்றுக்கொள்ளும் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் திட்டங்களுக்காக பயனாளிகளிடமிருந்து தரவுகளை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளின் படியாக ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 147 குடும்பங்கள் வீதம் கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த தெரிவானது முதலாவதாக உடல் அவயவங்களை இழந்தவர்கள் மற்றும் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டுள்ளவர்கள், இரண்டாவதாக புனர்வாழ்வு பெற்ற கணவனை இழந்த பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்கள், மூன்றாவதாக ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளை யுத்தத்தில் பறிகொடுத்த முன்னாள் போராளிகளின் குடும்பங்கள், நான்காவதாக மேற்படி குடும்பங்களுள் அதிகளவான குடும்ப அங்கத்தவர்களைக்கொண்ட குடும்பங்கள் என்ற நான்கு வகையான அடிப்படையில் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதன்பிரகாரம் வவுனியா மாவட்ட பயனாளிகளுக்கான சந்திப்பு நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு வவுனியா உட்பட்ட வீதியில் அமைந்துள்ள கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிற்சி மண்டபத்திலும் மன்னார் மாவட்ட பயனாளிகளுக்கான சந்திப்பு எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அமைச்சரின் மன்னார் உப அலுவலகத்திலும், கிளிநொச்சி மாவட்ட பயனாளிகளுக்கான சந்திப்பு எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கரைச்சிப் பிரதேச சபை அலுவலகத்திலும் முல்லைத்தீவு மாவட்ட பயனாளிகளுக்கான சந்திப்பு எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலக மண்டபத்திலும் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இச்சந்திப்பில் பங்கேற்கவுள்ள பயனாளிகளுக்கான அறிவித்தல்கள் உரிய கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத் திட்டத்தில் முதலாம் கூட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவித் திட்டங்கள் மேற்குறித்த தினங்களில் உரிய மாவட்டங்களில் பயனாளிகளுக்கு வழங்கி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

அத்துடன் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் அறிவித்தல் வழங்கப்பட்ட குடும்பங்கள் மட்டும் கலந்து தமது வாழ்வாதாரத்துக்கான திட்டங்களை பதிவு செய்யுமாறும் அத்தோடு இவர்களுக்கான வாழ்வாதார திட்டங்கள் வருகின்ற மாதத்தின் முதல் பகுதியில் வழங்கி வைக்கப்படும் என்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார். (2-9)

## விழிப்புலனற்றவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் நாணயத்தாள்களை அச்சிடுமாறு ஜனாதிபதி அறிவுரை

நாணயத் தாள்களை அச்சிடும்போது விழிப்புலனற்றவர்கள் அறிந்துகொள்வதற்கு வசதியான அடையாளத் துடன் அச்சிடுமாறு ஜனாதிபதி மைத திரிபால சிறிசேன மத்திய வங்கியின் பிரதிப் பணிப் பாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்கி யுள்ளார்.

கடந்த நான்கு வருட காலமாக வெளியிடப்படும் நாணயத்தாள்களில் விழிப்புலன் அற்றவர்கள் அறிந்து கொள்வதற்கான அடையாளம் இல்லாது இருப்பதாகவும் இதனால் தாம பெரிதும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாகவும் விழிப் புலனற்ற பட்டதாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் முன்வைத்த வேண்டுகோளுக்கு இணங்கவே ஜனாதிபதி இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார். இலங்கையில முழுமையாக விழிப்புலன் அற்றவரகள் சுமார் மூன்று இலட்சம் பேர் உளளனர். அவரகளது நலனோம்புகை நடவடிக்கைகள் மற்றும் உரிமைகளை பாதுகாப்பதற்கு புதிய அரசாங்கம்விசேட கவனம் செலுத்தி வருகிறது.

தொழில்வாய்ப்பற்ற விழிப் புலனற்ற பட்டதாரிகளுக்கு தொழில்களைப் பெற்றுக கொடுத்தல், அங்கவனமுடையவர்களின் உரிமைகள் தொடர்பான சர்வதேச நியமங்களை இலங்கையில் வினைத்திறன்மிக்க வகையில் நடைமுறைப்படுத்தல், விழிப்புலன் அற்றவர்களது பிள்ளைகளின கல்வி நடவடிக்கைகளுக்கு உதவுதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை புதிய அரசாங்கம் நடைமுறைப்படுத்தவுள்ளது. (இ-10)




# இந்திய மீனவர்களின் அத்துமீறலால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்!

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

**இந்திய மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கையானது இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. எனவே, கடற்படையின் பலத்தை அதிகரிப்பதற்கும் கடற்பாதுகாப்பினை விஸ்தரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஜே.வி.பி.யின் விஜித ஹேரத் எம்.பி.யினால் கொண்டுவரப் பட்ட இந்திய மீனவர்களின் அத்துமறலால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை மீதானவிவாதத்தில்கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாமல் ராஜபக்ஷ எம்.பி. இங்கு மேலும்தெரிவிக்கையில,

பயங்கரவாதத்தின் மூலமாக எமது நாட்டு மீனவர் கடந்த 30 வருடங்களாக பாதிப்பினையும் அச்சுறுத்தலையும் எதிர் கொண்டிருந்தனர். அத்தகைய யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் இன்று இந்திய மீனவர்களால் எமது மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அச்சுறுத்தல்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.

மேலும் அத்துமீறி எமது கடற்பரப்புக்குள் நுழையும் மீனவர்கள் சட்ட விரோத செயற்பாடுகளிலும் ஈடுபட முடியும். இந்திய மீனவர்கள் எமது மீனவர்களின் வலைகளை நாசம் செய்து மீன் வளங்களையும் சூறையாடிச் செல்கின்றனர்.

இவ்வாறு அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுகின்ற இந்திய மீனவர்களால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருக்குமாக இருப்பின் அது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## அரசியல் கைதிகளுக்கு சட்ட உதவி வழங்க அகில இலங்கை இந்துமாமன்றம் நடவடிக்கை

அரசியல் கைதிகளுக்கு சட்ட உதவி வழங்க முன் வருபவர்கள் அகில இலங்கை இந்துமாமன்றத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மன்றத்தின் தலைவர் க.நீலகண்டன் தெரிவித்துளளார்.

இது தொடர்பாக அவர் விடுத் துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பல ஆண்டுகளாகச் சிறையில் வாடும் அரசியல் கைதிகளுக்கு போதிய சட்ட உதவி கிடைப்பதில்லை.

வெளிநாட்டிலிருந்து நிதி உதவி அனுப்பப்படுவதாகச் சொல்லப்பட்டாலும் அது உரியமுறையில் அரசியல் கைதிகளுக்கு கிடைக்கவில்லை. நிவாரணம் கிடைக்கும் வகையில் சட்ட உதவிக்கு உபயோகிக்கப்படுகிறதா என சந்தேகம் எழும்பியுள்ளது.

இந்தக் குறையைப் போக்குமாறு மாமன்றத்திற்கும் வடமாகாண முதல்வருக்கும் வேண் டுகோள்கள் கிடைத்திருக்கின்றன.

இந்த சட்ட உதவியை முறையாக நிர்வகித்து கைதிகளுக்கு உதவ ஒரு நிதியம் அமைக்குமாறு வடமாகாண முதல்வரை மாம ன்றம் கேட்டிருக்கிறது. அந்த நிதியம் நிறுவப்படும் வரையில் இந்தச் சட்ட உதவிக்கு உதவுபவர்களிடமிருந்து நிதி சேகரித்ததும் மாமன்றமும் தன் பங்களிப்பையும் அளித்து அரசியல் கைதிகளுக்குச் சட்ட உதவி வழங்கத் தீர்மானித்திருக்கிறது.

வடமாகாண முதல்வர் ஒரு நிதியத்தை நிறுவினால் மாமன்றம் சேகரித்து வைத்திருக்கும் பணத்தை அந் நிதியத்திற்கு மாற்றும்.

முதல்கட்டமாக சிவஸ்ரீ சந்திரா ஐயர் ரகுபதி சர்மா குருக்கள்மேன்முறையீடு செயயவும் சிவஸ்ரீ ஸ்ரீஸ் கந்தராஜா சர்மாவின் வழக்கிற்குமஉதவவும் மாமன்றம் தீர்மானித்திருக்கிறது என்பதும் குறிப் பிடத்தக்கது. (இ-5)



இலங்கை பத்திரிகை பேரவையின் 60 ஆவது விழாவில் கலந்து கொண்ட இந்திய ஊடகவியலாளர்கள், பிரதம விருந்தினர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 40 | 70 | 50 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 140 | 160 | 120 | 140 | 200 | 140 |
| தக்காளி | 120 | 120 | 60 | 100 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 40 | 50 | 50 |
| கோவா | 60 | 50 | 60 | 60 | 70 | 70 |
| கரட் | 80 | 60 | 80 | 80 | 60-120 | 70 |
| பூசணி | 40 | 30 | 30 | 50 | 40 | 30 |
| புடோல் | 50 | 40 | 50 | 60 | 40 | 50 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 110 | 120 | 110 | 120 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 120 | 100 | 80 | 120 |
| பாகற்காய் | 180 | 100 | 100 | 120 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 40 | 40 | 100 | 80-120 | 50 |
| கருணைக் கிழங்கு | 70 | 60 | 70 | 100 | 80 | 80 |
| பயற்றங்காய் | 140 | 120 | 50 | 100 | 120 | 70 |
| லீக்ஸ் | 80 | 60 | 60 | 80 | 100 | 80 |
| பீற்றூட் | 40 | 30 | 30 | 50 | 40 | 40 |
| கறிமிளகாய் | 100 | 100 | 90 | 120 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 80 | 30 | 60 | 80 | 60 | 80 |
| போஞ்சி | 160 | 200 | 160 | 160 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 30 | 30 | 40 | — | 80 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 20 | 30 | 40 | 40 |
| தேசிக்காய் | 250 | 300 | 200 | 360 | 240 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-60 | 40 | 40-50 | 50 | 50 |
| இராசவள்ளி | 200 | 250 | — | — | — | — |
| வெங்காயப்பூ | 200 | 150 | 170 | 200 | 120 | 200 |
| முள்ளங்கி | 40 | 40 | 40 | 80 | 40 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 30 | 30 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 20 |

தொடுத்து விட்ட அம்பு; சொல்லி விட்ட வார்த்தை திரும்ப வராது.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நல்லவர்கள் துரோகிகளாக மாறும் சரிதம் கண்டோம்!

குடியேற்றவாதிகள் இந்த நாட்டை விட்டு வெளியேறும் போது ஐயா! எங்களின் தாயகத்தை நாங்கள் ஆளவேண்டும். ஆவன செய்க! என்று கேட்டிருந்தால், இன்று தனித் தமிழீழம் என்ற நாட்டில் நாங்கள் வாழ்ந்திருக்க முடியும்.

எனினும் தமிழர்கள் சிங்களவர்களுடன் சேர்ந்து வாழ நினைத்தனர். சிங்கள அரசியல் தலைமைகளும் குடியேற்றவாதிகள் வெளியேறும் வரை தமிழ்த் தலைவர்களை வாலாயப்படுத்தி நாடு முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

சிங்களத் தலைவர்களின் கபட நோக்கத்தை புரிந்து கொள்ள முடியாத தமிழ்த் தலைவர்கள் தமிழினம், தமிழர்களுக்கான நாடு, அவர்களின் உரிமை, மொழி, மதம் என யாதேனும் பற்றிச் சிந்தித்திலர். இதன் விளைவு எத்துணை அழிவுகள், எத்துணை இழப்புகள், ஏமாற்றங்கள், அடிமைத்தனங்கள், மனித உரிமை மீறல்கள். ஐயகோ! எதை, எப்படிக் கூறுவது எல்லாமுமே சூத்துமாத்து.

வன்னியில் நடந்த யுத்தம். அதனால் தமிழ்மக்கள் சந்தித்த பேரழிவுகள் குறித்து ஐ.நா மனித உரிமைகள் பேரவை வரை சென்ற போதிலும் நீதி கிடைப்பதாக இல்லை. உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு என்பதாக நிலைமை உள்ளது.

எங்களுக்கென்றொரு நாடு இல்லாததன் காரணமாக இழந்ததற்கும் நீதி கிடைக்காமல் போகிறது.

இது தவிர, சிங்கள அரசியல்வாதிகளில் சிலர் தமிழர்களின் நிலைமைகளை உணர்ந்து தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். ஆனால் கால ஓட்டத்தில் அவர்களும் தமிழர்களுக்கு எதிரானவர்களாகவே மாறினர்.

ஒரு மொழி என்றால் இரு நாடு. இரு மொழி என்றால் ஒரு நாடு என்று மகா தத்துவம் கூறிய கொல்வின் ஆர்.டி சில்வா, 1972களில் அரசியல் அமைப்பை தயாரித்தபோது தமிழர்கள் பற்றி இம்மியும் சிந்தித்திலர்.

கொல்வின் ஆர்.டி சில்வாவின் வழியை பின்பற்றுபவர்கள் இன்னமும் தென்பகுதி அரசியலில் இருப்பது மிகுந்த வேதனையைத் தருகிறது.

மிக நீண்ட காலம் தமிழர்களுக்காக குரல் கொடுத்த வாசுதேவ நாணயக்கார, இப்போது எப்படி மாறினார். வாசுதேவ ஒரு சாரைப்பாம்பு என்று கூறிய தமிழர்கள் இப்போது வாசு சாரைத்தோல் போர்த்திய கருநாகம் என்று கூறவேண்டியதாயிற்று.

இது போல அமைச்சர் ராஜித சேனாரட்ன ஒரு வித்தியாசமான மனிதர் என்று தமிழ் மக்கள் கருதி இருந்தனர். சில வருடங்களுக்கு முன்னர் தென்மராட்சியில் இடம்பெற்ற போர் அழிவுகளைப் பார்த்த அமைச்சர் ராஜித, அந்த அழிவுகளை வியட்நாம் போரின் அழிவுகளுக்கு ஒப்பிட்டிருந்தார்.

மகிந்தவின் ஆட்சியில், என்னை நம்பி தெரிவுக் குழுவுக்கு வாருங்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்தவர் ராஜித.

ஆனால் இப்போது போர்க்குற்றம் தொடர்பில் உள்ளக விசாரணையை மேற்கொள்ள குறைந்தது ஒரு வருடமாவது எடுக்கும் என்று கூறியுள்ளார்.

சர்வதேச விசாரணை வேண்டும் என்று தவம் இருக்கின்ற தமிழ் மக்களுக்கு; உள்ளக விசாரணை செய்வதாக இருந்தாலும் குறைந்தது ஒரு வருடமாகும் என்று அமைச்சர் ராஜித கூறுவது, வன்னிப் போரில் அடித்த ஆட்லறிகளை விட மிகவும் மோசமானது என்றே சொல்ல வேண்டும்.

ஆக, நல்லவர்களாக இருந்த சிங்கள அரசியல்வாதிகள் ஒரு முதிர்ச்சி நிலையில் தங்களையும் பேரினவாதிகளாக அடையாளப்படுத்துவதை தவறவிடாமல் செய்து கொண்டிருப்பதுதான் ஏனென்று தெரியவில்லை.

இருந்தும் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண மற்றும் சோபித தேரர் போன்றவர்கள் இன்னமும் விதிவிலக்காக இருப்பது ஓரளவுக்கேனும் மன ஆறுதலைத் தருகிறது.

## இந்தியாவின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள முடியாது

### அமைச்சர் நிரோஷன் பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

மீனவர்கள் பிரச்சினைக்கு இந்திய தரப்பினால் முன்வைக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என பொருளாதார மற்றும் தேசிய கொள்கைகள் இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேரா தெரிவித்தார்.

மீனவர்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது. பல்வேறு மட்டங்களில் பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன.

பேச்சுக்களின் போது இந்திய மீனவர்கள் தரப்பில் முன்வைக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. தற்போது பயன்படுத்தும் மீன்பிடி முறையை மாற்றும் வரை 3 வருடங்களுக்கு இவ்வாறே மீன்பிடியை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டுமென்ற நிபந்தனைகளை அவர்கள் முன்வைத்தனர். இதனை ஏற்க முடியாது.

இப்பிரச்சினையை தீர்க்கவேண்டும் என்பதில் அரசாங்கம் அக்கறையுடன் உள்ளது. இதனைத் தீர்ப்பதற்கு சகல தரப்பினரின் ஒத்துழைப்பையும் அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

எமது கடல் எல்லையை பாதுகாக்க கடற்படையினர் முழுமையான நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## நூலகத்தில் மகாபாரதம்

ஊர்காவற்றுறை பிரதேசசபையின் அனலைதீவு பொது நூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மற்றும் வாசகர்களுக்கான 'மகாபாரதம்' வீடியோ படக்காட்சி நூலக மண்டபத்தில் காண்பிக்கப்பட்டு வருகின்றது.

திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணி வரை இப்படக்காட்சி காண்பிக்கப்பட்டு வருகின்றது.

எனவே ஆர்வமுள்ளோர் பங்குபற்றி பயன்பெறுமாறு நூலக சமூகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ)

## பொலிஸார் சுற்றிவளைப்பு

பாடசாலைக்குச் செல்லாத ஒன்பது வயது முதல் 12 வயதுக்கிடையிலான சிறுவர்கள் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நீர்கொழும்பு பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. பாடசாலைக்கு செல்லாது சிறுவர்கள் சுற்றித் திரிவதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் இவ்வாறு சிறுவர்கள் சிக்கிக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நீர்கொழும்பு பிரதேச செயலாளர் அலுவலகத்தின் அதிகாரிகள். முறைசாரா கல்வி பிரிவின் அதிகாரிகள். பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான அரச அமைப்பின் அதிகாரிகள் ஆகியோர் இணைந்து முன்னெடுத்த நடவடிக்கையில் குறித்த பிரதேசத்தில் பாடசாலை செல்லாதிருக்கும் சிறுவர்கள் பலர் அதிகாரிகளிடம் சிக்கிக்கொண்டனர்.

நீர்கொழும்பு கலப்பை அண்மித்த குடியிருப்புத் தொகுதியில் அதிகாரிகளால் நேற்று முன்தினம் மேற்படி நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்போது அதிகாரிகளிடம் சிக்கிக் கொண்ட மாணவர்களிடம் அவர்கள் பாடசாலை செல்லாமைக்கான காரணங்களை கேட்டு அறிந்துகொண்ட பின்னர் அவர்களை பாடசாலைக்கு செல்லுமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். (இ-10)

## அழியும் இன்பங்களில் அமிழ்ந்து அழிந்துவிடாது சாதுரியமாக இருப்போம்

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திரப் பத்திரிகையாளர்

'போதகரே, நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்ட ஒருவரின் கேள்வியுடன் இன்று எமக்குத் தரப்படும் பைபிள் பகுதி தொடங்குகிறது. அதற்கு இயேசு அவரிடம் "உமக்குக் கட்டளைகள் தெரியும் அல்லவா? அதன்படி நடவும்" என்கிறார். இவ்வாறு கேள்விகளாகவும் பதில்களாகவும் இன்றைய தொடக்க இறைவார்த்தை தொடர்கின்றது. அதற்கு அவர் இயேசுவிடம் "இவை அனைத்தையும் நான் என் இளமையிலிருந்தே கடைப்பிடித்து வந்துள்ளேன" என்றார். அப்போது இயேசு அன்பொழுக அவரைக் கூர்ந்து நோக்கி, "உமக்கு இன்னும் ஒன்று குறைவுபடுகிறது. நீர்

### பரமபிதா காட்டிய பாதை

போய் உமக்கு உள்ளவற்றை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்போது விண்ணகத்தில் நீர் செல்வந்தராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும்" என்று அவரிடம்கூறினார். இயேசு சொன்னதைக் கேட்டதும் அவர் முகம் வாடி வருத்தத்தோடு சென்றுவிட்டார். ஒவ்வொருவரையும் போலவே இந்த மனிதரும் ஒருபக்கம் நிலைவாழ்வின் முழுமை நோக்கிக் கவரப்பட்டார். மறுபக்கம். தனது செல்வத்தைச்சார்ந்து வாழ்ந்தார். கடவுளின் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதன்மூலம் நிலைவாழ்வை வாங்கிக்கொள்ளலாம் என்று நினைத்தார். எனவேதான் தனக்கு உள்ளவற்றையெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டுத் தன்னைப் பின்செல்லுமாறு இயேசு சொன்னபோது அதைப் புறக்கணித்தார். உண்மையும், யதார்த்தமும் தெளிவாகத் தெரிந்தாலும், அவற்றைக் காண்பதற்குப் பதில், நம்மைக் காத்துக் கொள்வதற்குச் சாதகமான வழிகளில் சிந்திக்கவே நாம் முயல்கிறோம்.

கேள்வி வடிவிலோ, அல்லது வேறு வடிவங்களிலோ இறைவார்த்தைகள் நம்மை வந்தடையும்போது, அந்த வார்த்தைகளில் பொதிந்துள்ள உண்மைகள், நம்மைச்சங்கடத்திற்கு உள்ளாக்குவதால், அவற்றைவிட்டு விலக நாம் முயற்சிகள் எடுக்கிறோம். கடவுளின் வார்த்தைகள் கண்ணுக் கெட்டா தூரத்திலிருப்பதாக நாமே கற்பனை செய்து. தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறோம். இதற்கு நேர்மாறாக. கடவுளின் கட்டளை என்ற உண்மை எப்போதும் எம் கண்முன்னே உள்ளது. அதைத்தேடி அலைய தேவையில்லை. இறைவனுக்கெதிரான எந்த மகிழ்ச்சியும் உண்மை மகிழ்ச்சியன்று. மறுகணமே மறையக் கூடியன. அழிந்து போகும் உணவுக்கு ஒப்பானவை. அழியும் இன்பங்களில் அமிழ்ந்து அழிந்துவிடாது நாம் சாதுரியமாக இருக்கவேண்டும். நிலை வாழ்வை அடைவதற்கு செல்வங்கள், தடைகளாக எம்முன்னே இருந்தாலும் மனித சமுதாயத்தின் உள்ளார்ந்த தேவைகளை நிறைவேற்றும் வழிகளில், செல்வம், செய்ய இயலாததை இயேசுவின் அன்பு செய்துவிடுகிறது. நிறைய செல்வங்கள் வைத்திருக்கும் மனிதரின் இதயத்தைக் கடவுளால் வெல்ல முடியும்.

இந்த இடத்தில் நாம் படித்த ஒரு கதையை பகிருவது சாலச் சிறந்தது: சாரலஸ். டபிள்யூ. கோல்சன் என்பவர் அமெரிக்கத்தலைவர் றிச்சாட் நிக்சனின் வெள்ளை மாளிகையில் முக்கியமான வேலை செய்தவர். அந்த மாளிகைக்கு அருகிலேயே அவரது மிகப்பெரிய வீடு. சொந்தமாக படகு. கார். பெருமளவு மாத வருமானம் மற்றும் நிறைந்த பணியாட்கள் என வசதியோடிருந்த ஒரு செல்வந்தர். ஆனால் அவர் நிம்மதியும் மகிழ்ச்சியும் இல்லாதிருந்தார். ஏதோ ஒன்று வாழ்க்கையில் இல்லாததால் வாழ்க்கை நிறைவின்றி வெற்றிடமாகத் தெரிந்தது. அது என்னவென்று அவருக்குத் தெரியவிலலை. ஒருநாள் நண்பர் ஒருவர் இயேசுவை நம்பி கடவுள் பற்றுமிக்கவராக மாறிய அவரது வரலாற்றை எடுத்துக் கூறினார். சார்லஸ் கோல்சன் அவருக்கு இருந்த அணையாத தாகம் கடவுள் இல்லாமையே என உணர்ந்தார். அன்றிரவே தனியாகச் செபிக்க ஆரம்பித்தார் சார்லஸ் கோல்சன். அவர் மனமாற்றம் பெற்றார். அவர் அமெரிக்க ஜனாதிபதி அலுவலகத்தில் பார்த்துக் கொண்டிருந்த முக்கியமான பணியை உதறிவிட்டு இயேசுவின் பக்தராக மாறினார். அமெரிக்கா முழுவதும் ஆச்சரியப்பட்டது. அமெரிக்காவின் செய்தி ஏடுகள் லாஸ்



ஏஞ்சலஸ் டைம்ஸ். மற்றும் நியூயோர்க் டைம்ஸ்: போன்றவை சார்லஸ் கோல்சன் மனம் மாறி கிறிஸ்துவின் சீடரானார் என அவரை வர்ணித்தன.

நாமும் வாழ்க்கையில் நிறைவையும் நிம்மதியையும் மகிழ்ச்சியும் காண விரும்புகிறோம். எனவே இன்று இயேசு சொல்லுவதைக் கேட்போம். அந்த பணக்கார மனிதரிடம் நிறைய நல்ல மனது இருந்தது. நியாயமாக நிம்மதியாக வாழவேண்டும் என்ற நல்ல எண்ணம் இருந்தது. தன் வாழ்வில் கடவுளின் கட்டளைகளை இளமைமுதல் கடைப்பிடித்துவந்த அந்தமனிதர் இவற்றில் தான் வாழ்வில் எதிர்பார்த்த நிறைவையும் நிம்மதியையும் காணமுடியவில்லை. ஆகவேதான் இயேசுவிடம் வந்துள்ளான் எனலாம். 'நிலைவாழ்வை உரிமையாக்கிக்கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?" என்னும் கேள்வி நம ஒவ்வொருவர் உள்ளத்திலும் எழுகின்ற கேள்வியே. இம்மண்ணக வாழ்வோடு மனிதரின் இலட்சியங்கள் மடிந்துவிடுவதில்லை. சாவுக்குப் பின் வாழ்வுண்டு என்னும் உறுதிப்பாடு மனித உள்ளத்தில் ஆழப்பதிந்த ஒன்று. எனவே, 'நிலைவாழ்வை" அடைய வேண்டும் என்னும் உள்ளார்வத்தால் நாம உந்தப்பட்டு. நிறைவடைய முனைகின்ற வேளையில் அக்குறிக்கோளை அடைவதற்கான வழியைத் தேடுவது இயல்பே.

இயேசு அவ்வழியை நமக்குக் காட்டுகிறார். அவரை முழு மனத்தோடும் விருப்போடும் பின்செல்வோர் அவர் வாக்களிக்கின்ற நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்வர். எனவே அழியும் இன்பங்களில் அமிழ்ந்து அழிந்துவிடாது சாதுரியமாக இருப்போம்!

# நலன்புரித் திட்டங்களால் பலர் பலனடையவில்லை

## தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் சுட்டிக்காட்டு

யாழ்.மாவட்டத்தில் 41 முகாம்களில் வசிக்கும் ஆயிரத்து 536 குடும்பங்களில் மிகமிக சொற்ப அளவிலான எண்ணிக்கையினரே நலன்புரி திட்டங்களால் நன்மையடைவதாக தெரிவித்துள்ள தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம்,

ஏனையோர் தமது சுயதொழில் வருமானம் மூலமாகவே தமது அன்றாட ஜீவனோபாயத்தை கொண்டு நடத்துவதாகவும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தினால் நலன்புரி முகாம்கள் தொடர்பாக வெளியிட்டு வைக்கப்பட்டுள்ள ஆய்வறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.மாவட்டத்தில் 41 முகாம்களில் வசிக்கும் ஆயிரத்து 536 குடும்பங்களில் கட்டுடை-03 முகாமில் வசிக்கும் பெண்ணொருவர் மாத்திரமே சமுர்த்தி நலன்புரி திட்டத்தினால் நன்மையடைகின்றார். இதனைத் தவிர வேறொருவர் கூட நலன்புரி நிவாரணங்கள் பெறவில்லை. எவ்வாறாயினும் 19 முகாம்களில் முதியவர்கள் முதியவர் நிவாரண உதவி பெறுவதாக தகவல் உண்டு. மிகச் சரியான எண்ணிக்கை கிடைக்கவில்லை.

தெரிவு செய்யப்பட்ட புதிய அரசாங்கம் முதியோர் நிவாரண கொடுப்பனவை 250 ரூபாவில் இருந்து ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதாக வாக்குறுதியளித்திருந்தது. மொத்த முகாம்களிலும் அதிகரிக்கப்பட்ட இத்தொகை 3 முதியவர்களால் மட்டுமே பெறப்படுகின்றது.

1990 ஆம் ஆண்டு அல்லது 2005 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமைக்கப்பட்ட முகாம்களுக்கான மானியம் அல்லது நலன்புரி உதவிகள் எதையும் 2010 ஆம் ஆண்டிற்கு பின்னர் அரச சார்பற்ற நிறுவனங்களோ அரசாங்கமோ வழங்கவில்லை. நீதவான் முகாம் மட்டும் 2011ஆம் ஆண்டுவரை மானியங்களைப் பெற்றது. ஓர் முக்கிய விடயம் யாதெனில் 2010 ஆம் ஆண்டு மீண்டும் தெரிவு செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டில் இடம்பெயர்ந்தோரின் முகாம்கள் இல்லையென நிரூபிக்க முயற்சி செய்தார்.

நிவாரண/ மானிய கொடுப்பனவின் நிறுத்தம், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ யோகபுரம் முகாம் மக்களை பிழையாக வழிநடத்தியது வரை தொடர்ந்தது.

மகிந்த ஜனாதிபதியாக அதிகாரத்திற்கு வந்த பின்னர் நலன்புரி முகாம்கள் அனைத்தும் மூடப்பட்டன.

நாங்கள் வர்சலாவிலான் கிராமத்தில் சொந்த வீட்டில் வசித்து வந்தோம். விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வந்தோம். 2015 ஆம் ஆண்டு வடக்கின் வசந்தம் திட்டத்தின் அடிப்படையாக நாவற்குளம் கிராமத்தில் கந்தசாமி கோவிலில் சந்திப்பு ஒன்றை மேற்கொண்டார். நாம் எமது சொந்தக் கிராமத்துக்கு திரும்பலாம் என கருத்து வெளியிட்டனர் முகாம் மக்கள்.

இத்தீர்மானம் குறித்து நாம் மிகவும் மகிழ்வடைந்தோம். 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் எமது கிராமத்திற்கு திரும்பினோம். எனினும் இராணுவப்படை எமது காணிகளுக்கு செல்ல அனுமதிக்கவில்லை. எனவே மீண்டும் முகாமிற்கு திரும்பினோம். அரசசார்பற்ற நிறுவனங்களால் முகாம்களுக்கு வழங்கப்பட்ட உதவிகள் நிறுத்தப்பட்டன. மற்றும் அவைகளால் நடத்தப்பட்ட அனைத்து நலன்புரி திட்டங்களும் நிறுத்தப்பட்டன.

நாம் மீண்டும் ஏமாற்றப்பட்டோம். இதனைவிட மிகப் பாரதூரமான விடயம் யாதெனில் அரசாங்கத்தின் அனைத்து மனிதாபிமான உதவிகளும் நிறுத்தப்பட்டன. நாட்டில் முகாம்கள் இல்லை. அத்துடன் இடம்பெயர்ந்த மக்களும் இல்லை என உலகிற்கு இலங்கை அரசாங்கம் கூறமுற்பட்டது. நாம் முற்றிலும் கைவிடப்பட்ட நிலையை அடைந்தோம். இடம்பெயர்ந்த மக்கள் முகாமை விட்டுச்சென்று வாழ்வாதாரம் பெறக்கூடிய பிரதேசத்தினை தேடும் முயற்சியில் ஈடுபட்டனர். இவ் அனுபவத்தின் ஊடாக நாம் இலங்கை அரசாங்க திட்டங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் எம்மை முற்றிலும் கைவிட்டதாக கற்றுக்கொண்டோம்.

முகாம் காணிகளின் உரிமை தனியாளர்களுக்கு உரித்தானதாகும். 2009 ஆம் ஆண்டு யுத்த வெற்றியின் பின்னர் இடம்பெயர்ந்த மக்களிடம் இருந்து நமது நிலத்தை மீளப் பெற முயற்சித்தனர். எமது ஆய்வில் திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 41 முகாம்களில் 10 முகாம்களைத் தவிர ஏனையவற்றின் நிலத்தை நில உரிமையாளர்கள் மீளப்பெற எதிர்பார்க்கின்றனர். இக்கதையின் மிக சோகமான விடயம் யாதெனில் இடம்பெயர்ந்த மக்களை இலங்கை அரசாங்கம் முற்றுமுழுதாகக் கைவிட்டு விட்டது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

**யாழ். திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம்**

செ.ரோசியா-174,வி.ரோஜிகா-172,அ.யூட் பிரியதர்ஷன்-168, மு.ஆரணி-158, வி.சுஜாத்-156, பி.அஸ்விஜா-153

**யாழ்.கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை**

ரா.திபிராஜ்-175, மெ.மக்சிமஸ்-168, யோ.பாலகணன்-165, கி.பிருந்தன்-155, றே.நியூட் நேசன்-153

**யாழ்.கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை**

மு.சுஜானி-153

**யாழ்.கரணவாய் தாமோதர வித்தியாலயம்,கரவெட்டி**

ச.பிரணவி-167,சி.டிலக்சிகா-164,ஜெ.வர்சா-163,ப.ஷாளினி-162,ர.மதுசன்-158,செ.கபிஷன்-154.

**யாழ்.உடுத்துறை இந்து ஆரம்ப பாடசாலை**

பா.டிஷான்-179,பே.சதுஷன்-179, உ.புகழ்நிலா-170, ச.அபிஷா-163, தி.திசானி-157,ஸ்ரீ.நிருஷா-156.

**யாழ்.கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை**

ரா.திபிராஜ்-175,மெ.மக்சிமஸ்-168, யோ.பாலகணன்-165, கி.பிருந்தன்-155,றே.நியூட்நேசன்-153 (இ-19)

## முடங்கிக் கிடக்கும் பெருந்தொகை அரிசி

மகிந்த அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட பெருந்தொகை அரிசி முடங்கி கிடப்பதாக சதொசவின் தலைவர் ஆர்.எம். கே. ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட, ஒரு லட்சத்து 20 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, விநியோகஸ்தர்கள் இன்றி கிடப்பில் உள்ளது.

அரச வங்கி வழங்கிய கடன் உறுதியின் அடிப்படையில் இவை இறக்குமதி செய்யப்பட்டன. இவற்றை விநியோகிப்பதற்கான கேள்வி அறிவிப்பு கோரப்பட்டிருந்த போதும், அதனால் முன்வைக்கப்பட்ட விலைகள் திருப்திகரமானதாக இல்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# எதிலும் சாதிப்பதற்கு விடாமுயற்சி அவசியம்

## யாழில் மூன்றாமிடம் வந்த மாணவன் நிவேதன் தெரிவிப்பு



விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தால் எதிலும் சாதிக்க முடியும் என ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட யாழ்.தும்பளை சிவப்பிரகாச வித்தியாலய மாணவன் ஜெயச்சுந்திரன் நிவேதன் தெரிவித்தார்.

190 புள்ளிகள் பெற்ற மாணவரது வெற்றி குறித்து கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எனது பாடசாலை அதிபர்,ஆசிரியர்கள் மற்றும் எனது பெற்றோர், சகோதரர் உதவியுடன் கற்றதால் நான் இந்த வெற்றியை அடைந்துள்ளேன். எதிர்காலத்தில் ஒரு வைத்தியராக வந்து சிறந்த சேவையாற்றவேண்டுமென்பதே எனது இலட்சியம். அதற்கு நான் எனது கல்வியை மேலும் சிறந்த முறையில் தொடருவேன்.அத்துடன் எனது வெற்றிக்கு காரணமாக இருந்தவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார் அம் மாணவன்.(இ-5-19)

# மக்களுக்கு சேவை செய்வதே எனது எதிர்கால இலட்சியம்

## யாழில் நான்காமிடம் வந்த மாணவி மதுஷாஜினி தெரிவிப்பு



எதிர்காலத்தில் ஒரு வைத்தியராக வந்து யாழ்.மாவட்ட மக்களுக்கு சேவையாற்றுவதே எனது இலட்சியமாகும் என ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தில் நான்காம் இடத்தைப் பெற்றுக்கொண்ட யாழ்.வட இந்து ஆரம்பப் பாடசாலை மாணவி சிவநேசன் மதுஷாஜினி தெரிவித்தார்.

189 புள்ளிகளைப் பெற்ற சி.மதுஷாஜினியிடம் அவரது வெற்றி குறித்து கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தனது இலட்சியம் குறித்து அம் மாணவி மேலும் தெரிவிக்கையில்,

அதிக புள்ளிகளைப் பெறுவதற்கு எனது ஆசிரியர்களும் எனது பெற்றோரும் தந்த ஊக்கமளிப்பே காரணம் எனவும் அவர்களுக்கு இதன் போது எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் எனது அயராத முயற்சியும் தன்னம்பிக்கையுமே எனது வெற்றிக்கு காரணம் எனத் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் ஒரு மருத்துவராக வந்து சிறந்த சேவையாற்றுவே[illegible] என்றார். (இ-5-60)

# பொருளாதார வளர்ச்சிக்கு உலகவங்கி ஒத்துழைக்கும்

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி செயற்பாடுகளுக்கு உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளித்துள்ளன.

உலக வங்கியின் அரையாண்டு மாநாடு நேற்றுமுன்தினம் பெரு நாட்டின் தலைநகரான லீமாவில் ஆரம்பமானது. இலங்கையின் சார்பில் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க இதில் கலந்து கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கிடையிலான சந்திப்பொன்று நிகழ்ந்துள்ளது.

இதன் போது இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கான எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் அமைச்சர் ரவி கருணாநாயக்க உலக வங்கியின் முக்கியஸ்தர்களுக்கு விளக்கமளித்துள்ளார்.

இதனையடுத்து இலங்கையின் பொருளாதார வளர்ச்சி குறித்த செயற்பாடுகளுக்கு தொடர்ந்தும் நிதியுதவி அளிப்பதாக உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் உறுதியளித்துள்ளனர்.

தற்போதைக்கு வருடமொன்றுக்கு 400 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையான கடனுதவியை உலக வங்கிஅளித்து வருவது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# தேவையற்ற விடயங்கள் சம்பந்தமான அழைப்புக்களே 1929இற்கு வருகிறது

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 1929 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தேவையற்ற விடயங்கள் சம்பந்தமான அழைப்புக்களே அதிகம்கிடைப்பதாக சிறுவர்பாதுகாபு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

1929 தொலைபேசி இலக்கத்திற்கு கிடைக்கக்கூடிய அழைப்புக்கள் அதிகரித்துள்ளதாகவும், எனினும் அதில் அதிகமானவை சம்பந்தமில்லாத அழைப்புக்கள் என்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் குறித்த தொலைபேசி இலக்கத்திற்கு 1290 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவற்றில் 1202 முறைப்பாடுகள் தேவையற்றது என்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அவற்றில் சிறுவர்களை பாடசாலைக்கு சேர்ப்பதில் உள்ள பிரச்சினைகள், சர்வதேச பாடசாலைகளின் கட்டணப் பிரச்சினைகள், வீடு, காணி தொடர்பான பிரச்சினைகள் மற்றும் நிதிப் பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகம்கிடைத்துள்ளதாக சிறுவர்பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இவ்வாறான தொலைபேசி அழைப்புக்கள் கிடைக்கும் போது சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான பிரச்சினைகளை முறையிடும் சந்தர்ப்பங்கள் இழக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமான பிரச்சினைகளை மாத்திரம் 1929 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு முறையிடு மாறு சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது. (இ-10)

# குழந்தையைப் புதைத்த இளம் தாய் கைதானார்

பிறந்து மூன்று நாட்களே ஆன கைக்குழந்தையை வீட்டிற்கு பின்புறம் குழியொன்றை தோண்டி புதைத்ததாக கூறப்படும் 22 வயதான பெண்ணொருவரை வெலி கந்தை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள் ளனர். இந்த பெண் வெலிகந்தை மாலிந்த மகாவலி கிராமத்தை சேர்ந்தவர் என பொலிஸார் கூறியுள்ளனர்.

மன்னம்பிட்டி பதில் நீதவான் சந்தியா குமார முன்னிலையில், புதைக்கப்பட்ட குழந்தையின் சடலம் நேற்று முன்தினம் தோண்டி எடுக்கப்பட்டது. குழந்தையின் மரணம் தொடர்பான பிரேத பரிசோதனைகளை நடத்துமாறு நீதவான், பொலநறுவை சட்ட அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

இவ்வாறு புதைக்கப்பட்டிருந்த குழந்தை ஆண் குழந்தை என தெரிய வருகிறது. இந்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள பெண்ணின் 58 வயதான தாய் சம்பவத்திற்கு உடந்தையாக இருந்துள்ளதாக விசாரணை களில் தெரியவந்துள்ளது. எவ்வாறாயினும் சம்பவம் குறித்து வெலிகந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-10)

## யாழ்ப்பாணத்தில்...

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், யாழ்.மாவட்ட கலை கலாசாரப் பேரவை, யாழ்.மாவட்ட செயலகம் இணைந்து பருத்தித்துறை மெதடிஸ்ட் பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நேற்று நடத்திய பண்பாட்டுப் பெருவிழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்செயல்களின் காரணமாக புலம் பெயர்ந்தவர்களுடன் சேர்ந்து கல்வி, வேலை வாய்ப்பு, தொழில், வியாபாரம், வணிகம் முதலான காரணங்களின் நிமித்தம் உலகின் மூலைமுடுக்கெல்லாம் பரவியிருக்கும் தமிழர்கள் நவீன உலகின் உருவாக்கத்தில் பெரும் பங்காற்றி வருகின்றார்கள்

அவர்கள் அந்தந்தச் சமூகங்களின் அலகுகளாக மாறியிருக்கும் அதேசமயம் தம் பண்பாட்டு அடையாளங்களைத் தக்க வைத்துக் கொள்வதிலும் அதிக முனைப்புக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அண்மையில் நான் அமெரிக்காவின் சன் பிரான்சிஸ்கோ, கலிபோர்னியா போன்ற இடங்களுக்கு சென்றிருந்தேன். அங்கு எமது தமிழர்கள் நவீனத்தை நடைமுறைப்படுத்தும் அதே நேரம் எவ்வாறு பழைமையையும் பண்பாட்டையும் பாதுகாத்து வருகின்றார்கள் என்பதைக் கண்டு வியப்படைந்தேன்.

நவீனத்தின் கூறுகளை உள்வாங்கி ஏற்றுக் கொள்ளும் இயல்புடைய எமது தமிழ்ச் சமூகம் நவீன உலகின் விதிகளைப் புரிந்து கொள்வதற்கும் அதை எதிர்கொள்வதற்குமான ஆற்றல் கொண்டது என்று தயக்கமின்றிச் சொல்லலாம்.

சென்ற பதினைந்து ஆண்டுகளில் உலக அளவில் ஏற்பட்ட சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்கள் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கங்கள் தீவிரமானவை.

நாங்கள் கட்டிக் காத்த அடையாளங்களான சாதி அமைப்பு, குடும்ப ஒழுங்கமைப்பு, அறிவியல் மதிப்பீடுகள், வழிபாட்டு முறைகள், திருமணச் சடங்குகள், உணவுப் பழக்க வழக்கங்கள், கலைகள், இலக்கிய போக்குகள் என்று எல்லாவற்றிலும் நவீன வாழ்வின் தாக்கங்கள் மேலோங்கி வருகின்றன.

ஓர் இனம் இருந்தமைக்கான, அவ்வினம் தனியான அடையாளங்களோடு வாழ்ந்தமைக்கான உயரிய சான்றாக அமைவது அவ்வினம் வழிவழியாக பின்பற்றி வரும் பண்பாட்டுக் கோலங்களேயாகும்

ஒவ்வொரு மனிதனும் தனது இனத்திற்குரிய அடையாளமாக இருக்கும் பண்பாட்டு மரபுகளை தான் பேணிக்கொள்வதும் எதிர்கால சமூகத்திற்கு கிடைக்கக்கூடிய வகையில் கையளிப்பதும் அவனுக்குரிய கடமையும் பொறுப்புமாகும்.

பண்பாடு என்பது பண்படுத்தலாகும். கலை என்பது சதா வளர்வதாகும். எனவே தான் நம் உள்ளத்தை பண்படுத்த வல்ல கலைகள் சதா வளர வேண்டும். அத்தகைய கலை பண்பாட்டு மரபுகளை பேணி வளர்க்கும் நோக்குடன் எடுக்கப்படும் இப்பேர்ப்பட்ட பண்பாட்டுப் பெருவிழாக்கள் ஒவ்வொரு மனிதனது மனத்திலும் மாற்றத்தையும் கலைகளை பேண வேண்டும் என்ற எண்ணத்தையும் எம் இருப்புக்களை என்றும் சிதைவடையாது பாதுகாக்க வேண்டும் என்ற உறுதியையும் விதைத்தல் வேண்டும்.

சமயம், வழிபாடு, கலை, கலாசாரம், வாழ்க்கைமுறை, விழுமியங்கள், ஒழுக்கம், ஆடை அலங்காரம் என அனைத்தையும் ஒன்றிணைத்த சொல்லாகவே பண்பாடு அமைகிறது.

பண்பாட்டு பிறழ்வு, கலாசார சீர்கேடு என்பன இன்று அடிக்கடி எம் சமூகத்தில் பேசப்படும் விடயங்களாக உள்ளன. யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த எம் மக்கள் ஒரு காலத்தில் பண்பாட்டுக் வரைவிலக்கணமாக வாழ்ந்தவர்கள், கலாசாரத்தை உலகிற்குக் கற்றுக் கொடுத்தவர்கள் என்பதை எவரும் மறந்து விடக் கூடாது.

எம் பண்பாட்டிலிருந்து விட்டுக் கொடுக்கின்ற விடயங்கள் ஒவ்வொன்றும் எம் இனத்தின் இருப்பை விட்டுக் கொடுக்கின்ற விடயங்களாகவே அமைவன. எனினும் சாரம்சம் அழியாது அடிப்படை தவறாது நாம் முன்னேறப் பழகிக் கொள்ள வேண்டும்.

பழைய கழிதலும் புதியன புகுதலும் வழு வல என்று தொல்காப்பியர் கூறுவது போல காலத்திற்கேற்ப பண்பாடு மாற்றமடைவது தவறல்ல. ஆனால் அவ்வாறு மாற்றமடைகின்ற போதும் அம் மாற்றம் ஆரோக்கியமானதாக அடிப்படைத்தன்மை மாறாததாக இருத்தல்வேண்டும். எமது பண்பாட்டு மரபுகளை அறவே அழிக்கின்ற வாழ்வியல் கோலங்கள் எம் இனத்தின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கும்.

உதாரணத்திற்கு ஏர்பூட்டி உழுவது எமது பாரம்பரியம். ட்ரக்டர் பாவிப்பது நவீனம். ஆனால் நவீனத்தில் இருந்து கொண்டு தைப் பொங்கல் அன்று சூரியனை நினைத்துப் படையல் செய்யலாம். தைப்பொங்கல் பண்டிகையில் எமது பாரம்பரியமும் பண்பாடும் மிளிர்கின்றன.

இன்றைய பண்பாட்டுப் பெருவிழா இயல், இசை, நடனம், நாடகம் எனும் முத்தமிழுடன் இணைந்து கலைகளின் சங்கமமாக அமைவதையிட்டு மகிழ்வடைகின்றேன் என்றார். (எ-60)

## உள்ளூராட்சித்...

...த்தப்பட வேண்டும்.

எனினும் தொகுதி நிர்ணயம் நியாயமான முறையில் நடைபெறவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளதால், தொகுதிகளை மீள் நிர்ணயம் செய்ய அரசாங்கம் எண்ணியுள்ளது.

இதற்கு பல மாதங்கள் செல்லக் கூடும் என்பதால், எதிர்வரும் மார்ச் மாதம் தேர்தலை நடத்த முடியாது என அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசார அடிப்படையில், நடத்துவதாயின் எதிர்வரும் மார்ச் மாதம் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த முடியும். எனினும் தொகுதிவாரியாக இந்த தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற கடும் நிலைப்பாட்டில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இருந்து வருகிறது.

இந்த நெருக்கடியான நிலைமை காரணமாக மார்ச் மாதம் நடத்தப்படவிருந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் கட்டாயம் ஒத்திவைக்கப்படலாம் என தகவல்கள் கூறுகின்றன. (எ-11)

## விசாரணை அறிக்கை...

ஒத்துழைப்பை கடற்படை வழங்குவதாக கடற்பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கூறினார்.

அவன்ற் கார்ட் மிதக்கும் ஆயுதக் களஞ்சியசாலை கடந்த 5ஆம் திகதி சூடானில் இருந்து இலங்கை கடல் எல்லைக்குள் பிரவேசித்தது.

இந்தக் கப்பலின் கப்டனினால் கப்பல் தொடர்பில் வழங்கப்பட்ட தகவல்கள் போலியானவை என்பதால், குறித்த கப்பலை இராணுவம் பொறுப்பேற்று விசாரணைகளை ஆரம்பித்ததாக கடற்படைத்தளபதி தெரிவித்தார்.

சுயாதீன குழுவொன்றின் ஊடாக இந்த கப்பல் தொடர்பில் விசேட விசாரணையை முன்னெடுக்கவுள்ளதாக கடற்படையின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் கூறினார். (எ-11)

## வீரவன்ஸ,கம்மன்பில...

வெளியிட்டுள்ள அவர்,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உலகத்திற்கு முன்னால் நாட்டுக்கு கௌரவம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

இதனால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உள்ள சிறிய கட்சிகள் இதனை கலப்பு என்கின்றனர். இந்த கட்சிகளிடம் முச்சக்கர வண்டியில் ஏற்றிச் செல்லக் கூடியளவிலும் ஆதரவாளர்கள் இல்லை.

வீரவன்ஸ, கம்மன்பில போன்றவர்கள் இதனை தவறு என்றும் காட்டிக்கொடுப்பு என்றும் கூறுகின்றனர். இவர்கள் கூறுவதை போல் நாட்டை அநாதையாக விட முடியாது.

இவர்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து நீக்குமாறு நான் ஜனாதிபதியிடம் கோருகின்றேன் எனவும் நிஷாந்த முத்துஹெட்டிகம குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# முரளி கிண்ண இறுதிப்போட்டி இன்று ஒட்டுசுட்டானில்

முரளி கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டிகள் இன்று காலை 9.30 மணிக்கு ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. காலை 9.30றகு பெண்களுக்கான போட்டியும் அதனைத் தொடர்ந்து ஆண்களுக்கான போட்டியும் இடம்பெறவுள்ளது. பெண்களுக்கான இறுதிப் போட்டியிலே கொழும்பு மாவட்ட பாடசாலைகளின் தெரிவு அணியும் நிட்டம்புவ அணியும் விளையாடவுள்ளது. ஆண்களுக்கான இறுதிப் போட்டியிலே கொழும்பு ஆனந்தா கல்லூரி அணியும் காலி றிச்மன் கல்லூரி அணியும் விளையாடவுள்ளன. (க-281)

## கம்பன் விழா

(யாழ்ப்பாணம்)

மந்திகை கம்பன் கழகத்தின் 39ஆவது ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டியும் இன்று பிற்பகல் 2 மணியளவில் கழக மைதானத்தில் கம்பன் விளையாட்டுக்கழக தலைவர் ச.பிரதீபன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார். பருத்தித்துறை பிரதேச சபை முன்னாள் தவிசாளர் பூ.சஞ்சீவன் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (எ-12)

## இந்.மீனவர்களுக்கு...

குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி பா. சுப்பிரமணியம் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் 9ஆம் திகதி இரவு பருத்தித்துறை கடற்பரப்பில் 2 படகுகளில் வந்து அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 19 இந்திய மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்து யாழ் மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைத்தனர்.

இவர்கள் நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிவானின் வாசஸ்தலத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதவான் அவர்களை 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (எ-9)

## கிளிநொச்சிப் பகுதியில்...

நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் காணி உரிமையாளரினால் காணி துப்பரவு செய்து கொண்டிருந்த வேளை காணியில் உள்ள மலசல கூட குழிக்கு அருகாமையில் கைக்கண்டு ஒன்று இருப்பதை அவதானித்த நபர் உடனடியாக பொலிசாருக்கும் இராணுவத்துக்கும் தெரிவித்துள்ளார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிசாரும் இராணுவத்தினரும் குறித்த மலக் குழியை அதனை அண்மித்த பகுதிகளையும் சோதனையிட்ட போது பாவனைக்கு உகந்த நிலையில் 154 கைக்குண்டுகளும் சேதமடைந்த 94 கைக்குண்டுகளையும் 22 பரா ரக குண்டுகளையும் மீட்டனர். இச் சம்பவம் பற்றி மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிசார் மேற்கொண்டுள்ளனர். (எ-12-15)

## அமெ.வழங்கியது...

திரும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுவதையும் நிராகரித்துள்ளார்.

ஜெனிவா ஓர் அரசியல் அமைப்பு எனவும் தொழிற்பயிற்சி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் இலங்கையில் ஐக்கியநாடுகள் பேச்சாளராக செயற்பட்ட கோர்டன் வெய்ஸ் 40 ஆயிரத்துக்கும் அதிக மானவர்கள் கொல்லப்பட்டதாக பொய்யொன்றை பரப்பினார்.

அதனை ஐக்கியநாடுகள் செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவும் கருத்திலெடுத்தது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளிற்கு எதிரான யுத்தத்திற்கு அவசியமான புலனாய்வு தகவல்களை அமெரிக்கா வழங்கியது. இந்தியாவும் அதற்கு ஆதரவு வழங்கியது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## விடுதலைப் புலிகள்...

இதனால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை விசாரணைக் குழுவினால் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட வேண்டும் என செய்துள்ள பரிந்துரையை அமுல்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் ஓர் புலி உறுப்பினராவார்.

இந்த சந்தேகநபரை நாடு கடத்த சுவிட்சர்லாந்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை.

நோர்வே, கனடா, பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ், சுவீடன் மற்றும் சுவிட்சர்லாந்து உள்ளிட்ட நாடுகளில் போர்க்குற்றச் செயல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளவர்களுக்கு அரசியல தஞ்சம் அளிக்கப்பட்டுள்ளது என குறித்த சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (எ-12)

## கள்ளத் தொடர்பு...

வர்கள் தொடர்பில் ஆய்வொன்றை மேற்கொண்டிருந்தனர். அதன்போது மேற்கண்ட விவரங்கள் வெளிவந்துள்ளது.

குறித்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் கொலை. போதைப் பொருள் கடத்தல் மற்றும் வர்த்தகம், அரச எதிர்ப்புச் சதி நடவடிக்கைகள் போன்றவற்றுக்கு மட்டுமே மரண தண்டனை விதிக்கப்படுகின்றது.

இவற்றில் போதைப் பொருள் கடத்தல் காரணமாக மரண தண்டனை விதிக்கப்படுகின்றவர்களை விட காணிப்பிரச்சினை மற்றும் கள்ளத்தொடர்பு காரணமாக திடீர் கொலைச்சம்பவங்களில் தொடர்புபட்டு மரண தண்டனை விதிக்கப்படுகின்றவர்களே அதிகமாகவுள்ளனர்.

அதே நேரம் இவர்கள் திட்டமிடல் எதுவும் இல்லாமல் முன்கோபம் காரணமாக சடுதியில் கொலை செய்யக் கூடியவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இலங்கையில் அரசாங்கத்துக்கு எதிரான சதி நடவடிக்கை குற்றச்சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்ட யாரும் தற்போதைக்கு கைதிகளாக தடுத்து வைக்கப்படவில்லை என்றும் தெரியவந்துள்ளது. (எ-11)

## தேசிய விசாரணைப்...

இலங்கையின் தேசிய விசாரணை பொறிமுறைக்கு உதவ ஜப்பானிய வழக்கு பணிப்பாளர் மோடோ நுகுடி முன்வந்துள்ளார். உண்மையை கண்டறிவதே தேசிய விசாரணை பொறிமுறையை ஏற்படுத்துவதன் நோக்கம் என அரசாங்கத்தின் தகவல்கள் கூறுகின்றன. இதனை தவிர தென்னாபிரிக்காவின் உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவுக்கு இணையான ஆணைக்குழு ஒன்றும் இலங்கையில் ஏற்படுத்தப்பட உள்ளது. (எ-11)

# இலங்கைக்கு...

இவ்வாறு த வோல் ஸ்ரீட் ஜேனல் எனும் சர்வதேச ஊடகம் வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பில் இவ்வூடகம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள அர்த்தமுள்ள நீதிச் செயற்பாடுகளை எவ்வாறு நம்பகமாகவும், அரசியல் அழுத்தங்களால் பாதிக்கக்கூடிய வகையில் இல்லாமலும் இருப்பதையும் எடுத்துக் காட்டுவது புதிய அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இலங்கை அரசாங்கம் நீதி, பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கத்தை உறுதியாக ஏற்படுத்த வேண்டும் என்பதற்கு தெளிவான வரையறைகள் மற்றும் திட்டவட்டமான நடவடிக்கைகள் அவசியம்.

சர்வதேச பங்காளர்களின் எண்ணிக்கை, அவர்கள் மேற்கொள்ளும் செயற்பாடுகளின் நோக்கமும் முக்கியத்துவமும் மற்றும் அவர்கள் பயன்படுத்தப்படக்கூடிய அதிகாரங்கள் உள்ளடங்கலாக நீதிப் பொறிமுறை அமைப்பு தொடர்பிலான விபரங்கள் தர்க்க ரீதியில் இருக்க வேண்டும்.

நம்பகமான நீதிச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்டிருக்க வேண்டும்.

இது தொடர்பில் அரசாங்கம் சர்வதேச சமூகத்துடன் எவ்வாறு கலந்துரையாடல்களை மேற்கொள்வது என்பது குறித்து விளக்கமளிக்க வேண்டும்.

வாக்குமூலம் மற்றும் தகவல்களை வழங்குவதற்கென தெரிவு செய்யப்படுவோரின் உயிருக்கு அச்சுறுத்தல் இல்லாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து பதவியிலிருக்கும் அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும் என த வோல் ஸரீட் ஜேனல மேலும் தெரிவித்துள்ளது. (எ-11)


## முகாமையாளரும், பணியாளர்களும் தேவை

புதிதாக ஆரம்பிக்க இருக்கும் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முகாமையாளரும், பணியாளர்களும் தேவை. 25-45 வயதுக்குட்பட்ட தகுதி உடையவர்கள் சுயவிபரக்கோவையில் உறவினர் அல்லாத இருவரின் சிபார்சுகளுடன், தங்களது விண்ணப்பங்களை, 18-10-2015க்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (2011)

**Chairman,
RC Enterprises Pvt. Ltd,
67, Temple Road,
Jaffna.**

## STUDY SINGAPORE-MALAYSIA

யாழ் எமது மாணவர்களுக்கு தொழில்சார் பயிற்சி/ உயர்கல்விகளை வெளிநாட்டில் தொடர சிறந்த உத்தரவாதத்துடன் கூடிய வாய்ப்பு.

HOTEL MANAGEMENT · BUSINESS
TRAVEL & TOURS · IT
CULINERY ARTS · ENGINEERING,MEDICINE

[100 க்கும் மேற்பட்ட பாடநெறிகள்]

Spot Admission 17/10/2015

ScholorShips Up To [1500-2000$] · 1 வார இலவச தங்குமிட வசதி

பாடசாலை பிரதிநிதியை சந்திப்பதன் மூலம் விசேட சலுகைகளை பெற்றுக்கொள்ளும் வாய்ப்புகள்

- 100% உத்தரவாதத்துடன் கூடிய நெறியாள்கை
- வேலைவாய்ப்புடன் கூடிய பாடநெறிகள்
- குறைந்த கல்வித் தகமை [க.பொ.த சாதாரணதரம்]
- அனுமதி- வீசா- தங்குமிட வசதி அனைத்தும் எமது சேவையின் கீழ்

இலங்கைக்கான நேரடி பிரதிநிதி இலவச ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள

STUDY SINGAPORE www.edusingapore.sg · BEACON · SDH INSTITUTE · edutrust

SIO INTERNATIONAL
EDUCATION STUDY VISA CONSULTANT
80/37, 1ST FLOOR, JMC BUILDING
KASTHURIYAR ROAD, JAFFNA.
021 221 7865
Email : edusio@gmail.com
HOTLINE - 0722364651

(C-2435)

**வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532**

## World Wide Express & Travels

அனுப்பும் பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு

- வெளிநாட்டு / உள்நாட்டு துரித தபால் பொதிகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான பாதுகாப்பு மற்றும் காப்புறுதி உத்தரவாதம்
- உங்கள் வீட்டில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- சர்வதேச விமான பயணச் சீட்டுகள் (Air Ticket) மீள் உறுதிப்படுத்தல், திகதி மாற்றம் (Date Change) செய்து கொள்ளலாம்.
- கடல்/ஆகாய மார்க்க பெரிய பொதிகள் மற்றும் கார்கோ சேவை (Bulk Cargo)

சி.என்.ஆர். எக்ஸ்பிரஸ் பொதிகள் சேவை
401, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலடி)

Hot Line : 0772931062
Tel : 021 5674145

(C-2428)




## Malaysiaவில் படிக்க, உழைக்க... Hotel முகாமைத்துவகற்கைநெறி

ஆகக்கூடிய கல்வித்தகைமை O/L மட்டுமே

கவர்ச்சிகரமான மாதாந்த பகுதிநேரக் கொடுப்பனவுகள்

கற்கைநெறி கட்டணம் இலவசம்* *Conditions Apply

Limited seats only

(C-2431)



iCS Study Overseas 77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம் 077-3013060,021-4926222 107, B 1/1,Galle Rd, Wellawatte, Colombo 6

## சைப்பிரஸ் (ஐரோப்பா) மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்பு

| வேலை | COUNTRY | வெற்றிடம் | SALARY |
|---|---|---|---|
| HEAVY VEHICLE DRIVER | சவுதி அரேபியா | 05 | 45,000 ரூபா |
| ELECTRICIAN | சவுதி அரேபியா | 07 | 55,000 ரூபா |
| CARPENTERS | சவுதி அரேபியா | 05 | 55,000 ரூபா |
| MASON | சவுதி அரேபியா | 15 | 55,000 ரூபா |
| STEEL FIXER | சவுதி அரேபியா | 15 | 55,000 ரூபா |
| AC- TECHNICIANS | சவுதி அரேபியா | 06 | 63,000 ரூபா |
| PLUMBER | சவுதி அரேபியா | 06 | 55,000 ரூபா |
| CIVIL ENGINEER (DIPLOMA) | சவுதி அரேபியா | 05 | 130,000 ரூபா |
| MECHANICAL ENGINEER | சவுதி அரேபியா | 05 | 130,000 ரூபா |
| COOK -(சமையல்) | சவுதி அரேபியா | 01 | 60,000 ரூபா |
| HELPER -(சமையல் உதவியாள்) | சவுதி அரேபியா | 01 | 45,000 ரூபா |
| CASHIER -(காசாளர்) | சவுதி அரேபியா | 10 | 50,000 ரூபா |
| WELDER -(வெல்டர்) | சவுதி அரேபியா | 02 | 74,000 ரூபா |
| CLEANER - ( கிளீனர்) | சவுதி அரேபியா | 35 | 35,000 ரூபா |
| FARM LABOURERS (தோட்ட வேலையாளர்) | சைப்பிரஸ் | 50 | 150,000 ரூபா |
| CARE TAKER(முதியோர் பராமரிப்பாளர்) | சைப்பிரஸ் | 25 | 60,000 ரூபா |
| COOK -(சமையற்காரர்) | சைப்பிரஸ் | 01 | 80,000 ரூபா |

MANTEK ENTERPRISES · V2 TRAVELS & TOURS

நேர்முகத்தேர்வு : 11-10-2015

கட்டாயமாக சுயவிபரக்கோவை(CV)மற்றும் தகமைச்சான்றிதழ்களின் நிழல்பிரதிகளுடன்(photo copy)வரவும். காலை 10 மணி முதல் மாலை 4 மணிவரை(ஞாயிற்றுக்கிழமை)

தொடர்புகளுக்கு: 0768226243
49A,சப்பல் லேன்,யாழ்ப்பாணம்.

(C-2419)

## SINGER

இப்போது SINGER LED TV க்கு 3 வருட உத்தரவாதம் இலவசம்





நீங்கள் வாங்கும் 32" | 24" SINGER | Skyworth | LED TV களுக்கு 3 வருட உத்தரவாதம் முற்றிலும் இலவசம்

(C-2432)

0115 400 400 · singersl.com · SINGER Plus


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
சங்குநாதம்
Sankunatham
வள்ளுவர் ஆண்டு 2046 | 11.10.2015 | தொலைபேசி : 021 222 3378
நாதம் 35



# ஈழத்தமிழர் எதிர்காலம் முதல்வர் ஜெயா கையில்!

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் மாநாடு ஆரம்பமாகியது. மாநாட்டிற்கு அனைத்து உறுப்பினர்களும் வருகை தந்திருந்தனர்.

**பண்டிதர்:** இறைவணக்கத்தோட மாநாட்டை ஆரம்பிப்பம்.

(பண்டிதரின் அறிவிப்போடு மாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து நின்றனர். வாத்தியார் வைத்திலிங்கம் திருமுறை ஓதினார்.

கல்லாப்பிழையும் கருதாப்பிழையும் கசிந்துருகி நில்லாப்பிழையும் நினையாப்பிழையும் நின் ஐந்தெழுத்தை சொல்லாப்பிழையும் துதியாப்பிழையும் தொழாப்பிழையும் எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியே கம்பனே!)

வாத்தியாரின் திருமுறை ஓதலைத் தொடர்ந்து மூப்பர் கிறிஸ்தவ வழிபாடு செய்தார். எல்லாம் வல்ல பரம பிதாவே! வடக்கு மாகாண சபை நல்ல முறையில் செயற்பட்டு மக்களுக்கு சேவையாற்ற உமது திருவருளைத்தாரும். தமிழ்மக்களின் சொல்லொணாத் துயரங்கள் நீங்க இறைவா! உமது கருணையைக் காட்டியருளும்.

மூப்பரின் வழிபாட்டுடன் மாநாடு ஆரம்பமாகியது.

**விதானையார்:** என்ன இருந்தாலும் இண்டைக்கு நாங்கள் எங்கட வாத்தியாருக்கு ஆசிரியர் தினக் கௌரவம் செய்யவேண்டும். படிப்பித்துக் கொண்டிருக்கிறவர்களுக்குத்தானோ ஆசிரியர் தினம். முப்பது நாற்பது வருடங்களாகத் தங்களை வருத்திப்படிப்பித்த எத்தனையோ வாத்திமார் இப்ப பென்சனில போயிற்றினம். அவையளை நாம் ஒரு போதும் மறந்து விடக்கூடாது.

ஓய்வுபெற்ற ஆசிரியர்களையும் கௌரவிக்கிற முறையை எங்கட வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் குருகுலராஜா ஐயா நடைமுறைப்படுத்த வேணும் எண்டு நாங்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவம்.

**கங்காணி:** விதானையார் சொல்லுறது நூறுவீதம் சரியானது. ஓய்வுபெற்றவுடன் ஆசிரியர்களை மறந்து விடக்கூடாது. ஆகையால் ஓய்வுபெற்ற ஆசிரியர்களையும் கௌரவிக்கும் வகையில் ஒக்டோபர் 7ஆம் திகதியை ஓய்வுபெற்ற ஆசிரியர் தினம் எண்டு பிரகடனப்படுத்தவேணும். இந்தத் தீர்மானத்தை ஆலடி மாநாட்டில நிறைவேற்றுவம்.

**பண்டிதர்:** விதானையார், கங்காணி ஆகியோர் சொல்லுறது நல்ல விடயம். இப்ப படிப்பித்துக்கொண்டிருக்கின்ற ஆசிரியர்களின்ர ஆசிரியர்களையும் கௌரவித்தால்தான் ஆசிரியர்தினம் அர்த்தமுடையதாகும்.

ஆசிரியர் தினத்தில் ஒரு மாணவன் தன்னுடைய ஆசிரியரின் காலில் விழுந்து வணங்கி ஆசீர்வாதம் பெறுகிறான்.

அதேநேரம் தனக்குக் குருவாக இருந்தவரை இந்த ஆசிரியர் கௌரவிக்கவில்லை என்றால் ஆசிரியத்துவம் என்ற சொற்பதம் தனது பெறுமதியை இழந்து போகும்.

ஆகையால் ஓய்வுபெற்ற ஆசிரியர் தினம் என்று ஒருநாளை வடக்கு மாகாண கல்வி அமைச்சு பிரகடனம் செய்யவேண்டுமென ஆலடி மாநாட்டில் நாங்கள் ஏகமனதாகத் தீர்மானிக்கிறம்.

(பண்டிதரின் இந்த அறிவிப்புக்கு ஆலடியில் பலத்த கரகோஷம்)

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா எங்களுக்கேன் கௌரவம். நாங்கள் இப்ப சருகுகள். காடு வாவா என்று கூப்பிடுது. போற எங்களுக்கு ஏன்தான் கௌரவத்தை... இனி எங்கட கௌரவம் அங்க போறது தான்.

**விதானையார்:** பண்டிதர் ஐயா, ஏன் நீங்கள் தளர்ந்து போறியள். எங்கட பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை ஐயா அவர்கள் முதுமையை இரண்டாக வகுத்தவரல்லோ அதில இளம் முதுமை என்று ஒரு சொல்லாட்சியை அவர் சேர்த்திருக்கிறார். ஆகையால் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை ஐயாவின்ர மொழியில சொன்னால் வாத்தியார் இளம் முதுமையானவர்.

ஆகையால நீங்கள் மனம் சோரக்கூடாது. உங்களை நாங்கள் கௌரவிக்கப் போறம்.

(இப்படிக்கூறிய விதானையார் தான் கையில கொண்டு வந்த பையை திறந்து அதிலிருந்த பொன்னாடையை எடுத்து வாத்தியாருக்கு அணிவிக்க, கங்காணியார் தான் கொண்டுவந்த மாலையை வாத்தியாற்ற கழுத்தில போட்டார்)

மூப்பர் சுடுதண்ணிப் போத்தலில கொண்டு வந்த பால் தேநீரை டம்ளர்களில ஊற்றி அனைவருக்கும் கொடுத்ததுடன் சிற்றுண்டிகளையும் பரிமாறிக் கொண்டார்.

(ஒரு சில நிமிடங்களில் ஆலடி விழாக்கோலம் பூண்டு விட்டது. வாத்தியாருக்கு ஒரே பூரிப்பு. ஒரு வார்த்தையும் சொல்லாமல் எல்லா ஏற்பாடுகளும் நடந்திருப்பதைக் கண்டவாத்தியார் ஆனந்தக் கண்ணீர்விட்டார்.

வாத்தியாரைப் புகழ்ந்து பண்டிதர் ஒரு உரையையும் அந்த இடத்தில் நடத்தி முடித்தார்.

பண்டிதரின் உரையில், எங்கட வாத்தியார் வைத்திலிங்கம் ஒரு உத்தமர். அவற்ற கோல உடை அந்தக் காலத்தில எங்கட உபாத்தியாயர்கள் எப்படி இருந்தனர் என்பதற்கு நல்லதொரு அடையாளம்.

இலங்கையில எத்தனையோ அரச தொழில்கள் இருக்கின்றன. ஆனால் ஆசிரியத் தொழில் என்பது தெய்வீகமானது. அதனால தான் டாக்டர் அப்துல் கலாம் ஆசிரியத் தொழிலை ஒரு பாக்கியமாக கருதவேண்டும் என்று கூறினார்.

டாக்டர் அப்துல் கலாம் இந்தத் தத்துவத்தை அண்மைக்காலத்தில் சொல்லி இருந்தாலும் எங்கட வாத்தியார் வைத்திலிங்கம் இதை அந்தக் காலத்திலேயே அமுல்படுத்தினவர்.

பண்டிதரின் உரையைத் தொடர்ந்து பதிலுக்கு வாத்தியாரின் நன்றியுரையும் இடம்பெற்றது.

ஓய்வுபெற்ற ஆசிரியர்களைக் கௌரவிக்க வேணும். ஓய்வுபெற்ற ஆசிரியர்தினம் அனுஷ்டிக்க வேணும் எண்டு நினைத்த ஆலடி மாநாட்டு அங்கத்தவர்களின் செயல் முன்மாதிரியானது என தனது நன்றியுரையில் வாத்தியார் குறிப்பிட்டார்.

**மூப்பர்:** இயற்கை அனர்த்தம் எங்களை இடைக்கிடை வதைக்கத்தான் செய்யிது.

கடந்த 4 ஆம் திகதி கடலில மின்னல் தாக்கினதில கடற்றொழிலில ஈடுபட்டுக்கொண்டிருந்த யாழ்ப்பாணம் குருநகர் முதலாம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த ஐஸ்சன் யூட் கனிஸ்ரன் என்ற 24 வயது இளைஞன் இறந்து போன செய்தி மிகவும் துன்பம் தருவதாகும்.

எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியில கடலுக்குச் சென்று மீன்பிடித் தொழிலில ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது இடி மின்னல் தாக்கி அந்த இளைஞன் உயிரிழந்தமை உண்மையில் பரிதாபத்திற்குரியது.


கடலுக்குச் சென்ற மகன், வீடுவருவான் என்று பெற்றார் காத்திருந்த வேளை உயிரற்ற உடல்தான் வீட்டிற்கு வந்தால் நிலைமை எப்படியிருக்கும். பாவம் வாழ வேண்டிய பிள்ளை.

உழைக்கிற பிள்ளையைப் பறிகொடுத்தால் அந்தக் குடும்பம் எவ்வளவு கஷ்டப்படும்.

**கங்காணி:** என்ன இருந்தாலும் இயற்கை அனர்த்தத்தால் இறப்பு நடந்தால் சம்பந்தப்பட்டவர்களுடைய குடும்பங்களுக்கு அரசாங்கம் நிவாரணம் கொடுக்க வேணும். இது கட்டாயம்.


**விதானையார்:** கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை இடி மின்னல் தாக்குதலுக்குப் பலியான அந்த இளைஞனின்ர குடும்பத்திற்கு எங்கட வடக்கு மாகாண கடற்றொழில் அமைச்சு இழப்பீட்டுத் தொகை கொடுக்கவேணும் என்ற ஆலடி மாநாட்டு தீர்மானத்தை எங்கட கடற்றொழில் அமைச்சர் டெனீஸ்வரனிடம் முன்வைப்பம்.

இப்படி விதானையார் கூற ஆலடிப்பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க மாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## ஓய்வுபெற்ற ஆசிரியர்களையும் கௌரவிக்க ஒரு தினம் வேண்டும்

ஆதித்தன்



# ஈழத்தமிழர் எதிர்காலம் முதல்வர் ஜெயா கையில்





வேல்முருகன்

ஐக்கிய நாடுகள் சபை அலுவலகம் முற்றுகை, ரயில் மறியல் போர், சுங்க கட்டணம் வசூல் மையம் முற்றுகை என்று போராட்டக் களங்களில் பரபரப்பாக இயங்கி வருகிறார் தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன். திருச்சி சிறப்பு முகாம் அகற்றும் போராட்ட ஏற்பாடு களைச் செய்து கொண்டிருந் தவரை நாம் சந்தித்தோம்.

"நீதிக்காக ஏங்கி நிற்கும் தமிழீழ மக்களுக்கு ஐ.நா மனித உரிமைகள் மன்றத் தின் 30 ஆவது அமர்வு பெரும் ஏமாற்றத்தைத் தந்துள்ளது. மனித உரிமை மன்ற உயர் ஆணையர் புலனாய்வு அறிக்கையை செப்டெம்பர் 16 ஆம் நாள் வெளியிட்டபோது, நீதியின் வருகை நெருங்கிவிட்டது போல் ஒரு நம்பிக்கை துளிர்விட்டது. மனித உரிமை நாடகமாடிய அமெரிக்க வல்லரசு, இலங்கைக்கு ஆதரவாகத் தீர்மானம் கொண்டுவந்து தமிழர்களை நம்பவைத்து கழுத்தறுத்தது. அந்தத் தீர்மா னத்தை இந்தியாவும் சேர்ந்து ஆதரித்தது என்பதில் இருந்தே அதன் லட்சணத்தை நாம் தெரிந்துகொள்ளலாம். இல ங்கை அரசே அந்தக் குற்றங் கள் பற்றி விசாரிக்க வழி செய்ததன் மூலம் அமெரிக்கா வும், இங்கிலாந்தும், இந்தியா வும் நீதிக்கொலை செய்துவிட் டன. காங்கிரஸ் அரசைப்போ லவே பி.ஜே.பி அரசும் கூட்டுக் களவாணி வேலை பார்க்கி றது. எந்தவித சமரசமும் செய்துகொள்ளாத தமிழக முதல்வரின் உறுதியான நிலைப்பாடு உலகத் தமிழர்க ளுக்கு நம்பிக்கையை கொடுத் துள்ளது" என்று ஆரம்பித்தார்.

"தமிழக அரசை கண்டி த்தும் இலங்கைத் தமிழர்க ளுக்காக போராட்டங்கள் நடத்துகிறீர்களே?"

"தமிழீழத்தில் சிங்கள பேரினவாதத்தின் இனப்படு கொலை, அழித்தொழிப்பில் இருந்து தப்பித்து தாய்த்தமிழ கத்துக்கு வந்த ஈழத்தமிழ் உறவுகளில் 14 பேர் செய்யூர், திருச்சி சிறப்பு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள னர். இந்தச் சிறப்பு முகாம்கள், கருணாநிதி ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டவை. விடுத லைப்புலிகள் அமைப்புக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீட்டிக்கவும் அந்தக் கோரிக் கைக்கு வலுசேர்க்கும் வகை யில் ஈழத்து உறவுகள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள னர். இந்த முகாம்களை மூடிவிட்டு, அவர்களை பொதுமுகாம்களிலோ அல்லது அவர்கள் விரும்புகின்ற, உறவுகள் வாழ்கின்ற வெளி நாடுகளுக்கோ அனுப்ப வேண்டும்.

இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி சுரேஷ்குமார் என்பவர் ஒக்டோபர் முதலாம் திகதி தொடர் உண்ணா விரதம் தொடங்கினார். தனது கோரிக்கை நிறைவேறாத நிலையில் கை நரம்புகளை வெட்டிக்கொண்டு தற்கொ லைக்கு முயன்றுள்ளார். அவர்மீது பொலிஸாரை கொலைசெய்ய முயற்சி செய்தார் என்று வழக்குப் பதிவு செய்துள்ளனர். போரில் பாதிக்கப்பட்டு, இடுப்புக்குக் கீழே பாதம் வரை செயலி ழந்து இருக்கும் அவர்மீதே பொலிஸார் இரக்கமற்ற முறையில் நடந்துகொண்டது வேதனை அளிக்கிறது. ஈழத் தமிழ் உறவுகள் அகதிகளாக வந்தபோதும் நரக வாழ்க்கை வாழ்கின்ற அவலம் நீடிக்கி றது. கல்வி, அரசின் சமூக நலத்திட்ட உதவிகள் அனைத் தும் ஈழத்தமிழர்களுக்கு தமிழக முதல்வர் கிடைக்கச் செய்துள்ளதை உலகத் தமிழ் சமூகம் நன்றிப் பெருக்குடன் பார்க்கிறது. எனவே, சிறப்பு முகாமில் உள்ளவர்களை முதற்கட்டமாக, பொதுமுகாம்க ளுக்காவது மாற்ற முதல்வர் உத்தரவிட வேண்டும்.".

"தமிழர் விவகாரங்களில் மத்திய அரசின் செயற்பாடு எப்படி இருக்கிறது?"

"இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்வுக்கு தமிழக முதல்வர், சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து ஏகமனதாக நிறைவேற்றி பிரதமருக்கு அனுப்பி வைக்கிறார். தமிழ்நாட்டுப் பிரச்சினைகளை தமிழக அரசியல் கட்சிகள் சொல்லாமல் வேறு யார் சொல்ல வேண்டும் என்று மத்திய அரசு எதிர்பார்க்கிறது என்று தெரியவில்லை. அ.தி.மு.க., தி.மு.க., ம.தி.மு.க., தே.மு.தி.க., காங்கிரஸ் கட்சிகள் மட்டுமல்லாது தமிழக பி.ஜே.பி தலைவர்களும் குரல் கொடுக்கிறார்கள். தமிழகத்தின் உயிர்நாடி பிரச்சினையான நதிநீர் பிரச்சினைகள், தமிழர்களின் வாழ்வாதாரத்தைச் சீரழிக்கும் மீத்தேன், நியூட்ரினோ என்று எந்த பிரச்சினையாக இருந்தாலும் மத்திய அரசு கண்டுகொள்வதே இல்லை. இலங்கை இராணுவத்துக்கு இந்தியாவில் பயிற்சி கொடுக்கக் கூடாது என்று முதல்வர் கடிதம் எழுதியும் மரியாதை இல்லை. தமிழ்நாடு, இந்தியாவுக் குள்தான் இருக்கிறதா என்று தெரியவில்லை.

மாற்றான் தாய் மனப்பான்மையோடு நடந்துகொண்ட காங்கிரஸ் ஆட்சி, அதிகாரத்தில் இருந்து தூக்கி வீசப்பட்டது. தமிழக த்தில் துடைத்தெறியப்பட்டது. அதே நிலைமைதான் நாளைக்கு பி.ஜே.பி இற்கும் ஏற்படும் என்பதை மோடி அரசு நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

உலகத் தமிழர்கள் நலன் காக்கும் உலகத் தமிழர்களின் மாநாடு நவம்பர் 5, 6 ஆகிய திகதிகளில் தென் ஆபிரிக்காவில் நடக்கிறது. அந்த நாட்டு ஜனாதிபதி உட்பட உலகமெங்கும் வாழும் தமிழர் தலைவர்கள் கலந்துகொள்கிறார்கள்.

அ.தி.மு.க., தி.மு.க உட்பட அனைத்துக் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இலங்கை இனப்படுகொலைக்கு நீதி தேடல், அவர்களின் வாழ்வுரிமைகள் குறித்து விவாதிக்கப்பட இருக்கிறது."

"சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு அணிகள் அமைவது வேகமெடுக்கும் நிலையில், நீங்கள் எந்தக் கூட்டணியில் இருக்கிறீர்கள்?"

"நாடாளுமன்றத் தேர்தலில் இருந்து அ.தி.மு.க அணியில்தான் இருந்து வருகிறேன். தமிழர்களின் வாழ்வுரிமையைக் காப் பாற்றுவதில் முதல்வர் அம்மா முதல் இடத்தில் இருக்கிறார். அவரது ஆணித்தரமான முடிவுகளால்தான் ஈழத் தமிழர்களுக்கும் தாய்த் தமிழகத்துக்கும் விடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது."

ஜூனியர் விகடன்




# கருப்பங்கழி!



விஜயநகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயர், தெனாலிராமனுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். இதைப் பார்த்த மற்ற அரசவையினருக்கு தெனாலி மீது பொறாமை ஏற்பட்டது. அவர்கள் அடிக்கடி, "அரசே! எங்களிடம் என்ன குறை? நீங்கள் ஏன் எங்களைவிடத் தெனாலிக்கு அதிக முக்கியத்துவம் தருகிறீர்கள்?" என்று கேட்டனர். இதற்கு பதில் அரசரின் சிரிப்புத்தான்.

ஒருநாள் தெனாலி விடுப்பில் சென்றிருந்தான். அரசர், அமைச்சர், சேனாதிபதி முதலானோர், மாறுவேடத்தில் நகர்வலம் சென்றனர். பேசிக்கொண்டே ஒருகிராமத்தை அடைந்தனர். ஓரிடத்தில் விவசாயிகள் அமர்ந்து பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்தார் அரசர். அவர்களி டம் சென்று "நாங்கள் வெளிநாட்டி னர், உங்களை இந்நாட்டு அரசர் நன்றாகக் கவனித்துக்கொள்கிறாரா?" என்றார்.

உடனே அனைவரும் அரசரைப் புகழ்ந்தனர். பிறகு அரசர் ஒரு முதிய விவசாயிடம் அதே கேள்வியைக் கேட்டார். உடனே அவர் சட்டென்று அங்கிருந்து எழுந்து, எங்கோ போய் விட்டுப் பிறகு, திரும்பி வந்தார்.

அவர், கையில் ஒரு கருப்பங்கழி! (கரும்புத் தண்டு) அவர், அங்கு வந்ததும் அதை இரு கையாலும் உடைத்தவாறு, "சகோதரா! எங்கள் அரசர் இதைப் போன்றவர் என்றார். அவரது பதில் அரசருக்கு ஆச்சரியத்தைத் தந்தது. அமைச்சரைத் திரும்பிப் பார்த்தார்.

அமைச்சரோ "அரசே! அவர், எங்கள் அரசர் பலவீனமானவர்: எவரும் அவரை எளிதில் வீழ்த்திவிடலாம் என்பதைக் குறிக்கக் கரும்பை ஒடித்துக் காட்டினார்" என்றார்.

இதைக் கேட்டதும் அரசருக்கு ஆத்திரம் வந்தது. அவர் ஏதோ கூறவந்தார்.


அப்போது பின்னாலிருந்து தலைப் பாகை கட்டிய ஒருவர் எழுந்து, "கோபப்படாதீர்கள் தயாநிதியே! இப்போது கிழவர் கரும்பை உடைத்து, அரசர், கரும்புபோல் மேலிருந்து கசப்பும், இடையில் இனிப்பும் உடையவர் என்பதை உணர்த்தத்தான் இப்படி செய்தார்" என்று கூறிக்கொண்டே தனது பொய்த்தாடியை எடுத்தார். அது வேறுயாருமல்ல! தெனாலி ராமன்தான்.

"அரசே! என்னைக் கண்டுபிடிக்க முடியாவிட்டாலும், நான் உங்களது பணியாள். என்னால் உங்களை விட்டு, எப்படி இருக்க முடியும்?" என்றார். அதைக் கண்ட அரசர் சிரித்துவிட்டார். தெனாலியை கட்டி அணைத்துக்கொண்டு நான் உன்னிடம் பிரியம் வைத்திருப்பதற்குக் காரணமே இதுதான்" என்று புகழ்ந்தார்.

கேட்டுக்கொண்டிருந்த அமைச் சர், ராஜகுரு மற்றும் சேனாதிபதிக்கு அவமானமாகப் போய்விட்டது. அதன்பிறகு, அரசவையில் தெனாலி ராமனின் மதிப்பு மேலும் அதிகரித்து விட்டது.




# மதுபானம் மூளையில் ஏற்படுத்தும் நிரந்தரப் பாதிப்பு!




நரம்புகள், நரம்புக் கலங்களில் திருத்த முடியா சிதைவு

மதுவைக் குடிப்பவர்கள், அதைக் குடிக்கும் போது தமக்கு என்ன நிகழ்கிறது என்பதை மறந்துவிடுகிறார்கள். மதுவானது குறுகிய கால ஞாபகங்களை நீண்டகால ஞாபகங்களாக மாற்றுவதைக் கடுமையான செயலாக்கும் வகையில் மூளைக்கு பாதிப்பைக் கொடுக்கிறது. அதாவது, நினைவுகளைப் பலவீனப்படுத்து கிறது.

பெரியவர்முதல், இளவயதினர் வரை, மதுப் பழக்கதுக்கு அடிமையாகிவிட்ட இன்றைய காலத்தில் மதுவால் ஏற்படும் பாதிப்பை அனை வரும் அறிந்திருத்தல் அவசியம்.

நாட்டின் நாளைய தலைவராக வேண்டிய இளந் தலைமுறையினரில் பலர் மதுபானம் அருந்துதுவதால், மூளையில் எத்தகைய மாறுதல்கள் ஏற்பட்டு, அவர்கள் எப்படி சமூகவிரோத செயல்களுக்கு ஆட்பட்டு சீரழிந்துபோகிறார்கள் என்பதை ஆய்வாளர்கள் விஞ்ஞானபூர் வமாக விளக்குகிறார்கள்.

இளவயதில் தான் மூளை அபிவிருத்தியடை கிறது என்று நாம் அறிந்து வைத்திருந்தோம். ஆனால், அது உண்மையல்ல.

(தொடரும்)

தமிழில்-பாமா









கர்ணனுக்கு கிடைத்தது நியாயமா? துரோகமா?

ஜெனிவாவில் நிறைவேறிய பிரேரணை பற்றி?

அஜித்தின் வேதாளம் எப்போது வெளிவரும்?

**சமீதரன் — நயினாதீவு**

**அஜித்தின் வேதாளம் எப்போது வெளி வரும்?**

வாற தீபாவளி தல தீபாவளிதான்.

**தனு — அல்வாய்**

**ஜெனிவாவில் நிறைவேறிய பிரேரணை பற்றி?**

ஜெனிவாவில் உள்ளகமோ? வெளியகமோ? கொழுக்கட்டையோ? மோதகமோ? ஏதோ ஒன்று நிறைவேறி விட்டது. ஆனால் இலங்கையிலோ தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு பதில் சொல்ல மறுக்கும் பெரும்பான்மை விசாரணைக்கு எதிராக போராட்டம் நடத்துவதுதான் வேதனையின் உச்சம்.

**வசந்தி — பருத்தித்துறை**

**காதலிச்சு ஏமாத்திற ஆண்களுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?**

தண்டனை பற்றி தெரியாது ஆனால் ஆணோ பெண்ணோ ஏமாற்றுபவருக்கு தண்டனை ஒன்றாகத்தான் இருக்கவேண்டும்.

**கோபி — மந்திகை**

**புலி படம் பற்றி?**

பிரபலங்கள் சிறுவர்களுக்கு ஏற்றபடம் குடும்பத்துடன் பார்க்கக்கூடிய படம் என்று பாராட்டுகின்றனர். சமூக வலைத்தளங்கள் புலியை கழுவி ஊத்துகின்றன. ஆனால் புலியின் வசூல் வேட்டை தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

**நரேன் — வல்வெட்டி**

**போர்க்குற்ற விசாரணைக்கு என்னதான் முடிவு?**

இலங்கை அரசு தங்கப்பதக்கம் சிவாஜியா தன் மகன் என்று கூட பார்க்காமல் துப்பாக்கியை எடுத்து சுடுவதற்கு. சும்மா இருங்கையா கடுப்பேத்தாமல்.

**கவி — மிருசுவில்**

**தற்கால உலகம் பற்றி?**

ஐயோ காப்பாற்றுங்கோ! யாரோ கிணத்துக்க விழுந்து போனாங்கள் என கத்திய மூதாட்டியின் குரல் கேட்ட ஏழெட்டுப் பேர் ஓடினார்கள் கையில் செல்போனுடன். என்ன உலகமடா இது.



**அம்முக்குட்டி — சுழிபுரம்**

**குட்டிக் கதை சொல்லுறதில நீங்க வீரனாமே?**

முத்தம் கேட்டவுடன் கொஞ்சமும் யோசிக்காமல் ச்சு ச்சு என மாறிமாறி தரும் குழந்தைகள், கையில் வைத்திருக்கும் இனிப்பை கேட்டால் யோசித்து விட்டே தருகின்றது நாம் வாங்க மாட்டோம் எனும் நம்பிக்கையுடன்.

**அருள் — கல்வியங்காடு**

**இறைவனின் படைப்பை நினைத்து வியந்ததுண்டா?**

வாய் வழியாவும் மூச்சுவிட படைத்த கடவுள் எவ்வளவு பெரிய விஞ்ஞானி. இல்லையென்றால் சாதாரண ஜலதோசம் வந்தாலே மண்டையை போட்டிருப்போம்.



தொலைநோக்கு பார்வைகொண்ட எங்கள் தலைவர் மீது கொலைநோக்கு பார்வைகொண்டிருக்கும் எதிர்க்கட்சித் தலைவரே... உங்களுக்கு திராணி இருந்தால் அதைச் செய்துபாருங்கள் பார்க்கலாம்?

**அன்பு வாசகர்களே!**

நீங்களும் வியாசர் பகுதிக்கு உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள். அரசியல், ஆன்மீகம், சமூகம், பொழுதுபோக்கு சார் கேள்விகளை மிக சுருக்கமாக உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பி வையுங்கள்.

**குறுந்தகவல் (SMS) 021 567 1532**

**பெரி — யாழ்ப்பாணம்**

**வள்ளுவருக்கு உள்ள அறிவு தற்போது யாருக்குள்ளது?**

வள்ளுவரின் உடலில் இருந்த விபூதி குறிகளை அழித்து அவர் எந்த மதமும் சாராதவர் என விதண்டாவாதம் பேசுபவர்களுக்கு.

**மாறன் — வன்னி**

**தத்துவம் ப்ளீஸ்?**

நாலு பேருக்கு முன்னாடி நல்லவனா இருக்கிறது பெரிய விஷயம் இல்லை நாலு சுவருக்குள்ள நல்லவனா இருக்கிறது தான் பெரிய விஷயமே. (சமீபத்தில் படித்ததில் பிடித்தது)

**நிஷானா — யாழ்ப்பாணம்**

**புலமைப் பரிசில் பரீட்சையில் பிள்ளைகளை திணிப்பது முறையா?**

என்னைப் பொறுத்தவரை அந்தப் பரீட்சையை பிள்ளைகளுக்கு வைப்பதைவிட பெற்றோருக்கு வைப்பது சாலச் சிறந்தது.

**தியா — மந்திகை**

**கர்ணனுக்கு கிடைத்தது நியாயமா? துரோகமா?**

பாண்டவர் தன் சகோதரர்கள் என அறிந்தும் துரியோதனனைவிட்டு கர்ணன் பிரிந்திடாது இருந்தான். செஞ்சோற்றுக் கடன் தீர்த்தான். இது நியாயம். அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டிட போரிடும் போது சில நல்லவர்களையும் இழக்க வேண்டி வந்து விட்டது. இது துரோகமல்ல. ஆக எல்லாம் அவன் செயல்.

**கிருஷா — வரணி**

**இன்றைய உலகம் போகும் போக்கைப் பார்த்தால் பயமாக இருக்கிறதே?**

குரங்கிலிருந்துதானே மனிதன் வந்தான் அதே மனிதன் இப்போது குரங்கை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறான். கொஞ்சநாள் பொறுத்திருங்கள் மரங்களில் தொங்குவதை காண முடியும்.

**தர்ஷிகா — யாழ்ப்பாணம்**

**பணம் நிறைய உள்ளது பத்துப் பேரின் உணவை தனித்துச் சாப்பிட முடியவில்லையே?**

உன்னிடம் பணம் அதிகமாய் இருந்தால் பசித்து வரும் ஏழைக்கு உணவளி அன்றி பணத்தை பொத்தி பொத்தி வைப்பாயாயின் இறுதி யில் சேர்த்த பணம் அவ்வளவுக்கும் மருந்து வாங்கி சாப்பிடும் நிலை வரும் மறந்து விடாதே!

# கவிதைக் கலசம்



## நிலவிலும் இல்லையே கறை

வாழப்பிறந்தவர் நாங்கள்
வஞ்சிக்கப்படுவதற்கல்ல
ஆளப்பிறந்தவர் நாங்கள்
அழுவதற்காக அல்ல
கலைப்பதற்காகவா?
எங்களின் கோலம்
களிப்புடன் வாழ
இனிவருங் காலம்
குனிவதா? எங்களின் நிலை
குன்றென நிமிர்ந்து
நிற்கத்தான் தலை
எங்களில் என்னதான் குறை?
அந்த நிலவிலும் இல்லையே கறை
வஞ்சகர் நெஞ்சில்தான் மறை
வளரும் பிஞ்சுமேல்
கொள்வீர் அக்கறை
எங்களின் உதயம்
அன்னையின் கருவறை
என்றும் அவள்
நெஞ்சிலே உறை
காடையர் கன்னத்தில்
வை ஒரு அறை
கடுப்பாகினால் கடுகென மறை
உள்ளத்தை என்றும்
அன்பினால் நிறை
உள்ளது உனக்கு
இறைவனின் துணை

திருமதி ப.அமிர்தலிங்கம்
யா/ உசன் இராமநாதன் ம.வி.

## இமயம் தொட

அரும்பாகி பூவாகி
காயாய் கனியாகி
காகத்திரையாகி
எச்சத்தில் இடம்தேடி
மண்ணோடு மடியாகி
விதைபிளந்தரும்பாகி
விருட்சத்தை நோக்கி
விழுதுவிட்டு நிற்கும்
ஆலமரங்களைப்பார்!
அதிலிருந்து கற்றுக்கொள்
அதுதான் வாழ்க்கை

மாவை. நா.கஜேந்திரன்

## மனித மிருகம்

அது...
என்னிடம் நன்றி காட்டி
வாலாட்டியது...
தனக்குத் தேவையான போதெல்லாம்
உதவி செய்தது
உத்தம வேடம் பூண்டிருந்தது
உண்மை பேசிக் காட்டியது
சொற்ப காலத்துக்கு
மனிதம் அதுவல்ல
நிரந்தரமானதும்
நிஜமானதும்
நிச்சயமானதும் மட்டுமே மனிதம்
காற்றடித்தால் சரியும் மனமும்
உதவிக் கரங்களை மடக்கிக் கொள்வதும்
சந்தர்ப்பம் ஏற்று மாறிக்கொள்வதும்
மனிதம் மடிந்த மிருகம்தான்

சாத்விகா

## பூரணத்துவம்

வாசிப்பின் விதத்திலும்
நேசிப்பின் பதத்திலுமே
மனிதன் உண்மையான
பூரணத்துவத்தை அடைகிறான்

## உயர்ந்தோன் ஆற்றல்

நல்லோரை மதிப்பதும்
தீயோரை நல்வழிப்படுத்துவதும்
உயர்ந்தோன் ஆற்றல்

## ஓட்டத்தில் இல்லை வாட்டம்

வாழ்க்கை ஓர் ஓட்டம்
அதில் நாட்டத்தை விடுப்பவனுக்கு
இனி இல்லை வாட்டம்

அ. அச்சுதன்
யா/ இ.க.

# மௌனத்தின் தேடல்– 269



## என்னோடு வந்துவிடு

இன்று முதுமை என்ற உயர்வால்
கால்கள் பின்னலிட்டு தள்ளாட
ஓய்வூதிய கணக்கு மாறியது
பெற்றவள் பெயருக்கு
என் விதி வரைந்தது
வாழ்வு வீதியிலென
என் கதை எழுத
கண்களில் ஒளியுமில்லை
கரங்களில் வலுவுமில்லை
சொல்லியழ யாருமில்லை
எத்திசையும் முதுமை
முகாரி ராகம் ஒலிக்கின்றன

ஆ.இந்திரா
ஶ்ரீபரமானந்த ஆச்சிரமம்,
வதிரி

## விடியலுக்காக

எனக்காக
சூரியனும் இல்லை
காற்றும் இல்லை
எனக்காக
நாளையும் இல்லை
இன்றுமில்லை
விளக்கை தொடாமல்
விட்டில்கள் சாவதில்லை
தென்றலை தழுவாமல்
பூக்கள் மலர்வதில்லை
கனவுகள் தொடாமல் வாழ்க்கை
தொடர்வதும் இல்லை
முடிவதும் இல்லை
நானும் கனவு காணுகிறேன்
விடியலுக்காக

லி. டயானி
மறவன்புலோ மத்தி

## ஏக்கம்

என்ன தாத்தாவே?
அந்த விளக்கில்
வெளிச்சம் இருப்பது
உங்கள் வாழ்விலும்
வெளிச்சம் வராதா?
என்று ஏங்குகிறீர்களா?
எல்லாம் வரும்
அந்த இறைவன் இருக்கின்றான்
அதுவரை நீங்களும்
நானும் சேர்ந்தே காத்திருப்போம்

ர.டன்சிகா, மானிப்பாய்

## தவறேது கண்டீர்

எம்மவரின் வாழ்வு
விடியும் விடியுமென்று
விடியலுக்காய் ஏங்கி நின்று
விடிந்த பாடில்லாது...
முதுமைதான் நான்
அடைந்தேனென
வெறுப்போடு விளம்புகின்ற
இப்பெரியவரின் கூற்றில்
தவறேது கண்டீர்

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

## யார் யாராகியரோ

குருத்தோலை சருகாச்சோ?
குப்பி விளக்கும் நூரலாச்சோ?
மருண்டவளும் மாண்டாச்சோ?
மண்மேடு தரிசாச்சோ?
மரம் பழுத்து நாளாச்சோ?
மக்களும் கை விட்டாச்சோ

அ.பத்மினி
மிருசுவில் வடக்கு

## அணைப்பது யார்?

சூரிய ஒளியாக
உலகெல்லாம் பறந்தவர்
இன்று
விளக்கின் ஒளியாக
ஒளிர்கின்றார்
ஓரிடத்திலே...
புரிந்திடு மனிதா
இருக்கும்போதே
அள்ளிக்கொடு
அணைத்திட கைகளாவது
கிடைக்கும்

சு.அஜித் சுலக்ஷன்
மண்டைதீவு

## முதுமை முடியாதா?

இருப்பதற்கோ இல்லமில்லை
நடப்பதற்கோ முடியவில்லை
இனசனங்கள் தொலைவில்
இல்லை–ஆனாலும்
இதயச்சுமை இறங்கவில்லை
ஈன்றெடுத்த மக்கள் எல்லாம்
லண்டனிலே வாசஞ்செய்ய
ஈவிரக்கமற்ற ராத்திரியே–என்
முதுவாழ்வு முடியாதா?


எம்.சுகா
அச்சுவேலி

## தனிமை

தள்ளாத வயதினிலும்
தனித்துவிட்ட தாத்தாவே
பரந்த உலகுண்டு
பகலவனின் ஒளியுண்டு
நிமிர்ந்து நடந்திட
நேரான தடியுண்டு
பாதங்கள் நோகாமல்
பாதணிதானுண்டு
இரவுக்குத் துணையாக
ஒளிதரும் லாம்புண்டு
உணவு தந்து அரவணைக்க
உறவினர்தான்
யாருளரோ

அனிஞ்சில்
புவபாலன்

# மௌனத்தின் தேடல் –270



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 13.10.2015ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

**பாடசாலைகளில் மாணவர்களுக்கு சரீர தண்டனை கொடுப்பது பற்றிய நிபுணர்களின் கருத்துக்கள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்தன. இவ்வாரம் அவற்றைப் படித்த வாசகர்களின் கருத்துக்கள் தொகுத்து வெளியிடப்படுகின்றன.**

## மனவெளி

**உலக உளநலதினம் 2015 "உளநலத்தின் மேன்மையை மதிப்போம்" என்ற கருப்பொருளில் இவ்வாண்டு ஒக்டோபர் 10இல் அனைவராலும் உலக உளநலதினம் கொண்டாடப்படுகின்றது.**



**நல்லூர் தெற்கு சிறீ விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர், உப அதிபர், ஆசிரியர்களைச் சந்தித்து மாணவர்களுக்கு சரீரத் தண்டனை வழங்குவது தொடர்பில் கலந்துரையாடியபோது...**

எங்கள் பாடசாலை தரம் 1 தொடக்கம் 11 வரையான மாணவர்களைக் கொண்ட சிறிய பாடசாலை. அத்துடன் பொருளாதாரத்தில் பின்தங்கிய மிகவும் வறுமையான, இடம் பெயர்ந்த மாணவர்களைக் கொண்டது. குறிப்பாகப் பெற்றோர்கள் மிகவும் வறுமையான, கல்வியறிவில் குறைந்தவர்களான சூழ்நிலையில் வாழ்கின்றனர். அத்தகைய பின்தங்கிய சூழலில் இருந்து பாடசாலைக்கு வருகின்ற மாணவர்கள் பல்வேறு பிரச்சினைகளுடனேயே வருகின்றார்கள். அவர்களின் நிலைமையைப் புரிந்து கொண்டு நாங்கள் செயற்படுகின்றோம். அந்த சூழலில், இலகுவில் மனதளவில் பாதிக்கக்கூடிய நிலையிலிருக்கின்ற மாணவர்களை நாங்கள் மீண்டும் அடிப்பதால் எங்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கப்போவதில்லை. இன்னும் பிள்ளையின் பாதிப்பு அதிகரிக்குமே தவிர வேறெதுவும் கிடைக்காது.

தவிர, பிள்ளைகள் உண்மையில் பாவம்! அவர்களில் பலர் பாடசாலைகளில் வழங்கப்படுகின்ற மதிய உணவை ஆதாரமாகக் கொண்டு வருகின்றனர். அத்துடன் பல உளவியல் தேவைகளுடன் வருகின்றனர். அவர்களில் அநேகமானவர்களின் பெற்றோர் பிரபல பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர்களின் வீடுகளில் வேலை செய்பவர்கள் அல்லது எங்காவது கூலித் தொழில் செய்பவர்கள். அதுமட்டுமன்றி, எங்கள் பாடசாலைகளில் பெற்றோர்களை இழந்த சிறுவர் இல்லங்களிலிருந்து பிள்ளைகள் படிக்கின்றார்கள். எனவே பிள்ளைகளின் பின்புலம் கவனிக்கப்பட வேண்டியதாக இருக்கின்றது. அந்தளவு கவனிக்கப்பட வேண்டிய மாணவர்களை நாங்கள் மீண்டும் அடித்தோ, தண்டனைகளைக் கொடுத்தோ எந்த ஒரு நல்ல தீர்வையும் பெறமுடியாது.

"அடிவாங்கிப் படித்ததால் தான் நான் இன்று நல்ல நிலையிலிருக்கின்றேன்" என்று ஆயிரத்தில் ஒருவரால் மாத்திரமே கூற முடியும். மீதி 999 பேரும் அடியால் பலவிதமான உள நெருக்கடிக்கு ஆளாகி பாதிக்கப்பட்டவர்களாகவே இருப்பார்கள். அதுதான் உண்மை நிலை. எங்கள் பாடசாலை சிறிய பாடசாலையாக இருந்தாலும், பாதிக்கப்பட்ட மாணவர்களை அதிகம் கொண்டது. கல்வியிலும் அவர்களை மிகவும் ஆழமாகக் கவனிக்க வேண்டும். ஒழுக்கத்திலும் அவர்களை நல்ல நிலைக்கு கொண்டுவர வேண்டும். அப்படியான நிலையிலும் நாங்கள் பிள்ளைகளுக்கு அடிப்பதுமில்லை. தண்டனை கொடுப்பதுமில்லை. அதனை நாங்கள் ஏற்றுக் கொள்ளவும் இல்லை.

சுற்று நிருபங்களின் பிரகாரம், அடிப்பது ஏற்றுக் கொள்ளப்படவும் இல்லை. சட்டரீதியாக தவறானதாகவே கருதப்படுகின்றது. எங்களுடைய பிள்ளைகளை மற்றவர்கள் அடிப்பதை விரும்பாத நாங்கள், எப்படி மற்றவர்களுடைய பிள்ளைகளைத் தண்டிக்க முடியும்?. பிள்ளைகள் தவறிழைத்தாலும் அவர்கள் அவை தவறு என்று அறியாமல் செய்கின்றனர். எல் லாம் அறிந்த நாங்கள் தண்டனை கொடுத்து நாங்களும் தவறிழைக்கின்றோம். மீத்திறன் கொண்ட மாணவர்கள் கற்கின்ற பாடசாலைகளில் கல்வியில் முன்னேற்றுவதற்கு ஆசிரியர்கள் கடினப்படத் தேவையில்லை. ஆனால் சற்று மெதுவாகவும், ஆறுதலாகவும் கற்கின்ற மாணவர்களுடன் அதிகம் பாடுபட வேண்டும். அது மட்டுமன்றி பொருளாதார, குடும்ப, சமூக ரீதியில் பின்தங்கி இருக்கின்ற மாணவர்களைக் கொண்ட எமது பாடசாலையில் ஆசிரியர்களின் அணுகுமுறைகளும் அன்பாகவும் மென்மை கலந்ததாகவும் இருக்க வேண்டும். சில பிள்ளைகளின் செயற்பாடுகள் முரட்டுத்தனமாக இருக்கும். அவர்களின் முரட்டுத் தன்மைக்கு வீட்டின் சூழ்நிலை காரணமாக இருக்கலாம். அந்தப் பிள்ளையுடன் முரட்டுத்தனமாக நாங்களும் செயற்பட்டோமேயானால் விளைவு பாதகமாகவே இருக்கும். பிள்ளை மீண்டும் பாடசாலைக்கு வருவதை விரும்பாததுடன் ஆசிரியர் மீதும் கோபத்துடன் இருக்கும்.

அவ்வாறான நிலைமைகளில், நாங்கள் மெதுவாகச் சொல்லித் திருத்தப் பார்க்கின்றோம். இல்லாவிட்டால் அவர்களின் தவறுகளைத் திருத்த கால அவகாசம் கொடுக்கின் றோம். அவர்களை சரியாகச் செயற்படுவதற்கான தூண்டுதல்களை வழங்க நினைக்கின்றோம். மாறாக அடித்தோம் என்றால் பிள்ளைக்கு தன்னுடைய தவறுக்கு அடி தண்டனையாகக் கிடைத்துவிட்டது தானே என்று மரத்துப் போன மனநிலை உருவாகும். எதிர்காலத்திலும் பிள்ளை இலகுவில வன்முறையான முடிவுகளை எடுக்க முயற்சிக்கும். அத்துடன் ஆசிரியருக்கும் தான் ஏன் அடித்தேன்? இதனால் என்ன பயன் என்ற நிலைதான் உருவாகும்.

எங்கள் மாணவர்களின் பெற்றோர்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலிருக்கின்றனர். பெற்றோர் சிலர் மது பாவனைக்கு அடிமையாகியிருக்கின்றனர். அவர்களால் பிள்ளைகளின் நிலையை புரிந்து கொள்ளவும் முடிவதில்லை. அதேநேரம் பாடசாலையிலும் வந்து சில வேளை பிள்ளைகளை தொநதரவு கொடுப்பார்கள். இவற்றைச் சமாளித்து கல்வி கற்கும் நிலையில் தான் மாணவர்கள் இருக்கின்றனர். அதனால் அவர்களோடு அவர்களாக, நாங்களும் இறங்கிச் சென்று அன்பாகவும், அரவணைப்புடனுமேயே அனைத்தையும் சொல்லிக் கொடுக்கின்றோம். சில ஆசிரியர்கள் தனிப்பட்ட ரீதியில் மாணவர்களுக்கு உதவிகள் செய்கின்றனர். போட்டி நிகழ்ச்சிகளின் போது கூட, அவர்கள் தங்களுடைய பிள்ளைகளின் பொருட்களைக் கொண்டு வந்து கொடுத்து, மாணவர்களைத் தங்களுடைய பிள்ளைகளைப் போல கவனிக்கின்றனர்.

இருந்தாலும் சில மாணவர்கள் கட்டுப்பாடுகளின்றி கட்டிளமைப் பருவத்துக்குரிய செயற்பாடுகளையும் செய்யத் தவறுவதில்லை. உண்மையில், அவர்களின் வீட்டுச் சூழலும் அதற்கொரு முக்கிய காரணமாக இருக்கின்றது.

சிறிய வீட்டில் அதிக பிள்ளைகளுடன், இளவயது பெற்றோர்கள் இருப்பதால், பிள்ளைகள் சில விடயங்களை இலகுவில் கற்றுக் கொண்டு விடுகின்றனர். இதனால், இளவயதுத் திருமணங்களை நோக்கிச் செல்ல முயற்சிப்பர். அவ்வாறான நிலையில், அந்த மாணவர்களுககு தண்டனை கொடுத்து அவமானப்படுத்துவதால் பிள்ளை மேலும் பாதிக்கப்படும். அவர்களைக் கவனமாகக் கையாள வேண்டியே உள்ளது.

வேறு சில மாணவர் இலகுவில் மனமுடைந்து போகும் நிலையிலிருப்பார்கள். அவர்களைத் தடிபிடித்து அடிஅடியென்று அடித்துவிட்டால் அவர்கள் தவறான முடிவுகளைச் சிலவேளை எடுத்து விடுவார்கள். ஆனாலும் சில விடயங்களில் நாங்கள் இறுக்கமாக நடந்து கொள்வதுமுண்டு. உதாரணமாக, எங்கள் அம்மா, "நீ இந்த முறை மாக்ஸ்குறைந்தால் அப்பாவிடம் சொல்லி அடிபோடச் சொல்வேன்" என்று எங்களை சற்று மிரட்டி வைத்திருப்பார்.

ஆனால் அப்பா உண்மையில் அடிப்பவராக இருக்கமாட்டார். அவ் வாறு நாங்களும் சிலவேளை வெருட்டிவைப்பதுண்டு. எந்த நிலையிலும் அடிக்கின்ற அளவுக்கு நாங்கள் செல்வதில்லை. அதுமட்டுமன்றி எங்கள் கல்வி நிர்வாகமும், அடிக்கின்ற விடயத்தில் மிகவும் அவதானமாகவே இருக்கின்றன.

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை துறை சார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு,
8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக் களும் ஏற்றுக்கொள்ளப்படும்:

Email: psych@sltnet.lk
Face book: Shanthiham

# தேசிய அரசு நிரந்தரமா?

அண்மையில் ஜெனீவா மற்றும் நியூயோர்க்கில் அமெரிக்காவால் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலைப்பாடுகள் தொடர்பாக கொழும்பின் உயர் அரசாங்க அதிகாரிகள் மட்டத்தில் பல்வேறுபட்ட கருத்துக்களும் எண்ணங்களும் நிலவுகின்றன.

ஐக்கிய நாடுகளுக்கான மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் அண்மையில் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர், அமெரிக்க மூத்த உதவி இராஜாங்கச் செயலர் நிசா பிஸ்வல் சிறிலங்காவுக்கு வருகை தந்திருந்தார். இவர் சிறிலங்காவில் தங்கியிருந்த நாட்களில், அமெரிக்கா தலைமையில் முன்வைக்கப்படும் தீர்மானமானது சிறிலங்காவுக்கு ஆதரவாகக் காணப்படும் என அறிவித்திருந்தார்.

அந்தவேளையில் நிசா பிஸ்வால் கொழும்பிற்குச் சார்பாக முன்வைத்த கருத்தானது பலராலும் பேசப்பட்டது. இதுவே சிறிலங்காவில் இடம்பெற்ற பல்வேறு மீறல்கள் தொடர்பில் இதன் மீது கலப்பு அனைத்துலக நீதிமன்றம் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் முன்வைக்கப்படுவதற்கு அழுத்தம் கொடுத்திருந்தது.

எதுஎவ்வாறெனினும், பேரவையின் அறிக்கை மற்றும் அமெரிக்காவின் தீர்மான வரைபு தொடர்பில் கொழும்பிலுள்ள சிறிலங்கா அரசாங்க உயர் மட்டம் திருப்தியடையவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

அமெரிக்காவானது பேரவையின் கூட்டத்தொடரில் சிறிலங்காவைத் தான் ஆதரிப்பேன் என வாக்குறுதி வழங்கிய அதேவேளையில் இதற்கு முரணாக சிறிலங்காவின் உயர் மட்ட அதிகாரி ஒருவர் உள்ளூர் ஊடகவியலாளர் ஒருவரிடம் தனது கருத்தொன்றைத் தெரிவித்திருந்தார்..

அதாவது மனித உரிமைகள் விடயத்தில் சிறிலங்காவிற்கு ஆதரவளிப்பேன் என அமெரிக்கா தெரிவித்துள்ள போதிலும், நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான நிதிசார் உதவிகளை அமெரிக்கா வழங்கவில்லை என குறித்த உயர் மட்ட அதிகாரி தெரிவித்திருந்தார். ‘சிறிலங்காவின் அரசாங்கமானது மாற்றமுற்ற பின்னர் அமெரிக்கா எமக்கு உதவும் என நாம் எதிர்பார்த்த போதிலும் இதுவரை அமெரிக்காவிடமிருந்து எந்தவொரு நேர்மறையான ஆதரவுகளையும் நாம் பெறவில்லை’ என அவ் அதிகாரி சுட்டிக்காட்டியிருந்தார்.

இக்கருத்தானது அமெரிக்காவை விட சிறிலங்காவிற்கு சீனா ஆதரவளிப்பதைச் சுட்டிக்காட்டுவதாக அமைந்துள்ளது.

அதாவது அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் சிறிலங்காவிற்கு ஆதரவளிப்பதில் பின்நிற்கும் அதே வேளையில், இவை சிறிலங்கா மீதான மனித உரிமை விவகாரங்கள் தொடர்பாக பேசுவதில் மட்டுமே குறியாக உள்ளன என்பதே சிறிலங்காவின் உயர் மட்டத்தின் மத்தியில் நிலவும் கருத்து எனக் கூறப்படுகிறது.

இவ்வாறானதொரு பின்னணியில், சிறிலங்காவின் வரவேற்பை சீனாவே பெற்றுக்கொள்ளும். இந்தச் சூழலை சீனா தனக்குச் சார்பாகப் பயன்படுத்திக் கொண்டால், மகிந்தவின் கோட்பாடுகள் சரியானதே என சிறிலங்கா வாழ் மக்கள் தெரிவிப்பார்கள்.

2001ல் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கமானது அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக செயற்பட்டது. இதன்மூலமே விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டன.

அத்துடன் வடக்கு கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகத்தை வழங்கத் திட்டமிடப்பட்டதுடன், சிறிலங்காவின் சமாதான நகர்வுகளில் மேற்குலகம் சார்பாக இதன் அனுசரணையாளராக நோர்வே செயற்பட்டது.

அந்த நேரம் மிதவாதக் கோட்பாட்டைப் பின்பற்றிய சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஜேவிபி போன்றன இந்தச் சூழலைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டில் மேற்குலகிற்கு எதிராக அழுத்தத்தை வழங்கின. இதுவே ரணிலினுடைய அரசாங்கம் தனது ஆதரவை இழக்கக் காரணமாகியது.

இறுதியாக, அனைத்துலக நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக நாட்டில் சமாதானத்தைக் கட்டியெழுப்பு முற்பட்ட ரணிலினுடைய அரசாங்கம் தோல்வியுற்றது. இதுவே மகிந்த ஆதரவுக் குழுக்கள் அரசாங்கத்தைக் கைப்பற்றுவதற்கு வாய்ப்பளித்தது.

இவ்வாறானதொரு சூழல் தற்போது மீண்டும் எழுவதற்கான சமிக்கைகள் தோன்றியுள்ளன. மனித உரிமைகள் பேரவையால் வெளியிடப்பட்ட அறிக்கையானது மைத்திரி-ரணில் அரசாங்கத்தைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

மகிந்தவின் ஆதரவாளர்கள் கடந்த ஆகஸ்ட்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தோல்வியுற்ற பின்னர் தற்போது பேரவையின் அறிக்கையுடன் மீண்டும் தமது ஆதரவை வலுப்படுத்துவதற்கான பரப்புரையை மேற்கொள்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையிலுள்ள வரைபுகளைப் பின்பற்றி ரணில்-மைத்திரி அரசாங்கம் செயற்பட்டால், 2001ல் ரணில் அரசாங்கத்திற்கு நடந்த கதியே ஏற்படும். தற்போது சிறிலங்காவின் பொருளாதாரம் அபிவிருத்தியை எட்டவில்லை. பொருளாதார நெருக்கடிகளின் மத்தியில், பேரவையின் அறிக்கையை சிறிலங்காவின் தற்போதைய அரசாங்கம் பின்பற்றிச் செயற்பட்டால் எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதற்குச் சமமாகிவிடும்.

அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரல் என்பது தெளிவற்றதாக உள்ளது. போர்க் குற்றங்களைக் காரணங்காட்டி குறித்த நாடுகளைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதே அமெரிக்காவின் வழமை என ஆபிரிக்க நாடுகள் சுட்டிக்காட்டுகின்றன. அமெரிக்காவின் இத்தகைய மனப்பாங்கால் இந்த நாடுகள் பல்வேறு சிக்கல்களைச் சந்திக்கின்றன.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையுடனான சிறிலங்காவின் தொடர்பாடல் முறைமையின் வடிவம் தொடர்பில் ஐ.தே.க மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றுக்கிடையில் பல்வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன.

மனித உரிமைகள் பேரவைக்கு ஐ.தே.க விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்வதாகவும் இதனால் சிறிலங்கா அதிபரும் அவரது அரசாங்கமும் தர்மசங்கட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் மைத்திரிக்கு ஆதரவான குழுவினர் கருதுகின்றனர்.

அமெரிக்காவைப் போல ஐக்கிய தேசியக் கட்சியும் உலகத் தமிழர் பேரவை போன்ற புலம்பெயர் தமிழர் அமைப்புக்களைப் பாதுகாக்க முயற்சிப்பதாகவும் நம்பப்படுகிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் இத்தகைய நிலையானது மைத்திரி அரசாங்கத்தை இக்கட்டான நிலைக்குத் தள்ளியள்ளதாகவும் மைத்திரி ஆதரவு சக்திகள் கருதுகின்றன.

இத்தகைய நிலைமைகள், தற்போதைய அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மைமீது எதிர்காலத்தில் தாக்கம் செலுத்தலாம்.

ஆயினும், அரசாங்கங்கள் மாற்றியமைக்கப்படுதல் என்பது தனியே மக்களின் வாக்களிக்கும் பலத்தில் தங்கியிருக்கவில்லை. அது சர்வதேச வல்லமைமிக்க அரசாங்கங்களின் நலன் சார் விடயங்களிலும் தங்கியிருக்கிறது என்பது நாம் புரிந்துகொள்ளக் கூடியதே.

குறிப்பாக, இன்றுள்ள தேசிய அசாங்கம் அமைவதற்குக் காரணம் கூட, சர்வதேச-குறிப்பாக அமெரிக்க நலன் சார்ந்து, அமெரிக்காவின் ராஜதந்திரத்திர காய்நகர்த்தல்களின் விளைவினால் பெறப்பட்டதுதான்.

முன்னை நாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, சீன சார்புக் கொள்கையைக் கைவிட்டிருக்க முடிந்திருந்தால் நிலைமை இப்பொழுதும் மாறியிருக்க வாய்ப்பில்லை. மகிந்த ராஜபக்சவின் குடும்ப ஆட்சியே இன்றும் கோலோச்சியிருந்திருக்கும்.

ஏனெனில் அமெரிக்காவின் காய்நகர்த்தல்கள் மனித உரிமையைக் காப்பாற்றும் நோக்கத்தை முதன்மையாகக் கொண்டதோ, பாதிக்கப்பட்டுள்ள தமிழர்தரப்புக்கு உதவுவதோ அல்ல. அப்படி ஒருநோக்கம் இருந்திருந்தால், தமிழ்மக்கள் மீது தொடுக்கப்பட்ட கொடூரமான யுத்தம் அன்றே தடுக்கப்பட்டு தமிழ் மக்கள் காப்பாற்றப்பட்டிருக்க வேண்டும்.

அமெரிக்காவின் விருப்பு வெறுப்பை தவிர்த்து ஐ.நா. செயற்பட முடிந்ததாக வரலாறும் இல்லை. அவ்வாறு எதிர்பார்ப்பதைப்போன்ற வேறு மடமையும் இல்லை.

அவனன்றி அணுவும் அசையாது என்பதைப்போல அமெரிக்கா அன்றி அரசியல் தலைவர்கள், அரசியல் அமைப்புகள் மாறப்போவதில்லை அயல் நாடுகளில், என்பதுதான் உண்மை.

உலகின் தேசிய விடுதலை இயக்கங்களின் வீழ்ச்சிக்கும் அதிபயங்கரவாத அமைப்புகளின் தோற்றத்துக்கும் மூலகர்த்தவான அமெரிக்க அரசியல் மார்க்கமானது என்று அழிகிறதோ, அன்றுதான் உலக மக்களுக்கு விமோசனம்.

## அவனன்றி அணுவும் அசையா!





# வெளித்தெரியா பிம்பம்

"அம்மா கோயிலடிக்குப் போட்டு வாறன்" கூறியபடியே வீட்டுக்கு வெளியே வந்த சுரேன், தாழ்வாரத்தில் குனிந்து, வாசலில் இருந்த செருப்புக்களை அணிந்துகொண்டு நிமிர்ந்து... முற்றத்தில் நின்ற மரத்தில் கொளுவியிருந்த கண்ணாடியில் முகத்தைப் பார்த்துவிட்டு, வீதிக்கு வருகிறான்.

"எந்தநேரமும் கோயிலடி... கோயிலடி... கொஞ்சநேரமெண்டாலும் வீட்டில இருந்து படிப்பம் எண்டில்ல... கோயிலடிக்குப் போறாராம். ஓ.எல்! சோதினையும் வருகுது...ம்" தாயின் புறுபுறுப்புக் காதில் விழுந்தபோதும் அதைப் பொருட்படுத்தாது சுரேன் போய்க்கொண்டிருக்கிறான்.

படலையைத்திறந்து ஒழுங்கையில் இறங்கி முடக்கு ஒன்றில் திரும்பிப் பார்தால் அந்தக்கோயிலடி தெரியும். சடைத்துவளர்ந்த ஆலமரத்தின் கீழே பிள்ளையார் அமர்ந்திருந்தார்.

ஊரில் உள்ள அனைவரதும் குறைகளையும் அவர் அறிந்திருந்தார். வீதியில் வருவோர், போவோரும், கோயிலைச் சூழ இருப்போரும் தங்கள் தங்கள் கவலைகளையும் குறைகளையும் அவருக்குச் சொல்லி, தீர்வுக்காக மன்றாடிவிட்டுச் செல்வர்.

கோயிலடியில் சிறுவர்கள் சிலர், *போளை* அடித்து விளையாடிக்கொண்டிருந்தனர். வைகாசிக் காற்று ஆரம்பித்து சில நாட்களே ஆகியிருந்தன. மெல்லியதாய் காற்று, மேனி தடவ சுரேனும் கோயிலடியை அண்மித்து, விரிந்துபரந்த ஆலமரத்தின் வேரிலே அமர்ந்து, சிறுவர்கள் போளை அடிப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தான். ஐஸ்பழம் விற்கும் வாகனத்தின் பாடல் ஓசை காற்றில் தூரத்தே இருந்து, வந்து... மீண்டும் தூரத்தே சென்று அழிந்துபோனது. இயற்கையின் வனப்பு சுரேனுக்கு மிகநன்றாகவே பிடித்திருந்தது.

திரண்டு பெருத்து நீண்டு வளர்ந்திருந்த ஆலமரத்தின் கிளைகள், குருவிகளின் கீச்...கீச... ஓசை அணில்கள் ஒன்றை ஒன்று துரத்திச் செல்வதும், மரத்தின் கிளைகளில் மேலுங் கீழுமாக ஓடிமறைந்து மீளவருதலும்; ...தூரத்தே... ஒன்றை ஒன்று துரத்திச் செல்லும் மேகக்கூட்டங்கள்; அந்த மேகக்கூட்டங்கள், காற்றின் நெருடலில் உருமாறும் விதங்கள்; இவற்றின் அழகினை இரசித்தவண்ணம் இருந்த சுரேனின் கண்களில் சிதம்பரியப்பு வருவது தெரிந்தது. தலையிலே துவாயை மடித்துக்கட்டி, தோளிலே கோடரி, சைக்கிள் கான்டிலில் கொளுவியிருந்த பையிலே கத்தி; *கரியரில்* பெரிய வடக்கயிறு, பனைமரங்களைப் பிளக்கும் வல்லிட்டுக்குற்றி(அடிகுற்றி)... இவற்றைக் கட்டியபடி, சைக்கிளை உருட்டிக் கொண்டு வருகிறார் சிதம்பரியப்பு. சுரேனின் அயல்வீடுதான் சிதம்பரியப்புவின் வீடு. அவரைப் பார்க்கும் போதெல்லாம் சுரேனுக்கு முகத்தில் வெறுப்பு தோன்றி கோபமாக வெடிக்கும். ஆனாலும், ஒருமுறையேனும் அந்த வெறுப்பை, கோபத்தை நேரடியாகக்காட்டிக்கொள்ளவில்லை சுரேன்.

சிதம்பரியப்பு அவரது வாழ்நாட்களில் எத்தனை எத்தனை மரங்களை வெட்டி வீழ்த்தியிருப்பார் அதை எவ்வளவு வீரப்பிரதாபமாகச் சொல்லிச் சொல்லி மகிழ்ந்திருப்பினம் அவரும் அவரின் விசிறிகளும்.

மரங்கள் இயற்கையின் செல்வம்; அவற்றை வெட்டுவதென்பதை சுரேனால் ஜீரணிக்கமுடிவதில்லை. பச்சை மரங்கள் தரும் அந்தப் பசுங்காற்று உடலுக்கு எவ்வளவு இதமாக இருக்கும். பிராணனை வழங்கும் அருமருந்துதானே அது. அதை வழங்கும் மரங்களை, பெருங்கிளைகளை வெட்டி வீழ்த்துவதென்பது... சே...! சிதம்பரியப்பு, சைக்கிளை மெல்லி மெல்ல உருட்டிக் கொண்டு ஆலமர நிழலுக்குள் வந்ததும் சற்று இளைப்பாறினார். சைக்கிளை வேலியிற் சாத்திவிட்டு, தோளில் கிடந்த கோடரியை இறக்கி வைத்து, பின்பு வீதியோரத்தில் கிடந்த கல்லொன்றில் அமர்ந்தார். உடம்பெல்லாம் வியர்த் துக்கொட்டியது அவருக்கு. தலையில் கட்டியிருந்த துவாயை அவிழ்த்து, வியர்வையைத் துடைத்துவிட்டு, இடுப்பில் சொருகியிருந்த வெற்றிலைச் சுரையை எடுத்து ஒருவாய் வெற்றிலையைப்போட்டு வாயைக் குதப்பிக் கொண்டார்.

இயற்கையை இரசிப்பதுபோல, சிறுவர்களின் போளையடிப்பைப் பார்ப்பதுபோல, சிதம்பரியப்புவின் செயற்பாடுகளையும் ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டான் சுரேன். தனக்குத்தானே எத்தனை சமாதானம் சொல்லிக்கொண்டாலும் சிதம்பரியப்பு மேலுள்ள வெறுப்பும் கோபமும் அவனுக்குத் தீரவேயில்லை. சற்று நேரத்தில் அவர், போய்விட்டார். போளைவிளையாடிய பிள்ளைகள் போனதும் சுரேனும வீட்டிற்குப் போய்விட்டான்.

"சுரேன் சாப்பிட வா!" காலையில் எழுந்து பாடசாலைக்குத் தயாராகிக் கொண்டிருந்தான் சுரேன். வானொலியின் பாட்டொலிக்கு நடுவே அவனின் காதுகளை எட்டியது அம்மாவின் குரல். கை கால்களைக் கழுவிக்கொண்டு சாப்பிடச் செல்லவதற்காக கிணற்றடிப்பக்கமாக வந்தவனின் காதில், சிதம்பரியப்பு கோடரியை மரக்குற்றியொன்றில் தீட்டும் ஓசை கேட்கிறது.

....ம்... சிதம்பரிக்கிழவன் கோடாலியைத் தீட்டுறார். இண்டைக்கும் எங்கையோ மரங்களை வெட்டி விழுத்துப் போறார் போல...ம்...

தலையைக் குனிந்து வாய்க்குள் விட்டிருந்த நீரை கொப்பளித்தபடியே குசினி வாசலில் வந்து நின்றவனை தாயார் பார்த்துவிட்டு, "என்ன சுரேன் யோசிக்கிறாய் வாவென் சாப்பிட..."

"எனக்குச் சாப்பாடு வேணாம் பசிக்கேல்ல..." என்று கூறிவிட்டு புத்தகங்களை எடுத்துக்கொண்டு பாடசாலைக்குப் புறப்பட்டான் சுரேன். அவனது மெல்லிய உணர்வுகளில் ஏற்பட்ட காயங்களினால் சுரேனுக்குப் பசி எங்கோ பதுங்கிக் கொண்டது.

சுரேன் பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னதாக அங்கு சென்றுவிட்டால்,

சிறுகதை



உடனே அவன் செல்வது பாடசாலையில் மரங்கள் நாட்டப்பட்டிருக்கும் தோட்டத்துக்குத்தான். அங்கே அழகாக செழித்து வளர்ந்திருக்கும் பூமரங்களையும் மற்றும் இள மரங்களையும் பார்த்துப் பார்த்து இரசித்தபடி இருப்பான். வாடிய மரங்களுக்கு நீர் ஊற்றுவான். பூக்களைப் பறிக்காமலே முகர்ந்து பார்ப்பான். அவற்றின் செழிப்பைப் பார்த்துத் துடிக்கொடுப்பான்.

"எட! சுரேன் எங்கடா...?" என்ற சக மாணவரின் கேள்விக்கு

"அவன் இங்க.. பூந்தோட்டத்துக்க தான் நிற்பான் போய்ப்பார்" என்ற பதிலே இன்னொரு மாணவனால் கிடைக்கப்பெறும். இயற்கையைப் பெருமளவு இரசிக்கும் நேசிக்கும் சுரேனின் மனப்பாங்கு மற்றைய மாணவர்களைவிட அவனை வேறுபடுத்திக் காட்டியது. இவ் இரசனைக்கும் நேசத்திற்கும் எதிரான ஒரு ஆளாகவே சிதம்பரியப்பு சுரேனுக்குத் தென்படுகிறார். அவரது கைகளில் இருக்கும் கோடரி, கத்தி, மற்றும் மரங்களை இழுத்து விழுத்தப் பயன்படும் அந்தப் பெரியகயிறு, எந்த மரங்களையும் பிளந்து தள்ளும ஆப்புகளும் வல்லிட்டுக்குற்றியும் இவற்றுடன் அவரது முகத்தைமூடிக்கொண்டிருக்கும் பெரிய முறுக்கு மீசை, வெற்றிலை போட்டுப் போட்டுக் காவிபடிந்த பெரிய பற்களைக் கொண்ட வாய், உயர்ந்த கரடுமுரடான உடற்கட்டு, இவையெல்லாம் சிதம்பரியப்புவின் மேல் வெறுப்பையே தோற்றுவித்தன.

இரவு அமைதியாக இருந்தது. நேரம் இரண்டுமணியைத் தாண்டியிருந்தது. சுரேனுக்கு நித்திரை வர மறுத்தது. பகல் நடந்த அந்த சம்பாசணைகள் அவன் மனதில் மீள மீள வந்துபோயின.

"...சா... என்ன கெட்டிகாரனப்பா. சொன்னால் நம்பமாட்டியள்... தனியத்தான். ஒரு உதவியாள் கூட இல்லை. என்னெண்டு இந்தாள், இதைச் செய்து முடிக்கப்போகுதெண்டு, எல்லாரும் விறைச்சுப்போய் பார்த்துக்கொண்டு நிண்டம். அந்தாள், வந்துது...."

நவம் அண்ணர் சிதம்பரியப்புவின் திறனைச் சொல்லிக்கொண்டிருந்தார். சிவா அண்ணர் வாய்பிளந்தபடி கேட்டுக் கொண்டிருந்தார்.

நவம் அண்ணர், தொடர்ந்தார்...

அங்கையோரிடத்தில எல்லை வேலிக்கு மதில்கட்டவேணும்... பக்கத்து வீட்டுக்காரர் இரண்டுபேரும் சண்டை. அயலில் உள்ளவர்கள், சமாதானப் படுத்தி, ஒருமாதிரி மதில் கட்ட இரண்டு பகுதியும் சம்மதிச்சிட்டினம். வேலிக்கரையில ஒரு பெரிய உயரிப் பனைமரம். அத்திவாரம் வெட்ட அதைத் தறிச்சு விழுத்தவேணும்..."

நவமண்ணரின் வாயை ஆ வென்றபடி பார்த்துக்கொண்டு கதையை இரசித்தபடி சிவமண்ணர்.

"இஞ்சாலை *கக்கூஸ்* கிடங்கு மேலால கரண்ட்வயர்; பக்கத்த கோழிக் கோடு; ஒண்டிலையும் முட்டக்கூடாது. பிறகு தெரியம்தானே... ஏதும் நடந்தா நட்ட ஈடுதரவேணும்... "சமாதானம் பேசப்போனவர்களுக்கு பக்கத்து வீட்டுக் காரர் சொல்லிவைச்ச முறைப்பாடு.

இவற்றையெல்லாம் கேட்ட சிதம்பரியப்பு , கொண்டுக்குள்ள சிரித்தபடி தன்ரை வேலையைத் தொடங்கினார்.

ஏறிச்சு மனுசன் ரெண்டு கிட்டியளைக் கொண்டுபோய்க் கட்டினார். ஓலையளை வெட்டி, வெட்டி கீழே போட்டார். அதுகளெல்லாம் பனை நிண்ட வளவுக்குள்ளேயே விழுந்திச்சு. கட்டி விட்ட கிட்டியளில நிண்டபடியே மரத்தை இரண்டடித்துண்டுகளாக வெட்டி, வெட்டி மனுசன் கோடடிச்சமாதிரி சொன்ன இடத்தில தள்ளித்தள்ளி விழுத்திப்போட்டு இறங்கிப் போச்சுது. உப்பிடி எத்தினை வேலையளைச் செய்த மனுசனப்பா சிதம்பரியப்பு. ஒருக்கா சொன்ன நம்பமாட்டியள். இருபத்தைஞ்சு மரங்கள். தென்னை, பனை, பலா எண்டு ஒரு நாளில எல்லாம் கிளியர். வலுகெட்டிக் காரன்...

அவர்களின் சம்பாஷணையிலிருந்த சிதம்பரியப்பு ஒரு கதாநாயகனாகவே காணப்பட்டார். ஆனால், சுரேனுக்கு சிதம்பரியப்பு மேல் வெறுப்புத் தான் தோன்றியது. அவனுக்கு அவர், ஒரு வில்லனாகவே தெரிந்தார்.

நீண்ட நேரமாக உறக்கம் இல்லாது இருந்த சுரேனை உறக்கம் தழுவிக் கொண்டது.

மாரிகாலந்தொடங்கி..., மழைமண் மகளைக் குளிர்வித்துக் கொண்டிருந்தது. அடைமழைபெய்ததால், குளங்கள் எல்லாம் நிரம்பி வழிந்தன. வீதிகள் எங்கும் வெள்ளம். மண்வீட்டு நிலங்கள் சுவர்கள் ஊறிப்போய்...மக்கள் வாழ்க்கை பெரும் சிரமமாகவே காணப்பட்டது.

பெருமளவு மரங்கள் மகிழ்சியில் திளைத்திருந்தன. ஈர ஓவியம்போல் பூமி பசுமையாக அழகாக இருந்தது.

பனைகள் எல்லாம் பழங்களை உதிர்த்து, விதைகளைத் தூவிக் கொண்டிருந்தன. மாடுகள் சூப்பிபதும் வண்டுகள் ஊதியதுமாக எங்கும் பரந்து காணப்பட்டன அவைகள்.

ஓ.எல் பரீட்சைக்காக இரவு பகலாக படித்துக்கொண்டிருந்தான் சுரேன்.

வார இறுதிநாள் ஒன்றில், சுரேன் வழமைபோல்

"அம்மா, கோயிலடிப்பக்கம் ஒருக்காப் போட்டுவாறன்..." வீதிக்குச் செல்கிறான். வீதியெங்கும் வெள்ளம் ஓடிய தடங்கள் அழகாக இருந்தன. சம்புப் புற்கள் வீதியின் கரையெங்கும் உயர்ந்து வளர்ந்திருந்தன. சயிக்கிளின் சத்தங்கேட்டு முயல் ஒன்று வீதி யைக் குறுக்கறுத்து ஓடியது. அதைப் பார்த்து இரசித்துக்கொண்டே சென்றான் சுரேன்.

கோயிலடியிலும் மரங்களிலிருந்து சிறு சிறு சுள்ளிகள் விழுந்து விடந்தன. ஆலமரத்தில் குருவிகளின் கலகலப்பு... கோவில் மண்டபத்தில், வீதியைப் பார்த்தவாறே அமர்ந்திருந்தான் சுரேன். முற்பகல் வேளையாதலால் சனங்களின் போக்குவரத்தும் காணப்பட்டது. சிதம்பரியப்பு, தன் சைக்கிளில் இரண்டு மூடைகளைக் கட்டியபடி சைக்கிளை உருட்டுகிறார்.

... மூடைக்குள் என்னவாக இருக்கும்..? எங்க போறார்..? இண்டைக்கு ஆளுக்கு மரந்தறிக்கிற வேலை இல்லையோ..? சிந்தித்தபடி, அவரைப் பார்த்தபடியே நின்றான் சுரேன்.

கிட்ட வந்த சிதம்பரியப்பு மரநிழலில் ஆறுகிறார். மூடைகள் இரண்டும் ஒத்துழைக்காததால், அவற்றை சீர் செய்வதில் அவர் ஈடுபட்டும், அவற்றின் பளுவால் அது முடியாது போகிறது அவரால். நிமிர்ந்து பார்க்கிறார் சிதம்பரியப்பு. சுரேன் கோயில்மண்டபத்தில் இருப்பது தெரிகிறது.

"சுரேன் இஞ்ச ஒருக்கா வா அப்பு; இந்த மூடையள் சரியான பாரமாய்க் கிடக்கு. ஒண்டை உன்ரை சைக்கிளில கட்டு; உங்க கிட்டடியில ஒருக்காப் போட்டு வருவம்..."

சிதம்பரியப்புவின் அன்பான அழைப்பில் மயங்கிப்போனான் சுரேன். கிட்டே சென்று பார்த்தபோது மூடைக்குள் பனம் விதைகள்... ம்...எங்கேயோ பாத்திபோடப்போறார்போலகிடக்கு. அப்பத்தான் நல்லாக் கிழங்கு தின்னலாம் என்ற நினைப்புப் போல கிழவனுக்கு...

"மனதுக்குள் சிறுசிறுத்தபடி நின்ற சுரேனைப் பார்த்து, என்னப்பு யோசிக்கிறாய்...?"

"ஒன்டுமில்லையப்பு, கட்டக் கயிறு இல்லை அதுதான்..." ஒருவாறு சமாளித்துக்கொண்டான் சுரேன்.

"ஒண்டுக்கும் யோசியாதே. இஞ்ச என்ர பையிக்க கயிற கிடக்கு. இந்தச் சின்ன மூட்டையை நீ, கட்டு...நான் பெரிய மூட்டையைக் கட்டுறன். டக் எண்டு வந்திடலாம் என்ன..."

ஒன்றும் பேசாது அந்தச் சின்ன மூடையைத் தன் சைக்கிளில் கட்டியபடி சிதம்பரியப்புவுக்குப் பின்னால் போய்க் கொண்டிருந்தான் சுரேன். பெரிய வீதியால் ஓடி, ஒழுங்கைக்குள் இறங்கி... இப்போ சைக்கிள் ஓடமுடியாத இடம். கொப்பு நரிப் பாதையால் உருட்டி.... சுரேனைத் திரும்பிப்பார்த்தபடியே தன் முகத்தால், சமாதானம் சொல்கிறார் சிதம்பரியப்பு. முன்னே...அவர், பின்னே.. சுரேன். மதிய வெயில்... வியர்த்துக் கொட்டியது. மணல்வெளிக்குள் சைக்கிளைப் பாரத்துடன் உருட்ட முடியவில்லை.

இந்தப் பனங்கொட்டையளை எங்க கொண்டுபோறார்...? சுரேனின் மனதில் கேள்விகள் எழுந்தன.

அவன் கண்ணில் பட்டது...நீண்ட, பரந்த வடலிகளின் தோட்டம். இப்படி ஓர் இடமா!

சுரேனுக்கு ஆச்சரியமாக இருந்தது. சிதம்பரியப்புவைப் பார்ப்பதும், வடலித்தோட்டத்தைப் பார்ப்பதுமாய் அவன்.

சைக்கிளைப் பட்ட மரம் ஒன்றில் சாத்திவிட்டு, ஆச்சரியத்தில் உறைந்து நின்ற சுரேனைப் பார்க்கிறார் அவர். "என்ன சுரேன் பார்க்கிறாய்..?"

அவன் ஒன்றும் பேசவில்லை. சற்று நேரம் மௌனம் நிலவியது. தன்தோளில் கிடந்த துவாயை எடுத்து முகத்தைத் துடைத்தபடி..

"சுரேன், இவ்வளவு வடலியளும் நான்தான் நட்டது. இது என்ர காணியில்லை. வரியம்வரியம் பனங் கொட்டையளைக் கொண்டுவந்து நடுவன்...

நான் ஒருவரியத்தில எத்தினை மரங்களைத் தறிச்சு விழுத்துறன். அது எனக்குச் சரியான கவலையப்பு. ஆனா என்ன செய்யிறது... வீடு கட்ட, தோட்டம்செய்ய எண்டு இடங்கள் வேணும். அதுக்காக மரங்களைத் தறிக்கிறன். அப்போ எல்லாம் எனக்குக் கவலைதான். பச்சை மரங்கள், எவ்வளவு பியோசனம் தாற மரங்கள். இதுகளையெல்லாம் தறிக்க மனதுக்குள்ள ஒரு சுமைதான். அது என்ர தொழிலப்பு. அதை ஈடுசெய்யத்தான் வரியம்வரியம் இந்தப் பனங்கொட்டையளைச் சேகரிச்சு இஞ்ச கொண்டுவந்து நடுகிறனப்பு. ஏதோ இந்த மண்ணைக் காக்கிற ஒரு மன நிம்மதி தம்பி எனக்கு.

நல்ல பிள்ளை, நீபோவிட்டு வாய்யா... நான் இனி மெல்ல, மெல்ல கிடங்குகளை வெட்டி இந்தப் பனங்கொட்டையளை நடுவன்..." என்றவர், அந்தப் பனம் விதைகளை மண்ணிலே கொட்டுகிறார்.

சுரேன் நெகிழ்ந்துபோகிறான்... அவரது செய்கை அவனை அவ்வாறு உருகச் செய்தது. ஒருகொடியவனாக, கோர உருவத்தை உடைய கொடும்வில்லனாக அவன் மனதில் இருந்து அறுத்துக்கொண்டிருந்த அவர்... இப்பொழுது அவனுக்கு ஒரு மனிதனாக, புனிதனாக... ஒரு நெறியாளனாக... பண்பாளனாக... தெரிந்தார்...

அவனது மனோவுலகில் தற்பொழுது, அவரைவிட மிக உயர்ந்த இடத்தில் வேறுயாருமில்லை...

**ந. இராமநாதன்**

# மலையகத்தில் அபிவிருத்தி ...!
# ஏமாற்றங்களும் போராட்டங்களும்

நல்லாட்சிக்கான தேசிய அரசின் தலைவர்களும் அதன் பங்காளிகளான மலையக பிரதிநிதிகளும் வானளாவிய வாக்குறுதிகளை வாரி விதைத்துள்ளனர். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும், 2010 ஆண்டு தேர்தலின் போதும் அப்போதைய ஜனாதிபதியும், ஜனாதிபதி வேட்பாளரும் 50000 வீடுகளை தோட்ட பகுதியில் கட்டப்போவதாக பிரச்சாரம் செய்தார்கள். தேர்தலின் பின்னர் உடனிருந்த தலைவர்களும், பிரதிநிதிகளும் கூடவே மௌனித்து நின்றார்கள். 3000 கிலோ மீற்றர் கொங்கிறீட் வீதியும், 3179 ஆசிரியர் பதவியும் பெற்றுக்கொள்வதற்காக, பத்தாண்டுகள் மலையக மக்களின் அரசியல், சிவில், உரிமைகள் தாரைவார்க்கப்பட்டது. .

இன்று நல்லாட்சிக்கான அரசை தாபித்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களதும் பிரதம மந்திரி ரணில் விக்ரமசிங்கவினதும் 100 நாள் வேலைத்திட்டத்தில் மலையக தமிழர்கள், தோட்டத் தொழிலாளர்கள், மலையக இளைஞர்கள், தோட்ட, நகர் புறங்கள், பாடசாலைகள், கல்வியகங்கள் குறிப்பிடத்தக்க எதனையும் சாதிக்கவில்லை என்பது கவலைக்குரிய உண்மையாகும்.

மீரியாபெத்த பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நான்கு வீடுகளே பூர்த்தியாகும் நிலையில் இருக்கின்றதென்பதை மாற்றுக்கொள்கைக்கான நிலையத்தின் சமீபத்திய ஆய்வு நிரூபித்துள்ளது. உலகை உலுக்கிய, உலகின் கண்களை திறந்த, மலையக தமிழரின் அவல வாழ்வை வெளிப்படச் செய்த மீரியாபெத்த பேரனர்த்தத்தில் மண்ணாகிப் போன உறவுகளுக்கு நினைவிடம், நட்டவீடு, தப்பியோருக்கு புதிய வீடமைப்பு திட்டம் என்ற கோதாவில் முன்னெடுக்கப்பட்ட முன்னாள், இன்னாள் ஆட்சியாளர்களின் சகல பிரச்சாரங்களும் பொய்யாய் பழங்கதையாய் போயிருக்கிறது. விரக்கதியால் தொழிலாளர்கள் தற்கொலை செய்துள்ளார்கள். அனர்த்தம் ஏற்பட்டு ஓராண்டு பூர்த்தியாக உள்ள நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் இவ்வளர்த்தம் ஒரு திட்டமிட்ட படுகொலை என பகிரங்கமாக குரல் கொடுக்கத் தொடங்கி இருக்கின்றார்கள்.

ஆகஸ்ட் 15ம் திகதி 400 புதிய வீடுகளை திறக்கப் போவதாகவும், இந்திய பிரதமர் மீரியாபெத்த வீட்டுத் திட்டத்தை திறந்துவைப்பார் எனவும், ஜனாதிபதியும் பிரதமரும் திறப்புவிழா நடத்துவார்கள் எனவும், 7 பேச் காணியும், வீட்டுரிமைப் பத்திரமும் கையளிக்கப்படும் எனவும், 20 பாடசாலைகளில் உயர்தர விஞ்ஞான பிரிவு தொடங்கப்படும் எனவும் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட மோசடிப் பிரச்சாரங்கள் மலையக தமிழரின் வாக்குகளை கொள்ளையடிப்பதற்கான தந்திரோபாயமேயன்றி வேறல்ல என்பது அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

மீரியாபெத்தை மக்களுக்கு 75 வீடுகளைக் கட்டி பூர்த்திசெய்ய முடியாதபோது அரசும், மக்கள் பிரதிநிதிகளும் ஏன் 400 வீடுகள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்கள் என மக்கள் சிந்திக்கத் தவறியிருக்கிறார்கள். புளுகுமூட்டைகளை அவிழ்த்து விட்டு வாக்குகளை கொள்ளையடித்த தோடல்லாமல், வழங்கப்பட்ட வாக்குறுதிகளையே காப்பாற்ற முடியாத நிலையில் ஆகஸ்ட் பொதுத்தேர்தலில் மலையக தோட்டத் தொழிலாளர்களின் நாட் சம்பளத்திற்கான முனைவுகளை அரசுடனிணைந்து தடுத்தவர்கள் யாரென மக்கள் அறிவார்கள். மக்கள் விரோத கும்பல்களுக்கும், போதை பொருள் வியாபாரிகளுக்கும், புலம்பெயர் தமிழர்களில் நினைவிலும் நிதியிலும் அல்லலாடும் கொள்கையற்ற சக்திகளுக்கு மக்கள் வாக்களிக்கச் செய்யப்பட்டுள்ளார்கள்.

மகிந்த இராஜபக்சவை தேர்தல் களத்தில் (ஆகஸ்ட்) பேசு பொருளாக்கி, மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினையையும், இனத்துவ நெருக்கடியையும், சனநாயக, குடியியல் உரிமைகளையும் குழிதோண்டி புதைத்தார்கள்.

மலையக நகரங்களிலும் தோட்டங்களிலும் சிறுவர் பாலியல் வல்லுறவுகளும், போதை பொருள் வியாபாரமும் கொடிகட்டிப் பறக்கிறது. சில பருமட்டான மதிப்பீடுகளின் படி நுவரெலியா மாவட்டத்தில் 500க்கு மேற்பட்ட தோட்டப்பிரிவுகளில் மட்டும் 3000 சட்டவிரோத மது விற்பனை நிலையங்கள் காணப்படுகின்றன. அத்தனை சட்டவிரோத மதுபான விற்பனையாளர்களும், போதைப் பொருள் வியாபாரிகளும் மலையகத்தின் பிரதான அரசியல் பிரமுகர்களின் ஆதரவு பெற்றவர்கள், தொழிற்சங்கங்களின் தாதாக்கள், பொலிஸாருக்கும் மற்றும் கலால் அதிகாரிகளுக்கும் தங்க முட்டையிடும் வாத்துக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களே மலையக அரசியல் தொழிற்சங்க அமைப்புகளின் அமைப்பாளர்களாக உள்ளூர் தலைவர்களாக தொழிற்படுகின்றனர் என்பதும் அனைவரும் அறிந்த வெட்கக்கேடான உண்மையாகும்.

நல்லாட்சி அரசு பொறுப்பேற்ற நாள் முதல், அவ்வரசின் பங்காளிகளாக செயற்படும் மலையக அமைச்சர்களாலும், அவர்களது சட்ட விரோத அடியாட்களாலும், குண்டர்களாலும், மலையக புத்திஜீவிகள், ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள், இணைய வழிப் போராளிகள், சமூக நீதிக்காக குரல் கொடுப்போருக்கு தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றது. பொலிஸ் நிலையங்களில் பொறுப்பதிகாரிகள் முன்னாலும் நகர்ப்புறங்களிலும், வழிபாட்டிடங்களிலும் இத்தகைய காடைத்தனங்கள் அரங்கேறியுள்ளபோதும் பாதிக்கப்பட்டோர் நீதி கேட்பதற்கு வழியில்லை.

மலையக அபிவிருத்தியில் நகர்ப்புறங்களின் அபிவிருத்திக்கான துரித செயல் திட்டம் ஏற்படுத்தப்படுமா?

மலையக தமிழரின் சனநாயக உரிமைகளும், மனித உரிமைகளும், அரசியலமைப்பு ரீதியான உரிமைகளும் மீறப்படும் போது மக்கள் பிரதிநிதிகள் வெட்கித்து நிற்கிறார்கள். பொகவந்தலாவ தோட்டப் பகுதியில் ஒரு மாணவியும் தாயாரும் மண்சரிவினால் மரணிக்க நேர்ந்த போது இடம் பெற்ற அநீதிகளுக்கும், அசமத்துவங்களுக்கும் நீதிகோரி போராடிய மக்களிற் சிலருக்கு இன்றைய நல்லாட்சி அரசின் அமைச்சர் ஒருவரின் அடியாட்கள் மதுவைப் புகட்டி உசுப்பேற்றினார். அதேவேளை அரசியல் பிழைப்புக்காக மத்திய மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என பத்துக்கும் மேற்பட்டடோர் வந்து சென்றார்கள். ஆனால் மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

போராடிய மக்கள் மீது கொலைவெறித்தனமாக தாக்குதல் தொடுத்த பொலிஸ், ஓட ஓட அவர்களை விரட்டி 40க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் மீது பொய் வழக்குகள் போட்டது. கொட்டியாகலை தோட்டத் தொழிலாளர் மீது போடப்பட்ட பொய் வழக்குகளால் போர்க்குணமிழந்து நிற்கிறது அந்த தோட்டம். கடந்த காலத்தில் சீனாக் கொலை, மரே, ஸ்டொக்கம், நோர்வூட், காவத்தை டல்வீன் தொழிலாளர்கள் நீதி கேட்டு வீதியில் இறங்கிய போதெல்லாம் பொலிஸாரின் துணையுடன் மலையக அரசியல்வாதிகளே அடக்கி ஒடுக்கினார்கள். நல்லாட்சிக்கான அரசின் பயணத்திலும் அதுவொரு தொடர்கதை தான்.

மலையக தமிழருக்கு 300000 வீடுகள் கட்டப்போவதாகவும், பல்கலைக்கழகம் ஒன்றை தாபிக்கப் போவதாகவும், 10000 வேலை வாய்ப்புக்களை உருவாக்கப் போவதாகவும், சம்பள உயர்வை ஜனாதிபதியும் பிரதமரும் பெற்றுத் தருவார்கள் எனவும், பட்டதாரி ஆசிரியர் வெற்றிடம் நிரப்பப்படுமெனவும் பரப்புரைகள் செய்யப்படுகின்றன. இருப்பினும் எண்ணற்ற தமிழ் பாடசாலைகள் தோட்டப்பகுதியில் கடந்த 70 வருடங்களில் மூடப்பட்டுள்ளன.

சப்ரகமுவ மாகாணத்தில் பலாங்கொடை தேர்தல் தொகுதியில் தொலைதூர தோட்டமான நூரி தோட்டத்தில், முதலமைச்சர் மகிபால் ஹேரத் தமிழ் பாடசாலையொன்றை தாபித்துள்ளார். வீ.இராதாகிருஸ்ணன் மேட்டுகுடி மலைய பிள்ளைகளுக்கான பாடசாலையாக கொட்டகலை கேம்பிரிஜ் கல்லூரியை தாபித்தார். அமரர் தொண்டமான் சிறிபாத கல்வியற் கல்லூரிக்கும் காங்கிரஸ் கல்வி நிறுவனத்திற்கும் வித்திட்டார். அவரது காலத்திலேயே அட்டன் பூல்பேங் தொழில்நுட்ப கூடம் தொடங்கப்பட்டது. தற்போது அது மூடப்பட்டுள்ளது. தவலம் தன்னையில் இசைக்கல்லூரியை நிறுவுவதற்கும், டிக்கோயா ஆதார வைத்தியசாலையை அமைப்பதற்கும் ஆறுமுகம் தொண்டமான் முன்னின்றார். அமரர் பெ. சந்திரசேகரன் முன்னெடுத்த அரசியல் முன்னோக்கு திட்டங்கள் காரணமாகவே இன்று 38000 இற்கு மேற்பட்ட தனிவீடுகளும், மாடிவீடுகளும் நிறுவப்பட்டுள்ளன. 1994ம் ஆண்டு சந்திரிக்கா ஆட்சியில் தோட்ட உட்கட்டமைப்புக்கான தனி அமைச்சு தாபிக்கப்பட்டதன் பின்னர் 75 வீதத்திற்கு மேற்பட்ட தோட்ட குடியிருப்புகளுக்கு மின்சார இணைப்பு வழங்கப்பட்டது. தோட்டப்புற அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்பட்ட பல திட்டங்களின் முன்னேற்றங்கள், குறைபாடுகள், போதாமைகள், ஊழல்கள் தொடர்பான போதிய மதிப்பீடுகளோடு எதிர்கால அபிவிருத்திக்கான முன்நோக்கு திட்டம் வகுக்கப்பட வேண்டும்.

அதேவேளை மலையக தமிழர் செறிந்து வாழும் கண்டி, தெனியாய, வத்தேகம, எல்பிட்டிய, மத்துகம, இங்கிரியாய, புலத்த சிங்கள பகுதிகளில் பெயர் சொல்ல ஒரு தமிழ் உயர்தர பாடசலை இன்றுவரை நிறுவப்படவில்லை. வத்தளையில் தமிழ் பாடசாலை, காவத்தையில் ஆலயம் என்பன நிறுவுவதற்கு எடுத்த முயற்சிகள் வெற்றியடையவில்லை.

இந்த நிலையில் நூற்றாண்டுகளுக்கு மேலாக எந்தவொரு அபிவிருத்தியுமின்றி காணப்படும் மலையக நகரங்கள், தமிழர்கள் செறிந்து வாழும் பெருந்தோட்ட பகுதி நகரங்கள் 21ம் நூற்றாண்டில் அபிவிருத்தியை வேண்டி நிற்கின்றது அது அவசரமானதும் அவசியமானதுமாகும்.






*பொன். பிரபாகரன்*

# புலம்பெயர் தமிழ்ச்சமூகத்தின் தனித்துவத்தை சிதைத்து பேரின நிறமூட்டும் பிரயத்தனம்!

புலம்பெயர் தமிழ் மக்கள் சிறிலங்கா அரசை தமது சொந்த அரசாகக் கருதுகிறார்களா? இக் கேள்வி தாயக மக்களுக்கும் பொருந்தும். ஆனால், தாயகத் தில் வாழும் மக்கள் சிறிலங்கா அரச கட்டமைப்புக்குள்தான் வாழ்ந்து வருகிறார்கள். அதனால் அவர் களுக்கு வேறு தெரிவு இல்லை. ஆனால் புலம் பெயர்ந்து வாழும் மக்கள்தாம்தாம்வாழும்நாடுகளின் அரச கட்டமைப்புக்குள் வாழ்கிறார் கள். இவர்களுக்கு தமது தாய் நாட்டின் அரசுடன் கொண்டிருக்கக் கூடிய தொடர்புகள் குறித்து தெரிவு கள் உண்டு. இதனால்தான் இக் கேள்வி இங்கு புலம்பெயர் மக்கள் குறித்து முன்வைக்கப்படுகிறது.

புலம்பெயர்மக்கள் தொகுதி *(டயாஸ்பொறா)* தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்ட Gabriel Sheffer எனும் அறிஞர், புலம் பெயர் மக்கள் தமது தாய் நாட்டின் அரசுடன்கொண்டிருக்கும்தொடர்பு களை அடிப்படையாகக கொண்டு அரசுடன் இணைக்கப்பட்ட டயாஸ் பொறா (state- linked diaspora), அரசற்ற டயாஸ்பொறா (state less diaspora) என இருவகை யாக வகைப்படுத்தினார்.

தமிழீழ விடுதலைப் போராட் டத்தின் வளர்ச்சியுடன், குறிப் பாக 1983 ஆம் ஆண்டின் பின் னர் சிறிலங்கா இராணுவத்தி னரின் இராணுவ நடவடிக் கைகளால் பாதிக்கப்பட்டவர்களான புலம பெயர்ந்த ஈழத்தமிழ் மக்களுக்கு சிறிலங்கா ஓர் எதிரி அரசாக இருந்தது. இவ் அரசுடன் தொடர்பு களைப் பேணுவதை புலம்பெயர் தமிழ் மக்கள் பொதுவாகத் தவிர்த்து வந்தனர். திருமணம், கடவுச் சீட்டு போன்ற விடயங்களுக்காக சிறி லங்கா தூதுவராலயத்துடன்தொடர்பு கொள்ள வேண்டி ஏற்பட்டாலும் அது ஓடும் புளியம் பழமும் போன்ற தொரு தொடர்பாகவே இருந்தது. தமது சொந்த அரசாக சிறிலங்கா அரசைக்கருதாத ஒரு சூழலில், ஈழத் தமிழர் டயாஸ்பொறா, சிறிலங்கா அரசுடன் இணைக்கப்பட்ட டயாஸ் பொறாவாக அமையவில்லை. இதனால், புலம்பெயர் தமிழ் மக்கள அரசற்ற டயாஸ பொறவாக புலம பெயர் சமூக மாக வகைப்படுத்தும் நிலை யில் தான் இருந்தனர்.

காலப்போக்கில், விடுதலைப் புலிகள்தமது நடைமுறை அரசினை (defacto state) அமைத் திருந்த காலத்தில் பெரும் பான்மையான புலம்பெயர் தமிழ் மக்கள் விடு தலைப் புலிகளால் அமைக்கப் பட்டிருந்த நடைமுறையரசினையே தமது அரசாகக் கருதிச் செயற்பட்ட னர். புலம்பெயர் ஈழத் தமிழ் சமூகம் விடுதலைப்புலிகள் அமைப்புடன் கொண்டிருந்த உறவுகளை, தொடர்பு களை தமது (தமிழ்) அரசுடன் கொண்டிருந்த தொடர்புகளாக அர்த்தப்படுத்திக்கொள்ளவும் முடியும்.

அரசுடன்இணைக்கப்பட்ட டயாஸ பொறாக்கள் தமது அரசுடன் கூடுத லான தொடர்புகளைக் கொண்டிருப பதால், தமது தாய்நாட்டின் மேம பாட்டுக் காக ஆற்றக்கூடிய பங்களிப்பு அவர்களுக்கு கூடுதலாக இருக் கும் என்றும் கருதப்பட்டது.

நமது சூழலில் நாம் இதனைப் பார்க்கும்போது சமாதான காலத் தின் ஆரம்ப காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பால் மேம்பாட்டுத் திட்டங்கள்வகுக்கப்பட்டபோது, நமது புலம்பெயர் தமிழ் மக்கள் அதில் ஆர்வமுடன் பங்குபற்றியதனை இதற்கு ஓர் உதாரணமாகக் கொள்ள லாம். இந்த ஆர்வத்தினையும்முனைப் பினையும் புலம்பெயர் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப பினையும் அவர்கள் கட்டியெழுப்பியிருந்த நடைமுறையரசினையும் தமது அரசாகக் கருதிக் கொண்டார்கள் என்பதற்கான ஓர் அறிகுறியாகவும் கொள்ள முடியும்.

மே 2009 ஆம் ஆண்டின் பின்னர் விடுதலைப்புலிகளின் நடைமுறை யரசு சிறிலங்கா அரசால் அழிக்கப்பட்ட பின்னர் புலம்பெயர் தமிழ்மக்கள் மீண் டும் ஓர் அரசற்ற டயாஸ்பொறா வாக ஆக்கப்பட்டனர். மகிந்த இராஜ பக்சவின் ஆட்சிக்காலத் தில், மேம பாட்டுத் திட்டங்களில் பங்குபற்ற முன்வருமாறு சிறிலங்கா அரசு, புலம்பெயர்ந்த தமிழ்மக்களை நோக்கி அழைப்பு விடுத்தபோதும், அரசுடன் இணைந்து செயற்படுவதில் புலம் பெயர் தமிழ் மக்கள் பெரிதும் ஆர்வம் காட்டவில்லை. ஈழத் தமிழர், புலம் பெயர் சமூகம் சிறிலங்கா அரசு டன் இணைக்கப்பட்ட டயாஸ்பொறாவாக அமையவில்லை என்பதன் வெளிப பாடாக இது கொள்ளப்படலாம்.

இதனால் ஈழத் தமிழ் மக்கள் நாடு கடந்த சமூகமாக வாழும் வாழ்வு அரசுடன் பெரிதும் தொடர்புபடாத தன்மையினையே கொண்டிருக்கிறது. தாயகப் பயணம் மேற்கொள்கின்ற போதும் இயன்றவுக்கு குறைந்த தொடர்புகளையே புலம்பெயர் தமிழ் மக்கள் சிறிலங்கா அரசுடன் கொண் டுள்ளனர். இவர்களின் தொடர்பு கூடுதலாக அவர்களது குடும்பங் களை மையம் கொண்டுள்ளது. இருந்தபோதும் குடும்பப்பரப்பைத் தாண்டி - தேசம், பிரதேசம், கிராமம், பாடசாலை, கோவில் போன்ற தளங்களிலும் நாடு கடந்த ரீதியிலான பிணைப்புக்கள் மக்கள் மத்தியில் வலுவாக உள்ளன.

இவ்வாறு குடும்பங்களை அடிப் படையாகக் கொண்ட நாடு கடந்த வாழ்வை, நேர்கோட்டு நாடு கடந்த நிலை (Linear transnationalism) என José Itzigsohn- Silvia Giorguli-Saucedo என்ற இரு அறிஞர்கள் வகைப்படுத் தியுள்ளனர். இவர்கள் தமது ஆய்வின் அடிப்படையில் நாடு கடந்த வாழ்வு முறையினை மூன்று வகையாகப் பகுத்தனர். இதில் முதலாவது வகை யாக இந்த குடும்பங்களை அடிப்படை யாகக் கொண்ட நேர்கோட்டு நாடு கடந்த வாழ்வுமுறை அமைகிறது.

ஈ,தமிழ் டயாஸ்பொறாவை சிறி லங்கன் டயாஸ்பொறாவாக்கி அரசு டன் இணைக்கும் முயற்சி வெற்றிய டையுமா?

இந்த குடும்பங்களின் அடிப் படையில் அமைந்த நாடு கடந்த வாழ்வுமுறையின் அடிப்படையில் தாய்நாட்டிலும் புலத்திலும் உள்ள குடும்பங்களுக்கிடையிலான உறவு கள் வலுவாக இருக்கும்போது நாடு கடந்த தொடர்புகள்வலுவான தாகவும், இந்த உறவுகள் வலு விழக்கும்போது நாடு கடந்த தொடர்புகள் வலுவிழக் கும் என வும் சுட்டப்படுகிறது.

இரண்டாவது வகையாக இவ் அறிஞர்கள் வகைப்படுத்தியது பொரு ளாதார நிலை சார்ந்து எழும் நாடு கடந்த வாழ்வு முறையாக அமை கிறது. இது வளங்களை (resources) அடிப்படையாகக் கொண்டு வகைப படுத்தப்படுகிறது. இதனை வளங் களில் தங்கிய நாடு கடந்த வாழ்வு முறை (Resource- dependent tran snationalism) என இவர்கள் அழைக் கின்றனர்.

இது நாடு கடந்த வாழ்வுக்கும் மக்கள் கொண்டிருக்கக்கூடிய வளங் களுக்குமிடையே உள்ள தொடர்பு களை எடுத்துக் கூறுகிறது. இந்த அணுகுமுறையின் அடிப்படையில், நாடு கடந்த வாழ்வு முறையினை அணுகும்போது, வளம் பெருகும் போது நாடு கடந்தரீதியிலான தொடர்புகள் அதிகரிக்கும். வளங்கள் குறைவாக இருக்கும்போது நாடு கடந்த ரீதியிலான தொடர்புகள் குறைவாக இருக்கும். நாடு கடந்த ரீதியில் முதலீடுகளை மேற்கொள்ளல், நாடு கடந்த ரீதியில் வியாபாரங்களை மேற்கொள்ளல் போன்றவை இந்த வளங்களின் அடிப்படையில் அமைந்த நாடு கடந்த வாழ்வுமுறைக்கு உதார ணங்களாக அமைகின்றன.

மூன்றாவதாக, நாடு கடந்த வாழ்வுமுறைக்கு தூண்டியாக அமை யும் காரணியாக புலத்தில் வாழும் நாடுகளில் எதிர்மறையாகக் கிடைக கும் அனுபவங்கள் சுட்டிக் காட்டப்படு கின்றன. இதனை “எதிர்வினை நாடு கடந்த வாழ்வுநிலை” (Reactive Transnationalism) என இவ் அறிஞர் கள் அழைக்கின்றனர்.

புலத்தில் வாழ்வோர் தமது வாழ்க்கையினை புலத்தில்வெற்றியாக அமைத்துக் கொள்ளத் தேவையான தகைமைகளை வளர்த்து, தமது வாழ்வினை வெற்றியாக அமைத்துக் கொள்ள முடியாது தவிக்கும் போது, அல்லது புலத்தில் நிலவக்கூடிய இன வாதம் மற்றும் அதனால் ஏற்படும் புறக்கணிப்பு, அவமதிப்பினை உண ரும்போது- தமது தாய்நாட்டுடன் அல்லது தாய்நாட்டுடன் தொடர்புபட்ட விடயங்களில் கூடுதலான கவனத் தைக் கொடுக்கும் வாய்ப்புக்கள் அதிகம் என்ற அவதானிப்பில் இருந்து முன்வைக்கப்பட்ட கருத் தாக இது அமைகிறது.



புலம்பெயர் தமிழ் மக்களைப் பொறுத்தவரை தாயகத்தில் உள்ள குடுப்பத்தினருடனான தொடர்பு பலவீனம் அடைந்துவருகிறது. குடும்ப உறுப்பினர்கள் புலம் பெயர்ந்தமையும் இயற்கை அடைந தமையும் இதற்கு முக்கிய காரணங கள். தம்மிடம் உள்ள வளத்தினைத் தாயகம் நோக்கித் திருப்புவதற்கான ஆர்வம் அவர்களுக்கு உண்டு. ஆனால், அதற்கேற்ற சூழல் இன் னும் உருவாகவில்லை. புலம்பெயர் வாழ்வில் தோல்வி அடைந்த இனதத்வர்களாகத் தாயகம் நோக கிச் சிந்திப்பவர்கள் எண்ணிக்கையில் குறைவானவர்களே. ஆனால், புலம்பெயர் வாழ்க்கைச் சூழலை அந்நியத்தன்மையுடன் பலர் உணர் கின்றனர். இது தாயகம் குறித்த நினைவுகளையும் ஏக்கத்தையும் பலருக்கு ஏற்படுத்துகிறது.

இப்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் மைத்திரி - ரணில் அரசாங்கத்தினால்புலம்பெயர்தமிழ் மக்களை சிறிலங்கா அரசுடன் இணைக்கும் முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன. இதற்காகத் தமிழ் டயாஸ்பொறா என்ற தனித் துவ அடையாளத்தை நீக்கம் செய்து, தமிழ் - சிங்கள - முஸ்லீம் - பறங்கிய - புலம் பெயர் சமூகத்தினர் அனை வரையும் சிறிலங்கன் டயாஸ் பொறா என்ற ஒரு பொது அடை யளத்தின் ஊடாக இணைக்கும் திட்டமொன்றை புதிய சிறிலங்கா அரசாங்கம் வகுத்துள்ளது.

இதன் அடிப்படையில் எதிர்வரும் நவம்பர் மாதம் சிறிலங்கன் டயாஸ் பொறாவுக்கான விழாவொன்று கொழும்பில் ஏற்பாடு செய்யப படுகிறது. புலம்பெயர் தமிழ் மக்களை தமிழ்டயாஸ் பொறா வென்ற தனித்துவமான அடை யாளத்துடன் அணுக சிறிலங்கா அரசு தயாராக இல்லை. தமிழ் டயாஸ்பொறா என்ற தனித்துவமான அடையளத்தை இல்லாதொழிப்பது தமிழ் டயாஸ்பொறா முன்னெடுத்து வரும் அரசியல் ரீதியான போராட் டங்களைப் பலவீனப்படுத்துவதற்கு அவசியம் என சிறிலங்கா அரசு கருதுகிறது. முன்னைய மகிந்த இராஜபக்ச அரசாங்கம் தமிழ் டயாஸ்பொறாவுக்குள் ஊடுருவ எடுத்த முயற்சிகள் வெற்றியடை யவில்லை. புதிய ஆட்சியாளர்கள் தமது முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுமந்திரனையும் உலகத் தமிழர் பேரவையின் சுரேன் சுரேந்திரனையும் இணைத்தவாறு தமது முயற்சிகளை மேற்கொள்கின் றனர். தமிழ் டயாஸ்பொறாவினை சிறிலங்கன் டயாஸ்பொறாவாக மாற்றி, சிறிலங்கா அரசுடன் இணைக் கும் இவர்களின் முயற்சி பற்றி புலம்பெயர் தமிழ்ச்சமூகம், விழிப்புடன் செயலாற்றவேண்டிய நேரம் இது.

-சர்வேந்திரா

# காலத்தால் அழியாத கானங்கள் ...

திரைப்படம்: ஆடிப்பெருக்கு
பாடலாசிரியர்: கே.டி. சந்தானம்
இசை: ஏ.எம். ராஜா
பாடியோர்: : ஏ.எம். ராஜா, பி. சுசீலா




கண்ணிழந்த மனிதர் முன்னே ஓவியம் வைத்தார்
கண்ணிழந்த மனிதர் முன்னே ஓவியம் வைத்தார் இரு
காதில்லாத மனிதர் முன்னே பாடலிசைத்தார் பாடலிசைத்தார்
கண்ணிருந்தும் ஓவியத்தைக் காட்டி மறைத்தார் இரு
காதிருந்தும் பாதியிலே பாட்டை முடித்தார் பாட்டை முடித்தார்
ஆட வந்த மேடையிலே முள்ளை வளர்த்தார்
அணைக்க வந்த கரங்களுக்குத் தடையை விதித்தார்
ஆட வந்த மேடையிலே முள்ளை வளர்த்தார்
அணைக்க வந்த கரங்களுக்குத் தடையை விதித்தார்
காய்ந்து விட்ட மரத்தினிலே கொடியை இணைத்தார்
தாவி வந்த பைங்கிளியின் சிறகை ஒடித்தார்
கண்ணிழந்த மனிதர் முன்னே ஓவியம் வைத்தார்
கண்ணிருந்தும் ஓவியத்தைக் காட்டி மறைத்தார் காட்டி மறைத்தார்
பெண் பெருமை பேசிப் பேசிக் காலம் கழிப்பார்
தன் பெருமை குலையுமென்றால் பெண்ணை அழிப்பார்
பெண் பெருமை பேசிப் பேசிக் காலம் கழிப்பார்
தன் பெருமை குலையுமென்றால் பெண்ணை அழிப்பார்
முன்னுமில்லை பின்னுமில்லை முடிவுமில்லையே
மூடர் செய்த விதிகளுக்குத் தெளிவுமில்லையே
கண்ணிழந்த மனிதர் முன்னே ஓவியம் வைத்தார் இரு
காதில்லாத மனிதர் முன்னே பாடலிசைத்தார் பாடலிசைத்தார்
கண்ணிழந்த மனிதர் முன்னே ஓவியம் வைத்தார் இரு
காதில்லாத மனிதர் முன்னே பாடலிசைத்தார் பாடலிசைத்தார்

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**

தியாகராஜா குடும்பம்-தெல்லிப்பழை. திவாகரன், பாஸ்கரன், பிரபாகரன், ராஜேஸ்வரன், சிந்துஜா, சந்திரகுமார், மோகனரூபன், வசந்தன், யோகேஸ்வரன்.

*அன்பு வாசகர்களே!*

காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்

**021 567 1543**

எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

# ஈழத்து சினிமா

## அன்பரசன்-குறும்பட விமர்சனம்

போர் ஓய்தலுக்குப்பின் சமனிலை குழப்பப்பட்ட மக்களுக்கு தன்னார்வ ரீதியில் உதவிகளை செய்துவரும் நிறுவங்களில் வேலைபார்க்கும் தனிப்பட்டவர்களின் பார்வைகளும் அவர்களின் கரிசனைகளும் எப்படி இருகின்றன, அதில் ஏற்படும் முரண்கள் பற்றிப்பேச விழையும் குறும்படம் அன்பரசன்.

சமீபகாலங்களில் குறும்பட செயற்பாடுகளில் அதிதீவிரமாக இயங்கிவரும் பெண்படைப்பாளிகளில் ஒருவரான ஷாலினி சாள்ஸினால் எழுதப்பட்டு நெறிப்படுத்தப்பட்ட குறும்படம் அன்பரசன். சமீபத்தில் இடம்பெற்ற யாழ் சர்வதேச திரைப்பட விழாவில் அன்பரசன் குறும்படம் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கேட்போர் கூடத்திலும் யாழ்.பொதுசன நூலகத்திலும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

கதையின் கட்டுமான மையம் இப்படி இருகின்றது. கிராமம் ஒன்றுக்கு தன்னார்வ தொண்டு நிறுவனத்தினால் மக்களுக்கு தேவையான சில அடிப்படை உதவிகளை பெற்றுத்தர பெண் ஒருவர் வருகின்றார். ஏற்கனவே தொடர் இழப்புகளில் விசனம் அடைந்த பொதுமக்கள் அப்பெண்ணின் உதவிகளை பெற்றுக்கொள்வதில் அக்கறை காட்டாமல் அப்பெண்ணையும் உதாசீனமாக இலகுவில் கடந்து விடுகின்றார்கள். அக்கிராமத்தில் எப்போதும் தனிமையில் விநோதமாக தன்னை ஒப்படைத்து விரத்தியில் இருக்கும் அன்பரசன் என்ற நபரை சந்




திக்கின்றாள் அப்பெண். நிரம்பப் படித்திருந்தும் தொடர்ந்தும் விநோதமான பாவனையிலும் தொழில்கள் இன்றியும் சோகமாக இருக்கும் அந்த இளைஞனின் போக்கு அப்பெண்ணை ஆச்சரியப்படுத்துகின்றது. அந்தக் கொடூரதனிமையில் சிக்கித்தவிக்கும் அன்பரசனை மீட்டு அவரை சாதரணமான இயல்புவாழ்கையில் மகிழ்ச்சியாக இயங்கும் ஒருவராக மாற்றத் தீர்மானிக்கின்றாள். அன்பரசனுடன் கடினப்பட்டு நட்பை ஏற்படுத்தி இயல்புவாழ்கையில் அவளை இணைக்க முற்படுகின்றாள்.

இவர்களின் நெருக்கம் கிராமத்து மக்களுக்கு விநோதமாக தோன்றத் தொடங்குகின்றது. தவறான பார்வைகள் அப்பெண்ணைச்சுற்றி விழுகின்றது. இறுதியில் என்னவாகின்றது என்பதை உங்கள் ஊகத்துக்கு விடுகின்றேன்.

காட்சிமொழியில் படத்தினை நகர்த்திச்செல்லும்போது சொல்லப்படும் உள்படிமமாக்கல் இக்குறும்படத்தில் பெருவாரியாக தவறியிருக்கின்றது. அப்பெண் அன்பரசனுடன் நட்பாக பழகமுற்படும்போது ஏற்படும் அவர்களின் உறவின் வளர்ச்சியும் அதற்கான உரையாடல் களங்களும் மிகசெயற்கையாக செறிவில்லாமல் இருகின்றன. மேன்போக்கான அவர்களின் உரையாடல் வடிவங்கள் இருவரின் அடியாழங்களில் இருந்து எழுவதாக அல்லது அதனை இருவருக்கும் இடையில் தொடுவதாக இல்லை. பார்க்கும் பார்வையாளர்களை காட்டப்படும் காட்சிகளோடு ஒட்டிவைக்க முடியாமல் இக்காட்சிப்படிமங்கள் அமைத்திருக்கின்றது. அன்பரசனுடன் உரையாடி அவரின் துன்பங்களையும் தனிமையையும் களையும் தருணங்கள் அற்புதமாக நெகிழ்ச்சியான வடிவத்தில் உருவாகப்பட்டிருக்க வேண்டியவை.

ஊர்மக்களால் வெறுக்கப்படுவதாக அப்பெண்ணை சித்தரிக்கும் இடங்கள் வலிமை குன்றிய இடங்களாகவே இருக்கின்றன. அவளுடன் நட்பைப் பேணாதே என்ற கருத்துப்பட ஊர்பெரியவர்கள் அன்பரசனுக்கு சொல்வது போல காட்டப்படும் இடங்களில் அதற்கான காரணங்கள் வெற்றிடமாக இருகின்றன. கதையின் உள்படிமத்தில் இருக்கும் மிகபெரிய சிக்கலாக இது இருகின்றது.

நீண்ட தாடியோடு விரக்தியின் அவஸ்தையில் இருக்கும் அன்பரசனாக நடித்த துஷிகரன் இயல்பாக நடித்துள்ளார். இன்னும் உருக்கமான காட்சிகள் இருந்திருந்தாள் துஷிகரனின் நடிப்பின் திறனை சந்தேகம் இல்லாமல் உறுதிப்படுத்த முடிந்திருக்கும். தன்னார்வ நிறுவன பெண்ணாக வருபவரின் நடிப்பிலும் குறைகள் சொல்லும் படியாக இல்லை. இன்னும் இவர்களுக்கான முழுமையான களம் இயககுனரினால் கொடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதே உண்மை. வசங்களின் மேன்போக்கான செயற்கையான உருவாக்கம் மொத்தத்தில் குறும்படத்துக்கு மிகப்பெரிய எதிர்மறை.

-அனோஜன் பாலகிருஷ்ணன்-

# ஈழத்துக் கவிதைகள்

## காந்தி மார்க்கம்

சிறகடித்து பறக்கும் வெண்புறாவே.
உன் சிறகுடைந்து கிடக்குது. வெண்புறாவே.
மாலை நேரம் வந்ததனால்
உன் மனையை தேடி சென்றாய்
வெண்புறாவே
வெண்மையின் தூய்மையில்.
கயவஞ்சகர்கள் காம வலைக்குள்
சிக்குண்டுதுடியாய் துடித்தாய் வெண்புறாவே.

கால்(க்)கட்டு கைக்(க்)கட்டு போட்டு
உயிர் இருக்க உயிர் இருக்க
ரணம் ரணமாய். வெள்ளை சிறகை
உடைத்தான் வெண்புறாவே.
வேதனையால் எப்படி
துடி துடித்திருப்பாய் வெண்புறாவே.
தாயின் வயிற்றில் முறை தப்பி
பிறந்த மூதேவி நாய் பயல்கள்


முன்னுக்கு பின்னாக நின்று.
காமப்பசி தீர்த்த கயவர்கள்.
சிறகு விரித்து பறந்த வெண்புறாவை
சிறகுடைத்து போட்டீர்கள்
சகோதர பாசம் என்றால்
என்னவென்று தெரியாத. மிருங்கள்.
உங்களை கடவுள் கூட மன்னிக்க மாட்டான்
மனிதனும்கூட மன்னிக்க மாட்டான்.

செய்வினை செய்தவன்
தன் வினை தானே அனுபவிப்பான.
கையிலும் காலிலும் விலங்கு போட்டு
வாழ் நாள் முழுதும் உலகத்தை
பார்க்க முடியாத அளவுக்கு
மண்ணின் அடியில் உயிருடன்
புதைக்க வேண்டும் காம வெறியர்களை.

ஒரு வெண்புறாவின் சிறகை உடைத்தான்
இன்று பலநூறு வெண்புறாக்கள்
அகிலமே அதிரும் வண்ணம்
கூட்டை விட்டு ரோட்டை மறித்து
நீதி கேட்கும் வெண்புறாக்கள். எத்தனை
நீதி தேவதை உறங்க வில்லை.
அவளும் ஒரு பெண்தான்

சரித்திரத்தில் எழுதட்டும் நீதி
எமக்கு கிடைக்கட்டும் நிம்மதி
சிறகுடைந்த வெண்புறாவே. நீதி வரும்
வரை உன் உறவுகள் தூங்காது

ரூபன்





## அனிருத்தின் சம்பளம் கோடியா? அதிர்ச்சியில் திரையுலகம்

முதல் படத்திலேயே இந்தியா முழுவதும் பிரபலமான இசையமைப்பாளர் அனிருத். இதை தொடர்ந்து எதிர் நீச்சல், வணக்கம் சென்னை என இசையமைத்து வந்த இவர், கத்தி படத்தின் மூலம் தமிழ் சினிமாவின் முன்னணி இசையமைப்பாளராகிவிட்டார்.

இந்நிலையில் அஜித் நடிக்கும் வேதாளம் படத்திற்கும் இசை இவர் தான் என்பது அனைவரும் அறிந்ததே. தமிழில் கலக்கி வந்த அனிருத் அடுத்து தெலுங்கு சினிமாவில் கால் பதிக்கவுள்ளார்.

இயக்குநர் த்ரிவிக்ரம் அடுத்து இயக்கும் படத்திற்கு அனிருத் தான் இசை. இப்படத்திற்காக இவர் ரூ 2 கோடி வரை சம்பளமாக பெற்றுள்ளதாக கூறப்படுகின்றது. தெலுங்கு இசையமைப்பாளர் தேவி ஸ்ரீ பிரசாத், தமன் ஆகியோருக்கே இவ்வளவு சம்பளம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வேதாளம் டீசர் சாதனைக்கு மேல் சாதனை

அஜித் நடிப்பில் தீபாவளிக்கு வெளிவரவிருக்கும் படம் வேதாளம். இப்படத்தின் டீசர் சமீபத்தில் வெளிவந்து யு-டியுபில் சாதனை படைத்து வருகின்றது. ஒரே நாளில் 13 லட்சம் பேர் பார்வையிட்டு, ஐ. படத்திற்கு பிறகு ஒரு நாளில் அதிக பேர் பார்வையிட்ட டீசர் என்ற பெருமையை தன்வசப் படுத்தியது.

இந்நிலையில் இந்த டீசர் தற்போது 20 லட்சம் ஹிட்ஸை எட்டியுள்ளது. ஒரு லட்சம் லைக்ஸ்"களை தாண்டியுள்ளது. இன்னும் சில மணி நேரங்களிலேயே இந்தியாவிலேயே அதிக லைக்ஸ் பெற்ற டீசர் என்ற சாதனையை வேதாளம் படைத்துவிடும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

## அஜித் பிரியாணியை சாப்பிட மறுத்த ஸ்ருதி



அஜித் தன் படப்பிடிப்பில் இருப்பவர்கள் அனைவரையும் அன்பாக பார்த்துக்கொள்வார். அனைவருக்கும் ஒருநாள் பிரியாணி செய்து கொடுத்து அசத்துவார்.

அப்படி ஒருநாள் அஜித் செய்து கொடுத்த பிரியாணியை ஸ்ருதிஹாசன் சாப்பிட மறுத்து விட்டாராம். அதற்கு அவர் விளக்கம் தருகையில் 'சார் நான் பிராமண பெண்ணாக இருந்தாலும் அசைவம் சாப்பிடுவேன்.

ஆனால், தற்போது கொஞ்சம் டயட் அதனால்தான் என கூற அஜித்தும் சிரித்துக்கொண்டே சரி என்றாராம்.

# கத்துக்குட்டி

## திரைவிமர்சனம்

மீத்தேன்வாயு எடுப்பதன் மூலம் விளைநிலங்கள் பாழாவதோடு மண்வளம் முற்றிலும் மரித்துப்போய்விடும் என்கிற அதிர்ச்சியூட்டும் உண்மையை மையமாகக் கொண்டு அரசியல் நையாண்டிகளையும் கலந்து எடுக்கப்பட்டிருக்கும் படம் கத்துக்குட்டி. மீத்தேன் திட்டத்தைச் செயற்படுத்தத் திட்டமிட்டிருக்கும் தஞ்சாவூரையே கதைக்களமாக வைத்துக்கொண்டு அதற்கு எதிரான படத்தை எடுத்திருக்கிறார்கள்.

நாயகனாக நடித்திருக்கும் நரேனும் அவருடைய நண்பராகப் படம் முழுக்க வருகிற சூரியும் எந்நேரமும் மது குடித்துக் கொண்டு ஊருக்குள் வம்பிழுத்துக் கொண்டு திரிகிறார்கள். நரேன் இழுக்கும் பெரும்பாலான வம்புகள், குடும்பநலன் மற்றும் மக்கள்நலன் கருதியே இருக்கிறது.



நரேனின்அப்பா அரசியல்வாதி என்பதால் சட்டமன்றத்தேர்தலில் அவருக்குக் கிடைக்கவேண்டிய சட்டமன்ற வேட்பாளர் பொறுப்பு நரேனுக்கு வந்து சேருகிறது.

அதன்பின்னர் படம் முழுக்க அரசியல் வாடை. அரசியல்வாதிகளின் முழுமையான பரிமாணத்தைக் காட்ட முயன்றிருக்கிறார்கள். நாயகன் நரேன் உருவத்தில் தஞ்சை மண்ணுக்குரியவராக இருந்தாலும் பேசும்போது கொஞ்சம் நெருடலாக இருக்கிறது.

சூரி மண்ணின் மைந்தர் வேடத்துக்கு அச்சு அசலாகப் பொருந்திப்போகிறார். எல்லாக் காட்சிகளிலும் இருவரும் சேர்ந்தே வருகிறார்கள். சில இடங்களில் சிரிக்க வைக்கிறார்கள்.

நாயகியாக நடித்திருக்கும் சிருஷ்டாங்கே, தமிழ்த்திரைப் படங்களில் காணக்கிடைக்காத சமூகப்பொறுப்புள்ள நாயகியாக இருக்கிறார். ஒருவரை விரட்டுவதுகூட வலிக்காமல் விரட்ட வேண்டும் என்று நினைக்கிற மென்மையான மனதுக்குச் சொந்தக்காரியான அவர், சுற்றுச் சூழலையும் மண்ணையும் மற்றும் பல உயிர்களையும் பாதுகாக்கவேண்டிய இடங்களில் வன்மையானவராகி கவர்கிறார்.

நரேனின் அப்பாவாகவும் அப்பாவி அரசியல்வாதியாகவும் நடித்திருக்கிற பாரதிராஜாவின் தம்பி ஜெயராஜ் வேடத்துக்குப் பொருந்தியிருக்கிறார். நாயகியின் அப்பா ராஜா, மண்ணை நேசிக்கிற விவசாயிகளின் பிரதிநிதியாகவே வாழ்ந்திருக்கிறார். ஆளுங்கட்சி மாவட்டச்செயலாளராக நடித்திருக்கும் ஞானவேல், சமகால அரசியல்வாதிகளைப் பிரதியெடுத்தது போல் இருக்கிறார்.

உயரியபொறுப்பில் இருப்பவர் என்பதை மறந்து அவர் ஆடும் ஆட்டங்கள் அரசியல்வாதிகளின் இன்னொரு பக்கத்தைக் காட்டுவதாக இருக்கிறது.

கடைசியில் அவர் செய்யும் செயல் நம்பிக்கைத்துரோகம் என்றாலும் பாராட்டுக்குரியது. ரெங்குபாட்டி, சித்தன்மோகன், தேவிப்பிரியா உட்பட படத்தில் வருகிற சின்னச்சின்ன வேடங்களுக்கும் பொருத்தமான நடிகர்களைத் தேர்வுசெய்திருக்கிறார்கள். ரெங்குபாட்டி பேசும் வசனங்களில் தற்போதைய அரசாங்கத்தைச் சாடியிருக்கிறார்கள்.

தஞ்சை மண்ணின் வளத்தையும் மீத்தேன் திட்டம் வந்தால் என்ன நடக்கும்? என்பதைக் காட்சிப்படுத்திப் பதற வைக்கிறார் ஒளிப்பதிவாளர் சந்தோஷ் ஸ்ரீராம். பச்சைப்பசேல் என்றிருக்கும் வயல்வெளிகள், குருவிகள் உட்பட பல்வேறு பறவையினங்கள், புழு, பூச்சிகள் உள்ளிட்ட ஒட்டுமொத்த மண்ணையும் சூழலுக்கேற்ப காட்சிப்படுத்தியிருக்கும் ஒளிப்பதிவாளரைப் பாராட்டலாம்.

அருள்தேவ் இசையில் பாடல்கள் கேட்கும்படி இருக்கின்றன. பின்னணி இசையும் தேவைக்கேற்ப இருக்கிறது. சமகாலத்தில் நடக்கும் கொடுமையை வெளிப்படுத்தி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று படமெடுத்திருக்கிறார் இயக்குநர் சரவணன்.





## கண்ணீர் விட்டு அழுத விஷால் அதிரடி முடிவு

விஷால் நடிகர் சங்க தேர்தலுக்காக தமிழ்நாடு முழுவதும் நாடக நடிகர்களை சந்தித்து வருகிறார். அந்த வகையில், சமீபத்தில் திருச்சி நாடக நடிகர்களை சந்தித்துள்ளார்.

இதில் ஒரு நாடக நடிகர் பேசும் போது தன் வாழ்க்கையில் சந்தித்த பிரச்சினைகளை எல்லாம் கூறினார். இதை கேட்ட விஷால் கண் கலங்கி அழுதார்.



இதைத் தொடர்ந்து 'நாங்கள் வெற்றி பெற்றால் இனி ஒவ்வொரு மாதமும் நாடக நடிகர்களுக்கு ரூ. 5000 வீடு தேடி வரும் என கூறினார்.

# ஐ.நா. மனித உரிமை சபை தீர்வுக்கும் அப்பால் மற்றுமொரு தீர்வு உள்ளதா?

அமெரிக்காவின் தலைமையிலும் இலங்கையினது இணைத் தலைமையிலும் வழி நடத்தப்படும், மைய- முக்கியத்துவம் வாய்ந்த குழுவொன்றின் ஒத்த அனுசரணையில் இலங்கை விடயங்கள் மட்டில் ஊக்குவிப்பு, மீள் இணக்கப்பாடு, நம்பகத்தன்மை போன்றவற்றுடன் மனித உரிமைகளையும் வலியுறுத்தும் அந்த 'UNHCR' தீர்மானம் கடந்த வியாழக்கிழமையன்று வெனீவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமை சபை கூட்டத் தொடர் அமர்வுகளின்போது எந்தவொரு வாக்கெடுப்புக்கும் இடமின்றி ஏகமனதாகவே நிறைவேறியது. இலங்கை ஆயுதப் படைகளுக்கும் 'எல்.ரீ.ரீ.ஈ' பயங்கரவாத அமைப்புக்குமிடையில் இடம்பெற்ற போரின் இறுதிக்கட்ட நடவடிக்கைகளின்போது இடம்பெற்றதாக குற்றஞ்சாட்டப்படும் சர்வதேச சட்ட மீறல்கள் மத்தியிலும் மேற்கொள்ளப்பட்ட ஏனைய மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றச் சாட்டுக்கள் மீதான எந்தவித விசாரணைகளையும் மூர்க்கமாகவே எதிர்த்து வந்த மகிந்த ராஜபக்ஷ ஆட்சியின் பிரதிநிதிகளது முந்திய வருடங்களைப் போலல்லாது இந்தத் தடவை மனித உரிமைகள் சபைக்கூட்ட மண்டபத்தில் குறிப்பிடத்தக்களவில் மாறுதலானதொரு அரசியல் சூழ்நிலை நிலவியது.

மேற்படியான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களிலும் ஏற்படக்கூடிய எந்தவித அந்நிய தலையீடுகளும் எமது நாட்டின் இறைமைக்கு விடப்படும் சவாலே என்ற வகையில் ராஜபக்ஷ ஆட்சி அவற்றுக்கெதிராக எப்போதும் குரலெழுப்பி வந்தது. கடந்த வியாழக்கிழமை சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கும் எதிராகவே தனது எதிர்ப்பினை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளிப்படுத்தியிருந்தார். சபையின் கடந்த மூன்று வருடகால ஜெனீவா அமர்வுகளிலும் அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்டு வந்த இந்த மூன்று தீர்மானங்களையும் நிராகரித்து உதாசீனம் செய்திருந்த ராஜபக்ஷவின் இந்த எதிர்ப்பு அமெரிக்காவின் தலைமையிலான நாடுகளின் இணைக்குழு தீர்மானத்தில் தடுமாற்றத்தினை ஏற்படுத்திவிடவில்லை. உள்நாட்டுப்போரில் வெற்றிபெற்றிருந்த அந்த வெற்றிக்களிப்பின் மிதப்பில் உலக வல்லரசுடனும் அதனது நட்பு அணியினருடனும் தாம் நேரடியாகவே மோதுகிறோம் என்ற உணர்வு இயல்பாகவே அவருக்கு மரத்துப்போயிருந்தது. நடந்த குற்றச் செயல்களுக்குப் பொறுப்பாளிகளாக குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் இனங்காணப்பட்டு எந்தளவுக்கு விமர்சிக்கப்படுகிறார்களோ அந்தளவுக்கு இலங்கை விமர்சகர்களது இலக்காக இவருங்கூட ஆகியிருப்பதாகவே தோன்றுகிறது. இராஜதந்திர விவேகமற்ற வெறும் முட்டாள்தனமான துணிச்சலேதான் இது!

இனியும் இல்லை என்ற விதமான உச்சக்கட்ட சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய வேறு



எத்தகைய சந்தர்ப்பத்திலுமே உலக வல்லரசுகள் தமது போக்கில் திடீர் திருப்பம் எதனையும் மேற்கொள்பவர்களல்ல. அதாவது தமது அதிவிசேட முக்கியத்துவம் வாய்ந்த நலன்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்களிலேயே திருப்பங்களை மேற்கொள்வர். இவ்விதமாகவே இலங்கை அவர்களது இலக்காகியது தவிர்க்க முடியாத முடிவற்ற ஒன்றாகியிருந்தது.



இலங்கையின் புதிய அரச தலைவர்களது திறந்த மனப்போக்கின் விளைவாக இலங்கையுடனான அவர்களது உறைநிலை உறவுகள் இறுக்கம்தளர, இவர்களது உள்ளகவிசாரணைக் கோரிக்கைக்கு இணங்குவதற்கான அறிகுறிகள் தென்படலாயிற்று. ஆனாலும் அவர்களுடன் தொடர்புபட்ட தமிழர் தரப்புகளது மற்றும் இதுமட்டில் ஆர்வங்கொண்ட குழுக்களதும் நெருக்குதல்களே சில விட்டுக்கொடுப்புக்களின் அடிப்படையில் தமது இணக்கப்பாட்டைச் செயற்படுத்தச் செய்வதென்ற அவர்களது ஏற்பாட்டிற்கான காரணமாயிருக்க வேண்டும். அதாவது வெளிநாட்டு நீதிபதிகளும் உள்ளடங்கும் ஒரு கலப்பு நீதிமன்றமே அந்த அடிப்படையாகும். அதாவது விசேட சட்ட ஆலோசனைக்குழு, பொதுநலவாய நீதிபதிகள், வழக்காளி தரப்பு சட்டவாளர்கள் மற்றும் அங்கீகாரம் பெற்ற சட்டத்தரணிகள், புலன் விசாரணையாளர்களும் உள்ளடங்கும் கலப்பு நீதிமன்றம் ஒன்றே 'UNHCR' தீர்மானத்தில் உள்ளடங்குகிறது.

மகிந்தவும் அவரது தரப்பினரும் இப்பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகள் உள்ளடக்கப்படுவதற்கெதிராக தமது போராட்டத்தை ஆரம்பிப்பதற்கென வரிந்து கட்டிக்கொண்டு



தயாராகவேயுள்ளனர். அவர்களது இந்த நீதிமன்ற நடைமுறைகளில் வெளிநாட்டு சக்திகள் சம்பந்தப்படுவதை அநேகமான இலங்கையர்கள் நிச்சயம் விரும்ப மாட்டார்களென்றாலும் இதனைவிட வேறு ஓர் தீர்வு உள்ளதா? இது ஓர் தற்காலிக ஏற்பாடாக இருப்பினுங்கூட இருக்கக்கூடிய மாற்றுத் தீர்வுதான் என்ன?

வெளிநாட்டவர்களுடன் இலங்கைத் தமிழர்களென்ன பெரும்பான்மைச் சிங்களவர்களுங்கூடத்தான் அண்மித்த சில தசாப்தங்களாக எமது நாட்டின் நீதி மற்றும் சட்ட நடைமுறைகளில் நம்பிக்கையிழந்து போயுள்ளனர். நீதியியல் சட்டநடைமுறைகள் முற்றிலுமாக அரசியல் மயப்படுத்தப்பட்டிருப்பது மறுக்க முடியாத அப்பட்டமான உண்மையேதான்! மோசமானதும் தவறானதுமான நீதியியல் நடைமுறைத் தீர்மானங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, "இவையெல்லாம் உங்களது அரசின் ஆட்சிக் காலத்திலேயே நடந்தது" என்று கூறுவதை அவர்களும் நம்பப்போவதில்லை. இவர்களாலும் ஆரம்ப காலத்திற்போல் அப்பழுக்கற்ற விதமான துல்லிய நீதி நியாயங்களை இப்போதே வழங்கிவிட முடியும் என்பதுகூட கூடுதலாக நம்பிக்கைக்கு அப்பாற்பட்டதேயாகும். ஒரு காலத்தில் மதிப்பு மரியாதையுடன் கௌரவத்திற்குரிய இடமாகவுமிருந்த 'ஹல்ட்ஸ்ரோஃவ்' ('Hulftsdorp court') நீதிமன்ற வீதிகளில் நீதிமன்ற சீருடைக் கோலத்தில் நடமாடி, கோவில்களிலும் வீதிகளிலும் தேங்காய் உடைத்து அலுவல்கள் பார்த்துப் பெற்றுக்கொண்ட ஒரு வித கோமாளித்தனமான பெறுபேறுகளுடன் ஆறுதலடைந்து கொண்ட அன்றைய நிலையே தான் தற்போதைய சட்டத்துறையின் உத்தியோகபூர்வ செயற்பாடுகளை நாட்டிலும் நாடு கடந்த ரீதியிலும் மிகுந்த கீழ் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

இந்த விதத்தில் எமது நீதிபதிகள் மீதோ அல்லது சட்ட ஒழுங்கு முறைகள் மீதோ நம்பிக்கை கொள்ள முடியாது என்ற முழுமை யான தெளிவற்ற தனது நியாயப்பாட்டினை 'UNHCR' அறிக்கை முழு மொட்டையான ஒரு வாக்கு மூலமாக முன்வைக்கும் போதும் அதனை எதிர்கொள்வது எமக்குக் கடின மான ஒரு விடயமாகவே உள்ளது. மகிந்த ராஜபக்ஷவுங்கூட, தான் ஒரு சட்டத்தரணி என்ற வகையில் இதற்கான பதிலையும் அவர் வழங்கியேயாக வேண்டும். ஒரு சில முழு மதி தினங்களுக்கு முன்னரே நாட்டின் எதிர்க் கட்சித் தலைவர் ஆகிவிடும் பேரவாவுடன் கூடிய முயற்சியிலீடுபட்டவர் என்ற ரீதியில் இலங்கை அரசுடன் அமெரிக்கா இணைந்த விதமாக முன்வைக்கப்பட்டிருக்கும் இந்த பிரேரணைக்கு மாற்றான தனது கருத்தினையாவது அவரால் முன்வைக்க முடியும், முன்வைக்க வேண்டும்!


'கலப்பு நீதிமன்றம்', விசேட ஆலோசனைக்குழு, உண்மைக்கான ஆணைக் குழு மற்றும் இரக்கம்- பரிவு- மனிதநேயம் போன்ற உணர்வுபூர்வ அடிப்படை ஆலோசனை சபை போன்ற ஒழுங்கமைப்புகள் மூலம் சர்வதேச சட்ட மீறல் குற்றச்சாட்டுக்களை கையாளும் செயற்பாடுகளை ஆரம்பிப்பது நீண்டதும் கடினமானதுமான ஓர் பணியாகும். இறுதியாக மேற்கூறிய நிறுவன அமைப்புக்களை சட்டரீதியாக ஏற்படுத்திக்கொள்வதற்கான பாராளுமன்ற ஒப்புதல் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். அத்துடன் அவசியமெனில் சர்வஜன வாக்கெடுப்பும் தேவைப்படலாம். நீதி வழங்கப்படுவதைக் கண்டு கொள்வதற்காக அந்தளவு நீண்டகாலம் சர்வதேச சமூகம் பொறுமையாகக் காத்திருக்குமா? வெறுப்புக்குரிய அந்த பயங்கர ங்கள் நிகழ்ந்து முடிந்து ஆறுவருடங்கள் ஏற்கனவே கழிந்துவிட்டது. "தாமதிக்கப் படும் நீதி, மறுக்கப்படும் நீதியே" என்று அவர்கள் கூற மாட்டார்களா?

இவ்விதம் ஏற்படுத்தப்பட்ட அமைப்புக்களால் குறிப்பிடத்தக்க விசேட குற்றச்சாட்டுக்கள் மீது குற்றவாளிக்குரிய நியாயமான தண்டனை சரியான விதத்தில் பெற்றுக்கொடுக்கப்படும் என்று கூறுவது கடினம். சேர்பியா, கம்போடியா போன்ற நாடுகள் சிலவற்றின் தலைவர்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தப்பட்டனர். சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நிறுவப்பட்ட றோமை சாசனத்தின் கீழ் கையெழுத்திடாத குறிப்பிடத்தக்க நாடுகளான அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா போன்றே இலங்கையும் இதில் கையொப்பமிடவில்லை. ஆகையால் சேர்பியா மற்றும் கம்போடியா போன்றவற்றுக்கு ஏற்பட்ட நிலைமை இலங்கைக்கு ஏற்படாது. இருப்பினும் பாதிக்கப்பட்டு உதவியற்ற நிலையில் தமது அன்பிற்குரிய உறவுகளை- பிள்ளைகளை இழந்த பெற்றோர், பெற்றோரை இழந்த பிள்ளைகள் மற்றும் தடுப்பு முகாம்களில் விடுதலையின்றி இருப்போர், புகலிடம்- பொருளாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகள் மறுக்கப்பட்டு அல்லற்பட்டுக்கொண்டிருக்கும் ஏதிலிகள் போன்றோருக்கு ஏதோ ஒரு வழியில் ஆறுதல் அளிக்கும் வகையிலான தீர்வொன்று கிட்டுமென எதிர்பார்க்கலாம்!

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபை தீர்வுக்கும் அப்பால் மற்றுமொரு தீர்வு உள்ளதா? எனும் தலைப்பில் சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தின் மொழியாக்கம்....

-தமிழில்.யோகர்-

# facebook கணிப்பு



அந்தப் பேருந்து நிறுத்தத்தில் நான் செல்ல வேண்டிய பேருந்துக்காக காத்திருந்தேன். நடுவீதியில் பேருந்தை நிறுத்தி இரு போக்குவரத்து அலுவலர்கள் பயணச் சீட்டு சரி பார்த்துக் கொண்டிருந்தனர். பின்னால் நிற்கும் வண்டிகள் ஓயாமல் ஒலி எழுப்பிக் கொண்டிருந்தன. இரைச்சல் தாளாமல் சாலை ஓரம் செல்லும் பொழுது தான் அந்த நிகழ்வை கவனித்தேன்.

அந்தப் பெண் 6"x6" பூந்துவலை கைக் குட்டையால் மூக்கை வினோதமாகப் பிழிந்து கொண்டிருந்தாள். சிறிது நேரம் பார்த்த பின்தான் புரிந்தது கணணிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து வழிந்து கொண்டிருந்தது. கைபேசியில் யாருடனோ பேசப் பேசப் குலுங்கி குலுங்கி அழுது கொண்டிருந்தாள். வயது சுமார் இருபதுக்குக் கீழ். மாநிறம். எதிர்கால நடுத்தரவர்க்கம்.

எனக்கு அந்த பெண் அழுவதைப பார்க்க மிகவும் கஷ்டமாக இருந்தது. சட்டென்று சென்று என்ன என்று கேடகவும் தயக்கமாகவும் இருந்தது. அந்த இடத்தை விட்டு அகலலாம் என்றால் நான் செல்ல வேண்டிய பேருந்தும் வரவில்லை. கைபேசியை எடுத்து ஓலா ஆப் தடவினேன். இணைப்பின் வேகத்திற்கு ஏற்ப தடுமாறி இருப்பிடம அறிந்து, செல்லும் இடம் கேட்டது. எவ்வளவு முயன்றும் அதற்குமேல் ஆப் நகரவில்லை. கடுப்பில் அடுத்து வந்த வண்டியில் ஏறிவிட்டேன்.

யாரவள்? யாரவள் ? ஏன் அழுகிறாள்? எதற்கு அழுகிறாள்? நடுச் சாலையில் ஒரு கன்னிப் பொண்ணு அழுகிறாளே. பொதுவாகவே ஆண்கள் மீது வந்திடாத கரிசனம். உதவி மனப்பான்மைக் குணம் பெண்கள் மீது வந்துவிடும் எனக்கு. ஆம் சராசரி ஆண்களை போலத்தானே நானும். பெண் கண்ணீர் சிந்தினாள் என்றால் பேயும் கொஞ்சம் மனமிரங்கும் அல்லவா. மனமிரங்கியது. நான் ஏறிய பேருந்திலிருந்து நானும் பாதி வழியிலே இறங்கினேன். அந்த பெண் நின்ற இடத்திற்கு சென்றேன்.

இன்னும் அதே இடத்தில் நின்று அழுது கொண்டிருந்தாள். அவளின் கையிலிருந்த கைக்குட்டையின் ஈரம் அதிகமாகியிருந்தது. அருகில் சென்று கேட்கலாமா என துணிந்தேன். ஆனால் தயங்கினேன். அவள் உன் வேலைய பார்த்து போடானனு சொல்லிட்டா. அசிங்கமா போயிடுமே. எண்ணினேன். இருந்தாலும் அவளை நெருங்கினேன்.

“எக்ஸ்கியூஸ் மீ...” என்றேன். நாசியிலிருந்த கைக்குட்டையை விலக்கி சிவந்த மூக்கோடு அவள் முகத்தை என் பக்கம் திருப்பினாள். என்ன என்பதுபோல அவளின் இரு புருவமும் கேள்விக்குறி வளைவு போட்டது. அவள் பேச தயாராக இல்லை என்பதாக உறுதியாகியது. இல்ல ரொம்ப நேரமா நின்னுட்டு இருக்கீங்க... அழுதுட்டும் இருக்கீங்க... ஏதாவது ப்ராப்ளமா? என்னோடு ஹெல்ப் ஏதாவது....?

ஏதாவது ஏடாகூடாமாக என்னை திட்டிவிடுவாளோ என்கிற பயம் கலந்த ஒரு கூச்சம் என்னை தொற்றிக்கொணடது. உண்மைதான். என்றாலும், அவளின் அந்த நிலைக்கு காரணம் என்ன என அறிந்திடும் ஆவலில் பயத்தை மீறி என் வார்த்தைகள் வெளியேறி வெற்றிபெற்றன.

கண்ணீர் சூழ்ந்த மைவிழியால் என்னை நோக்கினாள். சற்று உற்றும் பார்த்தாள். எதுவும் பேசவில்லை. அவளிடம் மௌனங்கள் மட்டும் என்னை வநதடைந்தன. பொதுவாகவே பெணகளின் மௌனத்திற்கு எப்படியான அர்த்தங்களை எடுத்துக்கொள்வது எனத்தெரியாமல்தானே பாதியளவு ஆண்கள் பித்துக்கொண்டு அலைகிறார்கள். நான் மட்டும் என்ன விதிவிலக்கா?

சின்னப் பொண்ணா வேற இருக்கா. காதல் கீதல்ன்னு எவனாவது ஏமாத்திட்டு விட்டுட்டு போயிட்டானா. ? இல்ல. காலேஜ் செமஸ்ட்டர்ல பெயில் ஆகிட்டதுனால இருக்குமோ..? அதுவும் இல்லைன்னா வீட்டுல அம்மா அப்பா ஏதாவது திட்டிவிட்டதுனால சின்ன வயசு ரோஷத்தில வீட்டைவிட்டு வெளியேறி என்ன பண்றதுன்னு தெரியாமா அழுகிறாளோ? அய்யோ என்னான்னு தெரியலைன்னா தல வெடிச்சிடும் போலிருக்கே...” நான் தான மனதுக்குள் புலம்பிக்கொண்டிருந்தேன்.

“எதுவா இருந்தாலும் சொல்லுங்க. நான் உங்களுக்கு உதவி செய்றேன். எனக்கும் டைம் ஆச்சு.. ஆபிஸ் போகணும்” என்று பிடிவாதமாக நானும் கேட்டேன்.

“உன்ன யாரு கூப்பிட்டா. வேலய பார்த்து போகவேண்டியதுதானே...” என கேட்டுவிடுவாளோ..? என் உள்ளுணர்வு சொல்லிக்கொண்டிருந்தது. ஏதோ எனக்குள்ளே நாம அவமானப்பட போறாமோ என எண்ணத் தோன்றியது.” சரி வெளியூர் தானே.. எவன் பார்க்கப்போறான்.? பாவம் ஒரு பொண்ணு தனியா அழுதட்டு இருக்கு. எவனும் கண்டுக்கமாட்டேங்கிறான். நம்ம வீட்டு பொண்ணா இருந்தா இப்படி விட்டுட்டு போவோமா.” என் மனமே என்னை சமாதானப் படுத்திக்கொண்டு மீண்டும் அந்த பெண்ணிடம் பேசத்தூண்டியது.

“அட என்னம்மா.. பிரச்சினை.. ? வாய தொறந்துதான் சொல்லுங்க.. ஏதுனா இருந்தா நான் உதவுறேன்னு தானே சொன்னேன்.” கொஞ்சம் கடுப்புடன் கேட்டுவிட்டேன்.

இம்முறை அவளிடம் சற்று மாற்றம் தெரிந்தது. இரண்டி அடி விலகி நின்ற என்னை நோக்கி.. ஒரு அடி காலடி வைத்து நகர்ந்து வந்தாள். அவளின் முகத்தில் ஏதோ ஒரு தெளிவு இருந்தது. கிட்ட நெருங்கினாள். கைக்குட்டையால் கடைசியாக தன் நாசியை குடைந்து அழுகையை நிறுத்த முயற்சி செய்து.. தழுதழுத்தக் குரலில்... “ அண்ணா...” “என்னது அண்ணாவா ? ஹம்ம்ம்ம் தமிழ் நாட்டுல கன்னிப்பொண்ணுங்க பாதி பேர் என்னை இப்படியே கூப்பிட்டா என்கதி? எப்போதான் கல்யாணமாகும்...? சரி... இவளோடு சேர்த்து மொத்தம் 1007 வது தங்கச்சி.. “ மனதுக்குள்ளே பாசமாக நொந்துக்கொண்டாலும்.. அந்த புது தங்கைக்கும் உதவும் ஆவல் உற்சாகமூட்டியது.

“ ம்ம் சொல்லும்மா தங்கச்சி”

“கிண்டில இருந்து 45பி பஸ்ல வந்தேன்னா... வரும்போது எவனோ என்னோடு பர்ஸ் பிக் பாக்கெட் அடிச்சிட்டான் அண்ணா. இப்போ செக்கிங் வந்துட்டுட்டாங்க. பஸ் பாஸ் என் பர்ஸல தான் இருந்துச்சி...”

“ஓ சரிம்மா.. இப்போ நான் என்ன பண்ணனும்...?”

“500 ரூபா இருந்தா... அவங்க கிட்ட கொடுத்திட்டு.. நான் அடுத்த பஸ்ல காலேஸ் போயிடுவேன்.”

“எந்த காலேஜ் மா ??”

“கியூன் மேரிஸ்”

அந்த தங்கை பேருந்து பரிசோதகரின் கெடுபிடியில் பயந்து தான் அவ்வாறு அழுதுகொண்டிருந்தாள் என ஊர்ஜிதமாகியது எனக்கு. ஆனாலும் அந்தப் பெண் கூட தோழிகள் யாருமில்லையா..? .’ கேள்விகள் என் மனத்துக்குள் தான் எழுந்தன. வெளியேறி அவளிடம் கேட்கத் தோன்றவில்லை.

“இந்தாம்மா 600 ரூபா இருக்கு... வச்சிக்கோ..” என்று சொல்லிவிட்டு அவளின் நன்றியை கூட நான் எதிர் பார்க்காமல்.. என் அலுவலகத்திற்குச் செல்ல அவசரப்பட்டு OLA App ஐ என் மொபைலில் இயக்கினேன். இம்முறை சரியாக இயங்கியது.

அந்த தங்கையான நங்கையும் பரிசோதகரிடம் அபாரதத்தை செலுத் திவிட்டு.....மீண்டும் என்னிடம் வந்தாள்.

“ தேங்க்ஸ் அண்ணா..ரொம்ப தேங்கஸ்.. யாருகிட்ட கேட்பதுன்னு தெரியாமத்தான். ஊர்ல இருக்கும் என் அம்மாகிட்ட சொல்லி அழுதிட்டு இருந்தேன். இன்னிக்கு காலேஜ் லீவுனால.. ப்ரெண்ட்ஸ் கூட வரல. அதனால தான் இப்படி ஆச்சி..”

“ஓ.. காலேஜ் லீவா ?” என கேட்டுவிட்டு...

என் மனதிற்குள் “அப்புறம் என்னாத்துக்கு வந்தீயாம்... லவர் எவனையாவது மீட் பண்ணவா ? “ நானே பேசிக்கொண்டது அவளுக்கு கேட்டுவிட்டதோ என்னவோ தெரியவில்லை.

இன்னிக்கு காலேஜ்ல அநாதை குழந்தைகளுக்கு லயன்ஸ் கிளப் மூலமா ஒரு ஸ்பெஷல் டியூசன் எடுக்கிறாங்கன்னா. நானும்...போயி சொல்லிக்கொடுப்பேன். டைம் ஆச்சின்னா... உங்க நம்பர் கொடுங்க ... நான் அப்புறமா பேசுறேன். ”

என் கன்னத்தில் ஓங்கி யாரோ அறைந்தது போலத்தோன்றியது. அடச் சே... கொஞ்ச நேரத்தில ஒரு பொண்ணை பற்றி எப்படி எப்படிலாம் தப்பு தப்பா கணித்துவிடுறோம்... ஆண்களுக்கே உள்ள புத்தியா இது... ? இல்ல என்னோட புத்தியா...? இல்ல இந்த சமுதாயத்தில பெண்கள் மீது வைக்கப்படும் பார்வையின் பாதிப்பா ? இல்லன்னா என்னோடு குணக் கட்டமைப்பு பிழையா ? மனம் கூனி குறுகியது.

“எக்ஸ்கியூஸ் மீ அண்ணா... டைம ஆச்சி . கிளாஸ் ஆரம்பிச்சிடுவாங்க.. நான் கிளம்புறேன்...”


“வெயிட் மா... கார்ல போகலாம்... நான் உன்னை காலேஜ்ல டிராப் பண்ணிடுறேன்...” தேங்கஸ் அண்ணா...” என்றாள் அந்த தங்கத் தங்கை.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 514

ராகுலன் பாலா



நாகலிங்கம் லிங்கம்



கௌதம் கார்த்திக்





ஜெயகீர்த்தன்




கீர்த்தி




குனசேகரன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 02

## சிந்தனைக்கு...

எமது பிரதேசத்தில் இயற்கையாக மருந்து தெளிக்காது வளரக்கூடிய ஆரோக்கியமான உணவுப் பயிர்களுக்கு தவறான அவப்பெயர்களை சூட்டிவிட்டு செயற்கையான இரசாயனப்பொருட்கள் சேர்க்கப்பட்டு பொதிசெய்யப்பட்ட பல பொருட்கள் விளம்பரங்களுடன் விற்பனையாகிக் கொண்டிருப்பது வேதனையான விடயம். "அகத்தி மரத்தைவீட்டில் வளர்த்தல் கூடாது", "தவசிமுருங்கை சாப்பிட்டால் புற்றுநோய் உண்டாகும்", "சிறுகுறிஞ்சா உட்கொண்டால் சிறுநீரக கோளாறு உண்டாகும்". இவ்வாறாக பலகட்டுக்கதைகள் நம்மத்தியில் பரப்பப்பட்வருவதுடன் அதை நம்பி பலர் செயற்கை உணவுகளின் காலடியில் சரணாகதி அடைந்துவருகிறார்கள். இதற்கு அடிப்படை காரணம் என்ன?

சி. சிவன்சுதன்
பொதுமருத்துவ நிபுணர்.

## உங்கள் உடல் நிறை எவ்வளவாக இருக்க வேண்டும்?

உடற்பருமனானது எமது உடல் ஆரோக்கியத்தை பாதிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்றாகும். இது உடல் ஆரோக்கியத்தை மட்டுமல்லாது, உள ஆரோக்கியம் மற்றும் சமூக ஆரோக்கியத்தையும் பாதிக்கிறது. இதனால் உடலில் பல்வேறுபட்ட நோய்கள் உண்டாகின்றன.

இதனால் நீரிழிவு நோய், உயர்குருதியமுக்கம், மூட்டு வாதம், நித்திரைக்குழப்பம், பித்தப்பையில்கற்கள் உருவாதல், நுரையீரல் நோய்கள், பாரிசவாதம், புற்றுநோய்கள் போன்றன ஏற்படுகின்றன.

உடற்பருமனை அளவிட சிறந்த அளவுகோல் உடல் திணிவு சுட்டெண் ஆகும்.

**நான் உடல் திணிவு சுட்டெண்ணை எவ்வாறு அளப்பது?**

- உங்கள் நிறையை மீற்றர் அலகில் அளவுங்கள்.
- உங்கள் உடல் நிறையை கிலோகிராம் அலகில் கணியுங்கள்.
- பின்பு சமன்பாட்டில் போட்டு உங்கள் உடல் திணிவு சுட்டியை கணியுங்கள்.

$$\text{உடல் திணிவு சுட்டி} = \frac{\text{நிறை}}{(\text{உயரம்})^2}$$

**எனது நிறை 62 kg, உயரம் 163 cm, எனது BMI எவ்வளவு?**

$$BMI = \frac{62\,kg}{(1.63m)^2} = 23.39 kg\, m^{-2}$$

**எனது உடல் திணிவு சுட்டியை எந்த வரையறைக்குள் வைத்திருக்க வேண்டும்?**

1. குறைந்த அளவு- 18.5 இலும் குறைவு
2. போதுமான அளவு 18.5-23
3. கூடிய எடை 23-27.5
4. மிக கூடிய எடை 27.5 க்கு மேல்

நான் இப்போது பருமனான உடலை கொண்டுள்ளேன் . எனது உயரம் 170 cm. நான் அடைய வேண்டிய உடல் நிறை எவ்வளவு


$$23 = \frac{W}{(1.7m)^2} \quad W = 23 \times 1.7^2 = 66.47\,kg$$

**இதை எல்லோருக்கும் பயன்படுத்தலாமா?**

இல்லை. வளரும் குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார், உடலில் தசைத் திணிவு கூடியவர்கள் (விளையாட்டு வீரர்கள்) உபயோகிக்க முடியாது.

**BMI மட்டும் குறிப்பிட்ட வரையறைக்குள் இருந்தால் போதுமா?**

இல்லை. உங்கள் இடுப்பு சுற்றளவும் குறிப்பிட்ட வரையறைக்குள் பேணப்பட வேண்டும். சிலருக்கு உடல் மெலிவு காரணமாக BMI குறைவாக காணப்படும். ஆனால் அவர்களின் வயிற்றுப் பகுதியில் கூடிய அளவு கொழுப்பு படிவு காணப்படலாம்.




Dr. க.சிவசுகந்தன்

## கோபத்தை கட்டுப்படுத்துவது எப்படி?

எல்லோருக்குமே சிலவேளைகளில் கோபம் ஏற்படுவதுண்டு. இக்கோபமானது உள நிலையை பாதிக்கின்ற அதேவேளை உடல் நிலைமையும் பாதிக்கிறது. இதனால் கோபத்தை கட்டுப்படுத்துவதென்பது மிக முக்கியமான தொன்றாகும்.

**நான் கோபம் வந்தால் என்ன செய்யலாம்?**

1. நீங்கள் கோபமடைவதை உணர்ந்தால் சிறிதளவு ஓய்வு எடுத்துக்கொள்ளலாம். நீங்கள் என்ன வேலை செய்தாலும் அதை நிறுத்தி விட்டு கோபமூட்டும் சந்தர்ப்பத்திலிருந்து சிறிது விலகுங்கள். உதாரணமாக வேலை செய்யுமிடத்தில் கோபம் ஏற்படின், உடனடியாக அவ்விடத்தை விட்டுவெளியேறி பின் கோபம் தணிந்தபின் மீண்டும் உள்நுழையவும்.

2. நன்றாக மூச்சை இழுத்து விடுங்கள்.

அதாவது மனதில் மூன்று விநாடிகளை எண்ணிக் கொண்டு மூச்சை உள்ளிழுக்கவும். அவ்வாறு மூன்று விநாடிகளை எண்ணிக்கொண்டு மூச்சை பிடித்து வைத்திருங்கள். அதேபோன்று மூச்சை வெளிவிடும்போதும் மூன்று விநாடிகளை எண்ணுங்கள். இவ்வாறு செய்யும் போது எண்ணுவதில்தான் உங்கள் முழுக்கவனமும் இருக்க வேண்டும். இதனால் கோபம் குறையும்.

3. உங்கள் மனதை அமைதியடைய செய்த பின்னரே கோபத்தை காட்டுங்கள். இதனால் உங்கள் கோபத்தின் வீறு குறையும் அதேவேளை மற்றவர்க்கு கோபத்தால் ஏற்படும் பாதிப்பும் குறையும்.

4.கோபத்தைகாட்ட முன் ஒருமுறை யோசியுங்கள். அத்துடன் கோபத்தை வெளிக்காட்டக் கூடிய ஆரோக்கியமான வேறு வழிகளையும் யோசியுங்கள்

5. உங்களுக்குநீங்களே தைரியமூட்டல்- அதாவது யாரும் உங்களுக்கு பேசினால் அவருக்கு ஏதோ பிரச்சினை இருப்பதால் தான் உங்களுடன் இவ்வாறு பேசுகிறார் என்று நினைத்தால் உங்கள் கோபம் குறைந்துவிடும்.

6. நீங்கள் உங்கள் நெருங்கிய நண்பரிடமிருந்து உதவியை பெறலாம்.

**நான் இனிமேலும் கோபம் வருவதை எவ்வாறு குறைத்துக்கொள்ளலாம்.?**

1. தினமும் ஒழுங்காக உடற்பயிற்சி செய்தல் - இதனால் உடலில் உருவாகும் சில பதார்த்தங்கள் உங்களுக்கு கோபம் ஏற்படும் தன்மையை குறைக்கும்.

2. இதற்காக தினசரி பதிவேடு ஒன்றை நீங்கள் பாவிக்கலாம். அதாவது தினமும் நீங்கள் கோபப்படும் சந்தர்ப்பத்தை விளக்கமாக எழுதுங்கள்- கோபமூட்டும் சந்தர்ப்பம், நீங்கள் நடந்துகொண்ட விதம், எவ்வாறு இதை திறம்படகையாண்டிருக்கக் கூடும் என்பது பற்றியும். இவற்றை மீண்டும் மீண்டும் வாசிக்கும் போது உங்களில் ஏற்படும் மாற்றத்தை நீங்களே உணர்வீர்கள்.

3. இவ்வாறான பிரச்சினைகள் பற்றி கலந்துரையாட விசேட நிபுணர்கள் உள்ளனர். அவர்களிடம் உங்கள் பிரச்சினைகளை கூறி அறிவுரை பெறலாம்.

Dr. க.சிவசுகந்தன்

## எம்மை மாற்றிக்கொள்ள...

மனஅமைதியும், சுற்றாடல் அமைதியும் சுகாதாரத்திற்கு இன்றியமையாதனவாகும். நாளாந்தம் எம்மில் பலர் சில மணி நேரங்களையாவது போக்குவரத்தின் போது செலவிடுகிறோம். துர்அதிர்ஷ்டவசமாக எம்மில் பலருக்கு கோண் ஒலி எழுப்பாமல் வாகனம் செலுத்தத் தெரிவதில்லை. வாகனம் ஓடுவதில் தன்னம்பிக்கை அற்றபதற்றகுணம் உள்ளவர்களே பயம் காரணமாக கோண் ஒலி எழுப்பியவாறு செல்கின்றனர்.

இந்த ஒலி சுற்றாடலை மாசாக்குகிறது என்பதோ தெருவில் செல்பவர்களையும் தெருவோரங்களில் இருப்பவர்களையும் இது நோயாளி ஆக்குகிறது என்பதோ பலருக்கு தெரியாது. வாகனங்கள் செலுத்தும் பொழுது அநாவசியமாக கோண் ஒலி எழுப்பும் பழக்கத்தை எம்மால் மாற்றிக் கொள்ளமுடியுமா?

அகத்தியா

## உங்கள் கருத்து

ஒருவர் நோயுற்றிருக்கும் பொழுது உறவினர்களும் நண்பர்களும் உடனடியாக அவரைச் சென்று பார்ப்பது தமது தலையாய கடமை என்று எண்ணி வைத்தியசாலைகளுக்கும் வீடுகளுக்கும் படை எடுக்கின்றனர். இது நோயுற்றவர்களுக்கும் அவரை பராமரிப்பவர்களுக்கும் பல இடையூறுகளை ஏற்படுத்தலாம். இது தொடர்பாக நோயுற்றவர்களின் உண்மையான அபிப்பிராயத்தை தெரிந்துகொள்ள விரும்புகின்றோம்.

நீங்கள் நோயிற்றிருக்கும் பொழுது உறவினர்களும் நண்பர்களும் உங்களை

**A.** நோயின் தாக்கம் குறையும் முன்னரே உடனடியாக உங்களைவந்து பார்ப்பதை விரும்புகிறீர்களா?
**B.** நோயின் தாக்கம் குறைவடைந்து நீங்கள் சௌகரியமானநிலைக்கு வந்தபின் உங்களைவந்து பார்ப்பதை விரும்புகிறீர்களா?
**C.** நோய்நிலை உங்களின் தனிப்பட்ட முறையிலான உணர்வுபூர்வமான நிலை எனக் கருதி உங்களை நோயாளி என்று கருதாது அதுபற்றி பேசாது விடுவதை விரும்புகிறீர்களா?
**D.** உங்களைசந்திக்கும் சந்தர்ப்பத்தில் சுகம்விசாரித்து கொள்வது போதுமானது எனக் கருதுகிறீர்களா?

A,B,C,D என்பவற்றில் உங்கள் தெரிவை 0782075424 என்ற இலக்கத்திற்கு SMS செய்து விடுங்கள்.

## கடந்தவாரகேள்விக்கான உங்கள் பதில்கள்

A) [illegible]
B) [illegible]
C) [illegible]